விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

Dishtv
பழைய Dishtv
ரிஸீவர்க்கு பதிலாக
புதிய ரிஸீவர்
700/= மட்டுமே
SATS-TECH
சாட்ஸ் ரெக் இன்ஜினியர்ஸ்
இல. 56/15 ஸ்ரான்லி வீதி ஒழுங்கை,
(பழைய தபால் கந்தோர் வீதி,
யாழ்ப்பாணம்.)
Phone: 021 222 8812, Mob:- 076 886 1160
(C-4787)

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2049 மார்கழி 09 திங்கட்கிழமை (24.12.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 005

# வடக்கில் வெள்ள இடரால்

## 16, 872 குடும்பங்களைச் சேர்ந்த 54, 819 பேர் பாதிப்பு 11, 229 பேர் இடப்பெயர்வு





(யாழ்ப்பாணம்)

வடக்கில் கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ள இடரால் 16 ஆயிரத்து 872 குடும்பங்களைச் சேர்ந்த 54 ஆயிரத்து 819 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது. (23ஆம் பக்கம் பார்க்க)

## அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் இன்று கிளிநொச்சி விஜயம்

(கொழும்பு)

வடக்கில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தையடுத்து, இன்று கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொள்கிறார் பொது நிர்வாகம், இடர் முகாமைத்துவ அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார. இன்று கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு 23

## வடமராட்சி வதிரியில் கத்தியுடன் நடமாடிய மூவர் பொலிஸாரால் கைது

(கரணவாய்)

வடமராட்சி வதிரிப் பகுதியில் கத்தியுடன் நடமாடிய மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு நெல்லியடி பொலிஸார் வதிரி சந்திப் பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த 23

## கடல் அலையில் சிக்குண்டு இளம் குடும்பஸ்தர் பலி



### வடமராட்சி கிழக்கில் சம்பவம்

(கரணவாய்)

கடல் அலையில் சிக்குண்ட இளம் குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார். நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் வடமராட்சி கிழக்கு, தாளையடியில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் அதே இடத்தை சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான அருளானந்தம் ஜோன்சன் 24

## ஜனாதிபதியை கொல்ல சதித்திட்டம்

## சர்வதேச பொலிஸிடம் விசாரணையை ஒப்படைக்க மைத்திரி தீர்மானம்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் ராஜபக்ஷக்கள் மீதான கொலைச் சதி விசாரணைகளை குற்றவியல் விசாரணைகளில் நிபுணத்துவம் பெற்ற ஸ்கொட்லாண்ட் யார்ட் பொலிஸாரிடம் ஒப்படைக்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் என்று அறியமுடிகிறது. இதுதொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் ஜனாதிபதி ஆலோசித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, கூட்டு அரசின் ஆட்சியில் சட்டம் ஒழுங்கு 23

## நிவாரணப் பொருட்களை வழங்க உதவுங்கள்

### 'ஆறுதல்' பணிப்பாளர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வன்னிப்பிரதேசத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணப் பொருட்களை நேரில் சென்று வழங்க ஆறுதல் நிறுவனம் முன்வந்துள்ளதாக அந் நிறுவனத்தின் பணிப்பாளரும் முன்பள்ளி ஆசிரியர் தொழிற்சங்கத்தின் போசகருமான சுந்தரம் டிவகலாலா அறிவித்துள்ளார்.

வன்னிப்பிரதேசத்தில் ஏற்பட்ட கடும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண பொருட்களை வழங்குகின்ற 24

## இந்தோனேசியாவில் சுனாமி

### 222 பேர் உயிரிழப்பு ; 843 பேர் படுகாயம்



(விரிவான செய்தி 12ஆம் பக்கம்)

## வடக்கில் கடும் வெள்ளம் மீட்பு பணிக்காக ஹெலிகொப்டர் அனுப்பி வைப்பு

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு மற்றும் இரணைமடு பகுதிகளில் வெள்ளத்தில் சிக்குண்டவர்களை 24

## மின்னல் தாக்கத்திலிருந்து பாதுகாப்பாக இருங்கள்

### வடக்கு மக்களுக்கு இடர் முகாமைத்துவ நிலையம் எச்சரிக்கை

(கொழும்பு)

வடக்கு மாகாணத்தில் நீடிக்கும் சீரற்ற காலநிலை காரணமாக மின்னல் தாக்கத்திலிருந்து பாதுகாப்பாக இருக்குமாறு இடர் முகாமைத்துவ மத்திய நிலை 23

## கூட்டமைப்பின் செயற்பாடு ஐக்கியத்துக்கு வழிவகுத்துள்ளன

### லஷ்மன் கிரியெல்ல

(கொழும்பு)

அரசமைப்பை பாதுகாப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் செயற்பட்ட விதமானது 23

## ஜனாதிபதி மைத்திரியின் உத்தரவின் பேரில் வடக்கில் நிவாரணப்பணிகள் முன்னெடுப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பணிப்புரைக்கமைய வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரேயின் விசேட வழிகாட்டலின் கீழ் வட மாகாணத்திற்கான நிவாரண உதவிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.


இதற்கமைய வட மாகாணத்தின் கிளிநொச்சி, முல்லைத்தீவு பிரதேசங்களில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கும் நடவடிக்கைகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை முதல் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன்படி, கிளிநொச்சி பிரதேசத்தில் சுமார் 1,394 குடும்பங்களைச் சேர்ந்த 4,649 பேர் இடம்பெயர்ந்துள்ளனர். இவர்களுக்கான தங்குமிட வசதிகள் 24

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்

பிறப்பு 1945 . 12 . 25



இறப்பு 2018 . 12 . 21

## நாகலிங்கம் பாலசுப்பிரமணியம்

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் பாலசுப்பிரமணியம் கடந்த (21.12.2018) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சிவஞானசுந்தரி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - தங்கம்மா தம்பதியினரின் மகனும், காலஞ்சென்றவர்களான நடராசா - இலட்சுமிப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும், கிருபாலன், கிருபாலினி, மீராஜி ஆகியோரின் அன்புத் தந்தையும், ரஜீவ் அவர்களின் அன்பு மாமனாரும், சிறிஸ்சின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.12.2018) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நாரந்தனை வடக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மடம் ஒழுங்கை,
திருநெல்வேலி வடக்கு,
திருநெல்வேலி

தகவல் :
பா.சிவஞானசுந்தரி
(மனைவி)

(6792)

# மரண அறிவித்தல்

பிறப்பு 1948 . 04 . 11



இறப்பு 2018 . 12 . 23

## சுந்தரலிங்கம் கனகரத்தினம்

வெள்ளச்சிவளவு கம்பர்மலை, வல்வெட்டித்துறையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரலிங்கம் கனகரத்தினம் அவர்கள் நேற்று (23.12.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - இரத்தினம் தம்பதியினரின் அன்பு மகளும், சுந்தரலிங்கம் அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற சரசரத்தினம், பவளரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், குலேந்திரலிங்கம் அவர்களின் மைத்துனியும், புவிதா அவர்களின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2018) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஊரிக்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வெள்ளச்சிவளவு,
கம்பர்மலை,
வல்வெட்டித்துறை.

தகவல் :
குடும்பத்தினர்
077 543 7470

(சி-4815)

# மரண அறிவித்தல்



## அமரர் முருகேசு செல்வராசா (மெம்பர்)

### (வலி.கிழக்கு பிரதேச சபை முன்னாள் உறுப்பினர்)

கோப்பாய் தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு செல்வராசா நேற்று முன்தினம் (22.12.2018) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - அமுதவல்லியம்மா தம்பதியினரின் மூத்த புதல்வரும், பத்மசுலோசனாதேவி (தேவி) அவர்களின் அன்புக் கணவரும், குலசிங்கம் (அமரர்), ஜெயராணி, புஸ்பராசா (அமரர்), வசந்தபூங்கோதை, முருகேசு (அமரர்), விநாயகமூர்த்தி (கற்கண்டு), சாந்தசொரூபன், இராஜேஸ்வரி (சுகுணா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், தேவகுமார், செந்தில்குமார் (கோப்பாய் ஆசிரிய கலாசாலை உத்தியோகத்தர்), தர்சினி (சோபா), சுதாயினி (பிரான்ஸ்), லதீப்குமார் (தம்பன்), புனிதகுமார், பிரியதர்சினி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிலோமலதா, விமலினி, பிரதாப் (மக்கள் வங்கி கோப்பாய்), ஜெயக்குமார் (பிரான்ஸ்), அம்பிகை, வரதன் (பிரான்ஸ்), ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அகலிகை, எழிலிசை, கவியரசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (26.12.2018) புதன்கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இருபாலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கோண்டாவில் வீதி,
ஆசிரிய கலாசாலை அருகில்,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

தகவல் :
குடும்பத்தினர்

(சி-4809)

# கனமழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியான நிவாரணங்கள் வழங்க ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு)

**கன மழை, வெள்ளப் பெருக்கு காரணமாக பாதிக்கப்பட்டுள்ள முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரணங்களை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உரிய துறைகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.**



வெள்ள அனர்த்தம் முழுமையாக நீங்கும் வரை பாதிக்கப்பட்ட பிரதேச மக்களுக்கு தேவையான உதவிகளை தாமதமின்றி வழங்குமாறும் அதற்கான நிதி ஒதுக்கீடுகளை உடனடியாக மாவட்ட செயலாளர்களுக்கு வழங்குமாறும் அமைச்சரவை செயலாளர்கள் உள்ளிட்ட துறைசார் பிரிவுகளுக்கு பணிப்புரை விடுத்துள்ள ஜனாதிபதி வட மாகாண ஆளுநர், மாவட்ட செயலாளர்கள், இராணுவத் தளபதி மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்துடன் ஒன்றிணைந்து நிவாரண வேலைத்திட்டங்களை துரிதமாக செயற்படுத்துமாறும் தெரிவித்துள்ளார்.

வட மாகாணத்தில் பெய்த கனமழை காரணமாக முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்டங்களில் வெள்ள அனர்த்தம் ஏற்பட்டுள்ளதுடன், பெருக்கெடுத்துள்ள இரணைமடு உள்ளிட்ட சில நீர்த்தேக்கங்களின் வான் கதவுகளை திறப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வெள்ள அனர்த்தம் காரணமாக முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்ட மக்கள் பல்வேறு இன்னலுக்கு முகங்கொடுத்துள்ளதுடன், அம்மாவட்டங்களில் செயற்படும் 40 பாதுகாப்பு முகாம்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கான ஏற்பாடுகளை அனர்த்த முகாமைத்துவ நிலையம் மேற்கொண்டுள்ளது எனவும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# நாடாளுமன்ற உறுப்பினர்களை கொள்வனவு செய்கிறார் மகிந்த

## சிறிநேசன் எம்.பி.விசனம்



(ஜயங்கேணி)

தனது ஆட்சியை மீண்டும் உருவாக்க பதவிகளையும், பணத்தையும் வழங்கி நாடாளுமன்ற உறுப்பினர்களை எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ, கொள்வனவு செய்வதாக தமிழ் தேசிய கூட்டமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

அத்தோடு தனது ஆட்சியில் தமிழ் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றியிருந்தால் அவருக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கியிருக்குமென அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் தெரிவித்துள்ளார்.

கம்பெரலிய திட்டத்தின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசனினால் முன்மொழியப்பட்ட மட்டக்களப்பு ஜயங்கேணி பாடசாலை வீதி செப்பனிடும் பணி நேற்று ஞாயிற்றுக் கிழமை ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், 'கடந்த காலத்தில் எமது உறவுகள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டமை, சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டமை, பல யுவதிகள் விதவையாக்கப்பட்டமை போன்ற செயற்பாடுகள் எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்திலேயே இடம்பெற்றன.

அவரை நாங்கள் எவ்வாறு ஆதரிப்பது? சூழ்ச்சி செய்து ஆட்சியைக் கைப்பற்றாமல், ஜனநாயக ரீதியில் ஆட்சியைக் கைப்பற்றியிருந்தால் அவருக்கு ஆதரவு வழங்கியிருப்போம். எமக்கு பல வாக்குறுதிகளை வழங்கி விட்டு யுத்தத்தில் வெற்றி பெற்றதும் எல்லாவற்றையும் வென்றுவிட்டோம் என்ற இறுமாப்போடு நடந்து கொண்டதன் காரணமாக அவரை நம்பமுடியாத சூழல் உருவாகியுள்ளது.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பைப் பொறுத்தவரை பணத்துக்காகவோ பதவிகளுக்காகவோ அடிபணிய மாட்டார்கள் என்ற அடிப்படையில் நாங்கள் ஒன்றாக ஜனநாயகத்தின் பக்கம் நின்றோம் ஆனால் ஒருவர் மாத்திரம் தவறிவிட்டார் அது அவரது பக்கமாக சிந்திக்க வேண்டிய விடயம்.

வடக்கு- கிழக்கு மாகாணங்களில் அபிவிருத்தி என்பதை சிறிதளவும் அனுபவிக்காத பல பிரதேசங்கள் காணப்படுகின்றன. எமது பிரதேசத்தின் அபிவிருத்திக்கு அரசாங்கம் கூடுதலான முக்கியத்துவம்வழங்க வேண்டும்' என்றும் அவர் இதன் போது வலியுறுத்தினார். (இ-7)

# அபாய வெளியேற்றப்பாதை அபாயக் கட்டத்தில்



(பொற்பதி)

உடுத்துறை அபாய வெளியேற்றப்பாதை பாரியளவில் சேதமடைந்துள்ளது. கடந்த இரண்டு தினங்களாக பெய்த கனமழை காரணமாக வடமராட்சிக்கிழக்கு பகுதியெங்கும் பெரு வெள்ளம் ஏற்பட்டது. இதன் காரணமாக வீதிகளை ஊடறுத்து தாழ் நிலங்களுக்கு வெள்ளம் பாய்ந்த வண்ணம் காணப்படுகின்றது.

இந்நிலையில் ஆற்றின் இடையே களிமண்ணாலும் கிரவலாலும் அமைக்கப்பட்ட அபாய வெளியேற்றப் பாதையானது வெள்ளத்தால் பாரியளவில் சேதமடைந்துள்ளது.

அப்பாதையெங்கும் பாரிய குழிகள் ஏற்பட்டுள்ளன. இந்தப் பாதை அமைக்கப்பட்டதன் பிரதான நோக்கம் வடமராட்சிக்கிழக்கின் கிழக்கு கரையோரக் கிராம மக்கள் சுனாமி போன்ற கடல் அனர்த்தங்களின் போது பாதுகாப்பாக இருப்பிடங்களை விட்டு வெளியேறுவதற்கேயாகும்.

ஆனால் தற்போது ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதை மிகவும் மோசமாக சேதமடைந்துள்ளது. (இ-64)

## மணல்,மரம் கடத்திய குற்றச்சாட்டில்

# ஐந்து உழவியந்திரங்கள், ஒரு பாரவூர்தி சாவகச்சேரி பொலிஸாரால் கைப்பற்றல்!



(சாவகச்சேரி)

கடந்த நான்கு நாட்களுக்குள் மணல் மற்றும் மரக் கடத்தல்களில் ஈடுபட்ட ஐந்து உழவியந்திரங்கள் மற்றும் ஒரு பாரவூர்தி என்பவற்றை சாவகச்சேரி பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

தனங்கிளப்பு பகுதியில் இருந்து நுணாவிலுக்கு நான்கு உழவியந் திரங்களில் வெள்ள மணல் சட்டவிரோதமாக கடத்தப்படுவதாக எமக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து உடனடியாக செயற்பட்ட நாம் குறித்த பகுதிக்கு சென்றோம். அப்போது எம்மைக் கண்டு கடத்தல்காரர்கள் உழவியந்திரங்களை வீதியில் கைவிட்டு தப்பிச் சென்றனர்.

அதையடுத்து நான்கு உழவியந்திரங்களையும் கைப்பற்றி பொலிஸ் நிலையம் கொண்டு வந்ததாகவும் சாவகச்சேரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.எம்.கே.கோணார தெரிவித்தார்.

அதுமட்டுமன்றி அனுமதிப்பத்திரம் இன்றி பாரவூர்தி மற்றும் உழவியந்திரங்களில் கடத்தப்பட்ட மரக்குற்றிகளையும் கைப்பற்றியுள்ளதாக தெரிவித்தார்.

இக்கடத்தல்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுத்து நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் சாவகச்சேரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.எம்.கே. கோணார தெரிவித்துள்ளார். (இ-89)

# தமிழ், முஸ்லிம் மக்களை இணைத்து ஊழல் எதிர்ப்புக் கூட்டணியை உருவாக்க பொதுபலசேனா திட்டம்

## அசாத்சாலி ஆதரவு

(கொழும்பு)

எதிர்காலத்தில் தமிழ், முஸ்லிம் மக்களை இணைத்துக்கொண்டு தேசிய ஐக்கியம் மற்றும் ஊழல் எதிர்ப்பு தொடர்பான பரந்துபட்ட கூட்டணியை உருவாக்க போவதாக பொதுபல சேனா அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் டிலந்த விதானகே தெரிவித்துள்ளார்.

வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரின் நலன் அறிய நேற்று முன்தினம் சிறைச்சாலைக்கு சென்று திரும்பும் போது ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை டிலந்த விதானகேயுடன் தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலியும் சிறைச்சாலைக்கு சென்று ஞானசார தேரரை சந்தித்துள்ளார்.

எதிர்காலத்தில் எந்த பிரச்சினையாக இருந்தாலும் பொதுபலசேனா அமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்தி ஒத்துழைப்புடன் செயற்பட எதிர்பார்த்துள்ளதாக அசாத் சாலி இதன்போது தெரிவித்துள்ளார்.

சிவில் சமூகம், முஸ்லிம் அமைப்புக்கள் இணைந்து, ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா தலைமையில் ஆறு கூட்டங்களை நடத்தி, நாங்கள் புரிந்துணர்வை ஏற்படுத்திக்கொண்டோம்.

இதில் பெரிய பலன் கிடைத்தது. குறிப்பாக கிங்தொட்டையில் நடந்த சம்பவத்தின் போது, பௌத்த பிக்குமார் சென்று அந்த பிரச்சினையை தீர்த்து வைத்தனர்.

மியன்மார் அகதிகள் வந்திருந்த நேரத்தில் பெரிய பிரச்சினை ஏற்பட்டு மோதலான நிலைமை உருவானது. அப்போது டிலந்தவுடன் பேசி, ஞானசார தேரரையும் அழைத்துச் சென்று பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வந்தோம்.

அதேபோல், திகனவில் ஏற்பட்ட சம்பவத்தின் போது ஞானசார தேரர், மரண வீட்டுக்குச் சென்று முடிந்தளவு பிரச்சினையை சமரசம் செய்து வைத்தார்.

இவ்வாறு இணக்கப்பாட்டுக்கு வந்து, சிங்கள, முஸ்லிம் மக்கள் இடையில், எந்த பிரச்சினையும், மோதலும் ஏற்படாத சூழலை நாங்கள் ஏற்படுத்தி வந்த நேரத்திலேயே ஞானசார தேரருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது எனவும் அசாத் சாலி தெரிவித்தார். (இ-7)


# BA புதிய பாடத்திட்டம்

## பேராதனை பல்கலைக்கழகம் (வெளிவாரி)

- மேற்படி பல்கலைக்கழகத்தினால் புதிய ஆண்டிற்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
- A/L இல் கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம், தொழில்நுட்பம் ஆகிய பிரிவுகளில் மூன்று பாடம் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பிக்க தகுதியுடையவர் ஆவர்.
- A/L 2017 பரீட்சை எடுத்தவர்களும் இதற்கு முன்னர் பரீட்சை எடுத்தவர்களும் விண்ணப்பிக்க முடியும்.
- பதிவு முடிவு திகதி 28.12.2018 வரை நீடிக்கப்பட்டுள்ளது.
- பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.
- இக்கற்கை நெறியின் கால எல்லை மூன்று ஆண்டுகளாகும் . வருடம் ஒரு பரீட்சை நடைபெறும்.

விபரங்களுக்கு:- S.அருள்நங்கை (நிர்வாகி)

021 222 8148
077 314 4762
077 846 9721

புதிய உயர் கல்லூரி,
ஆரிய குளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

(C-4801)

# ஆஸி., அணியில் 7 வயதுச் சிறுவன்



மெல்போர்ன் டெஸ்ட் போட்டிக்கான அவுஸ்திரேலிய அணியில் ஏழு வயது சுழல் பந்துவீச்சாளர் ஆர்ச்சி சில்லர் சேர்க்கப்பட்டுள்ளார். அணித் தலைவர் ரிம் பெய்னுடன் சேர்ந்து இணைத் தலைவராக செயறபட உள்ளார்.

இந்தியா - அவுஸ்திரேலிய அணிகள் மோதும் மூன்றாவது டெஸ்ட் போட்டி வரும் நாளை மறுதினம் 26ஆம் திகதி மெல்போர்னில் ஆரம்பமாகிறது. இதற்கான அவுஸ்திரேலிய அணியில் 15ஆவது கௌரவ வீரராக ஆர்ச்சி சில்லர் இடம்பெற்றுள்ளார்.

மூன்று மாத குழந்தையாக இருக்கும் போதே ஆர்ச்சியின் இருதய வால்வில் பாதிப்பு இருப்பதை டாக்டர்கள் கண்டுபிடித்தனர். இதுவரை 13 முறை 'சத்திரசிகிச்சை' செய்துள்ளார். உடல்நிலை காரணமாக பள்ளிக்கு செல்ல முடியவில்லை. நேரம் கிடைக்கும் போது கிரிக்கெட் மட்டும் விளையாடுவார். ஷேன் வோர்ன் மாதிரி 'லெக் ஸ்பின்னராக' அசத்துவாராம்.

இந்திய அணித் தலைவர் ஹோலியை அவுட்டாக்குவது இவரது இலக்கு.இப்படி கிரிக்கெட் மோகம் கொண்ட இவருக்கு அவுஸ்திரேலிய அணியின் தலைவராக வேண்டுமென ஆசை பிறந்துள்ளது. தனது விருப்பத்தை தந்தையிடம் கூறியுள்ளார். இத்தகவல், சேவை அமைப்பு மூலம அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபையிடம் தெரிவிக்கப்பட்டது. இவரது விருப்பத்தை நிறைவேற்ற நிர்வாகிகள் முடிவு செய்தனர். மெல்போர்ன்யாரா பார்க்கில் நேற்று நடந்த கிறிஸ்துமஸ் நிகழ்ச்சியில் அவுஸ் திரேலிய அணியில் சில்லர் இடம் பெறுவதைஅணித் தலைவர் பெய்ன் அறிவித்தார். சில்லருக்கு ஹோலி வாழ்த்து தெரிவித்தார்.

அவுஸ்திரேலிய பயிற்சியாளர் லாங்கர் கூறுகையில்வாழ்க்கையில் பெரும்பாலான நேரத்தை மருத்துவமனை படுக்கையில்செலவழித்திருக்கிறார்சில்லர். இவரது முகத்தில்புனனகை பூக்கச் செய்ய இது ஒரு வாய்பாகஅமையும்என்றார்


# துயர் பகிர்கின்றோம்



எமது பாடசாலையின் ஆசிரியை
திருமதி சுகந்தி நவநீதன்
அவர்களின்
அன்புத் தந்தை

## கந்தையா சுப்பிரமணியம்

அவர்கள் கடந்த 2018.12.22 அன்று காலமானார்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/கொக்குவில் ஸ்ரீ ஞான பண்டித வித்தியாசாலை

(6790)



வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532



# மரண அறிவித்தல்



## திருமதி குணரத்தினம் இரத்தினசபாபதி

பிறப்பு: 23.07.1939- இறப்பு: 23.12.2018

கோலாலம்பூர் மலேசியாவைப் பிறப்பிடமாகவும் பால்நிலா வதிரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குணரத்தினம் இரத்தினசபாபதி அவர்கள் நேற்று (23.12.2018) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை- தெய்வானைப் பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், அமரர்களான கந்தவனம்- சின்னாச்சி தம்பதிகளின் பாசமிகு மருமகளும், அமரர் கந்தவனம் இரத்தினசபாபதி (ஓய்வுபெற்ற தபால் ஊழியர்) அவர்களின் அன்பு மனைவியும், அமரர் திருமதி க.அன்னலட்சுமி, திருமதி ம.பரமேஸ்வரி, அமரர் திருமதி வ.புவனேஸ்வரி, அமரர் வே.குலசேகரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், இ.பாஸ்கரன் (டென்மார்க்), திருமதி சோ.நாகலோஜினி (லண்டன்), இ.தவேஸ்வரன் (ஆசிரியர்,யா/ ஹாட்லிக் கல்லூரி), திருமதி ந.பத்மலோஜினி (ஆசிரியை, யா/பருத்தித்துறை இந்து ஆரம்பப் பாடசாலை), திருமதி ச.ராஜலோஜினி (ஆசிரியை, யா/ வடமராட்சி மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி பா.ஜெயராணி (டென்மார்க்), கு.கோபால கிருஷ்ணன் (லண்டன்), திருமதி த.கவிதா (பிரதேச செயலகம், மருதங்கேணி), ஆ.நந்தபவன், இ.சசிகலாதன் (அஞ்சல் அலுவலகம், வல்வெட்டித்துறை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், பா.நிபேக்கா, பா.பானுஷா, கோ.மிதுர்ஷன், கோ.வசீனா, சோ.சபீனா, கோ.சுதர்சனா, த.சந்தோஷ், த.வின்சிகா, ச.ஹரிகேஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24.12.2018) திங்கட்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வதிரி ஆலங்கட்டை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

தொடர்பு: 077 262 5699 (C-4812)





# நன்றி மறவோம்

# என்றென்றும்

## அமரர் தவேந்திரன் தனிஸ்ரன் (தனுஸ்)

மலர்வு:- 2000 - 10 - 13 உதிர்வு:- 2017 - 12 - 24

2017.12.24 அன்று அகால மரணமடைந்த தவேந்திரன் தனிஸ்ரன் (தனுஸ்) அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாள் இன்றாகும். இவரின் பிரிவுத் துயர் கேட்டு (24.12.2017) சம்பவ இடத்துக்கு உடனடியாக வருகை தந்த பொதுமக்கள், பிரதேச செயலாளர்கள், வைத்திய அதிகாரிகள், புதுக்குடியிருப்பு ஆதார வைத்திய சாலை உத்தியோத்தர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், கடற்படை அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் அனைவருக்கும் உள்ளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் தங்களது பண்டிகைக்கால கொண்டாட்டங்களைத் தவிர்த்து எம் செல்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட பங்குத் தந்தையர்கள், அருட்சகோதரிகள் மற்றும் மக்கள், இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், தனியார் கல்வி நிலையத்தினர், பொதுமக்கள், புதுக்குடியிருப்பு பிரதேச வர்த்தக நிலைய உரிமையாளர்கீள், பணியாளர்கள், முல்லை மாவட்ட தனியார் பேருந்து உரிமையாள்ர் சங்கத்தினர், கண்ணீர் அஞ்சலிகள், மலர் வளையங்கள், பதாகைகள் அச்சிட்டவர்கள்,வெளிநாடுகளில் இருந்து அனுதாபச் செய்தி தெரிவித்தவர்கள், நேரில் வந்து ஆறுதல் கூறியவர்கள், உணவு தந்து உதவிய உறவுகள், நாங்கள் ஆற்ற வேண்டிய பணிகள் அனைத்தையும் தாங்களே செவ்வனே செய்து முடித்தவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த உள்ளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, இன்றைய தினம் நடைபெறும் மதியபோசனத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

இங்ஙனம்: தவேந்திரன் (தவம்) குடும்பம்
6ம் வட்டாரம் சிவநகர் புதுக்குடியிருப்பு.

தொ.பே:-077 276 8570, (C-4814)

# அதிகாலையில் விபத்தில் சிக்கி இரண்டு இளைஞர்கள் பலி!

(காலி)

காலி-மாத்தறை பிரதான வீதி கபுருகமுவ கங்கை அருகாமையில் இடம்பெற்ற விபத்தில் இரு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர். நேற்று அதிகாலை 1.35 மணியளவில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாத்தறை நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் வீதியிலுள்ள கம்பம் ஒன்றுடன் மோதுண்டு இந்த விபத்து நேர்ந்துள்ளது.

இதன்போது படுகாயமடைந்த இளைஞர்கள் இருவரும் மாத்தறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளனர். 20 மற்றும் 21 வயதுடைய கொடபொல பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். (இ-7)

# மீன்வரத்து அதிகரிப்பு!



(பொற்பதி)

வடமராட்சி கொடுக்குளாய் அபாய வெளியேற்றப் பாதையூடாக பாய்ந்து வரும் பெரும் வெள்ளத்தோடு மீன்களின் வரத்தும் அதிகரித்துள்ளது. இதனை பிடிக்கும் நடவடிக்கையில் தொழிலாளர்கள் கொடுக்குளாய் அபாய வெளியேற்றப் பாதையிலும் மருதங்கேணி பாலத்திலும் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். (இ-64)

# அமைச்சரவையில் ஊழல் செய்தோர்

## மகிந்த அணி புகார்



(கொழும்பு)

தற்போது நியமிக்கப்பட்டுள்ள அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களில் பெரும்பாலானோர், ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்கள் என, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் எம்.பி ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அமைச்சரவை அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளவர்களில் பெரும்பாலானோருக்கு எதிராக துஷ்பிரயோகக் குற்றச்சாட்டுகள் பல முன்வைக்கப்பட்டுள்ளன என்றும் அமைச்சரவையில் நேர்மையற்ற நபர்களே பட்டியல் படுத்தப்பட்டுள்ளனர் என்பதை சுட்டிக்காட்ட முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

இவர்கள் அனைவரும் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டுள்ளனரா என்பதை அறியாமலேயே, அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் தொடர்பான பட்டியலை, ஒருமுறைகூட பரிசீலிக்காது, ஜனாதிபதி, நியமனங்கள் வழங்கியுள்ளார் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)



# வீதியில் வெள்ளம்; பயணிகள் சிரமம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் வைமன் வீதியில் நேற்று முன்தினம் 22 ஆம் திகதி பெய்த அடைமழை காரணமாக மழை நீர் வழிந் தோட முடியாமல் வீதியில் தேங்கி நிற்பதால் பல சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக மக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட இவ் வீதி திருத்தப்படாமல் மழை நீர் வழிந்தோடக் கூடிய வடிகால் அமைப்பு இன்மையாலும் தாம் மழை காலங்களில் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்குவதாகவும் மக்கள் தெரிவித்தனர்.(இ

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு:
021 221 7603, 021 567 1532

காண்டம் பார்த்தல்
உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாகக்கணித்துத்தருகின்றோம்.
தொடர்புகளுக்கு:-076 835 1932,
021 223 2222
உரும்பிராய்.
(6730)

# இரண்டு பொலிஸார் படுகொலை

# கைதான அஜந்தனின் குடும்பத்திற்கு தமிழ் மக்கள் பேரவையினர் நிதியுதவி



(வவுணதீவு)

மட்டக்களப்பு வவுணதீவு பகுதியில் இரண்டு பொலிஸார் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் போராளியான இராஜகுமாரனின் (அஜந்தன்) குடும்பத்தினரை தமிழ்மக்கள்பேரவை மத்திய குழு உறுப்பினரும் தமிழ் மக்கள் கூட்டணியின் இணைச் செயலாளருமான சி.சோமசுந்தரம் மற்றும் தமிழ்மக்கள் பேரவை இணைத்தலைவர் த.வசந்தராசா ஆகியோர் நேற்று நேரில் சென்று சந்தித்து உதவிகளை வழங்கியுள்ளனர்.

தனது கணவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைத்திருப்பதை கண்டித்தும் அவரை விடுதலை செய்ய கோரியும் தனது பிள்ளைகளுடன் கடந்த வாரம் கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்திருந்தார். குறித்த போராட்டம் பொலிஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டிருந்தது.

இந் நிலையில் தனது கணவரை விடுதலை செய்யாத சந்தர்ப்பத்தில் தான் தனது குழந்தைகளுடனும் உயிரை மாய்த்துக் கொள்ளவுள்ளதாக தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் நேற்று தமிழ் மக்கள் பேரவை மற்றும் தமிழ் மக்கள் கூட்டணி சார்பில் அஜந்தனின் மனைவி வசிக்கும் வீட்டுக்கு சென்றிருந்த உறுப்பினர்கள், தமது கவலைகளை தெரியப்படுத்தியதுடன் நிதி உதவியையும் வழங்கினர். மேலும் குழந்தைகளின் கல்வி செயற்பாட்டுக்கு உதவுவதாக உறுதியளித்துள்ளனர். (இ-9)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர். திவ்யசிரோன்மணி நாகராஜா

கடந்த 26.11.2018 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவி அமரர்.திவ்யசிரோன்மணி நாகராஜா அவர்களின் மறைவுச் செய்தியறிந்து நேரில் வந்து எம்முடன் பங்கு கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் மற்றும் தொலைபேசி, மின்னஞ்சல், சமூக வலைத்தளங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தோர், மலர்வளையங்கள் செலுத்தி அஞ்சலி செலுத்தியோர், இறுதியாத்திரையில் பங்குகொண்ட யாழ்.இந்து மகளிர் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவிகள் மற்றும் கலந்து கொண்ட அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
மேலும் அன்னாரின் மறைவையொட்டிய அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (24.12.12018) திங்கட்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும், மதிய போசன நிகழ்வும் நாளை மறுதினம் (26.12.2018) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் நீராவியடி இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி நடைபெறும்.

கந்தர்மடம்
யாழ்ப்பாணம்
(6784)
குடும்பத்தினர்.

## இராசி பலன்

**மீனம்:** மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், போசனசுகமுண்டு, பயணங்களால் பலனுண்டு, சுப செய்திகள் அதிகரிக்கும்.

**மேடம்:** எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், வம்பு வழக்குகளை சமாளித்து வளம் காணும் நாள், பயணங்களால் பலனுண்டு.

**இடபம்:** அடிப்படை வசதி வாய்ப்புகளை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், புதிய முயற்சியொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்:** நண்பர்களுடன் சேர்ந்து வெளியிடங்களுக்குச் செல்லும் எண்ணம் உருவாகும், எப்படி நடக்குமோ என நினைத்த காரியம் நல்ல விதமாக நடைபெறலாம், போசன சுகமுண்டு.

**கும்பம்:** செய்தொழிலை விருத்தி செய்ய முற்படுவீர்கள், இனிமையான நாள், பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

| | | | |
|---|---|---|---|
| | | | சந் |
| செவ் | இராசி பலன்<br>கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>மூலம், பூராடம்<br>பிற்பகல் 3.50 மணிக்கு<br>- கட-சந் | | ராகு |
| கேது | | | |
| சூரி, சனி | குரு. புத | சுக் | |

**24.12.2018**

மார்கழி 09 திங்கட்கிழமை

சூரிய உதயம் காலை 6.23 மணிக்கு

துதியை முன்னிரவு 8.18 மணிவரை

புனர்பூசம் முன்னிரவு 9.48 மணிவரை

சுபநேரம் 12.26-1.56 மணிவரை

இராகுகாலம் 7.56-9.26 மணிவரை

வளவன்

**கடகம்:** பணப்புழக்கம் அதிகரித்தாலும் அடுத்த செலவுகளால் திணறுவீர்கள், அன்றாடப் பணிகள் நன்றாக நடைபெற ஆண்டவனைப் பிரார்த்திப்பீர்கள், அலைச்சல்கள் சற்று கூடும்.

**மகரம்:** கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், தேவைகள் பூர்த்தியாகும் நாள், பழைய பிரச்சினைகளைத் தீர்க்க முழு மூச்சுடன் செயற்படுவீர்கள், கௌரவமான நாள்.

**சிம்மம்:** உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், அந்நிய தேசத்தொடர் புகள் அனுகூலம் தரும், சிறப்பான நாள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**தனுசு:** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம், சுப தகவல்கள் வந்து சேரலாம், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**விருச்சிகம்:** அனுசரித்துச் செல்வதன் மூலம் ஆதாயம் கிடைக்கும் நாள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் ஏற்படலாம், பிரயாண பயமுண்டு, உடல்நலனில் கவனம் தேவை.

**துலாம்:** விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம் பெறும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு.

**கன்னி:** திறமைகள் வெளிப்படும் நாள், தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.




மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் ஆலய இரதோற்சவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை இடம் பெற்றது. (படங்கள்:-சுபேசன்)




நல்லூர்க் கந்தசுவாமி கோவில் ஆலய வருடாந்த மார்கழித் திருவாதிரை உற்சவம் நேற்றுக் காலை இடம்பெற்றது. (படங்கள்:-ஐ.சிவசாந்தன்)

# தொழிற்சங்கங்களின் 10 அம்சக் கோரிக்கைக்கு தலைமைக் காரியாலயம் தான் முடிவெடுக்க வேண்டும்

## வடபிராந்திய விசாரணை அதிகாரி விளக்கம்

(யாழ்ப்பாணம்)

இ.போ.ச.தொழிற்சங்கங்கள் இணைந்து கடந்த 21 ஆம் திகதி யாழில் நடத்திய 10 அம்சக் கோரிக்கைப் போராட்டத்துக்கு இ.போ.ச. தலைமைக்காரியாலயம் தான் முடிவெடுக்க வேண்டுமென இ.போ.சவின் வட பிராந்திய விசாரணை அதிகாரி எஸ்.சத்தியேஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனநாயக நாட்டில்தொழிற்சங்கங்கள் தமது போராட்டத்தை மேற்கொள்வது உரிமையைக் காட்டுவதாகவும் எனினும் போராட்டக்காரர்கள் தமது கோரிக்கை தொடர்பில் கொழும்புத் தலைமை அலுவலகத்திறகுச் சென்று போராடுவார்களாயின் அவர்களுக்கான தீர்வு விரைவாகக் கிடைத்துவிடும் என்றார்.

இ.போ.சபையின் கீழ் இயங்குகின்ற சாலைகளின் பிரச்சினைகள் தொடர்பில் முடிவெடுக்கும் அதிகாரம் சபையின் பணிப்பாளருக்கே உரியதாகும்.எனினும் தொழிற்சங்கங்களால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் தனது கருத்தை இவ்வாறு பதிவிட்டார்.

**குற்றச்சாட்டு:-** நேர்முகப்பரீட்சையில் கலந்து கொண்டவர்கள் இருக்க அவர்களைத் தவிர்த்து தன்னிச்சையாக சாலை முகாமையாளர் மற்றும் கணக்காளர்களை நியமித்தமை.

**மறுப்பு:-** இவர்கள் எண்ணிக்கையைக் குறிப்பிடவில்லை. இருப்பினும் நியமனப்பதவி நிலையிலிருந்துவந்தவர்களுக்கே வழங்கப்பட்டது.

**குற்றச்சாட்டு:-** விசாரணை அதிகாரியின் தன்னிச்சையான அறிக்கையிடல்.

**மறுப்பு:-** குற்றச்சாட்டு தொடர்பில் மேன் முறையீடு இருக்குமானால் இ.போ.ச தலைமையகத்தின் மனிதவள முகாமையாளருக்கு தெரிவித்து அதற்கான பரிகாரத்தை காணலாம் ஆர்ப்பாட்டம் செய்வது ஏன்?

**குற்றச்சாட்டு:-** ஏனைய பிராந்திய ங்களில் இ.போ.ச சட்டங்கள் வடக்கில் மட்டும்.

**மறுப்பு:-** இ.போ.சவின் சட்டதிட்டங்கள் இலங்கையில் உள்ள சாலைகளுக்கும் பொதுவானது. புதிய சட்டங்கள் ஏதும் நடைமுறைப்படுத்தினால் மேலதிகாரிகளுக்கு ஆதாயபூர்வமாகத் தெரியப்படுத்தவும்

**குற்றச்சாட்டு:-** வட பிராந்திய சாலைத் தொழிலாளர்களுக்கு குற்றப்பத்திரம்வழங்கும்போது பாகுபாடு

**மறுப்பு:-** குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கெதிராக உள்ளக விசாரணை நடத்தப்பட்ட போது இரு தரப்பையும் ஒன்றாக அழைத்தே அவர்களுக்கெதிரான குற்றச்சாட்டுக்கள் ஆராயப்பட்டு விதப்புரைகொழும்புதலைமை அலுவலகத்துக்கு அனுப்பப்பட்டு தீர்வு அறிவிக்கப்படும்.

**குற்றச்சாட்டு:-** யாழ். உயர் நீதி மன்ற நீதிபதியால் தீர்ப்பளிக்கப்பட்ட இ.போ.ச. சாலைகளில் கடமையாற்றி பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு உரிய தீர்ப்பை உதாசீனம் செய்தமை.

**மறுப்பு:-** தீர்ப்புத் தொடர்பில் தான் வரவேற்பதாகவும் தொழிலாளர் நன்மைக்காகப் போராடுகின்றோம் என வார்த்தைகளில் மட்டும் நின்று விடாமல் இ.போ.சவின் சட்ட திட்டங்களை முதலில் அறிந்திருக்க வேண்டும். இ.போ: சவன் சட்டத்தின் படி ஊழியர் ஒருவர் நீதிமன்ற வழக்கு முடிவுற்று ஒரு மாத காலத்துக்குள் தனது மீள் நியமனம் தொடர்பாக உரிய அதிகாரிக்கு முறைப்படி அறிவித்திருக்க வேண்டும். ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யவில்லை. அதே வேளை மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளது.

**குற்றச்சாட்டு:-** பரிசோதனைக் குழுவில் உள்ள ஒரு சில அதிகாரிகள் தொழிலாளர்களைத் திட்டமிட்டு பழிவாங்குவதற்கு நிர்வாகமும் உடந்தை.

**மறுப்பு:-** எந்தவொரு ஊழியரையும் பழிவாங்கும் நோக்கில் அதிகாரிகள் செயற்படுவதில்லை.

இ.போ.ச. உழியர்கள் சட்டத்திட்டங்களுக்கு அமைவாக தமது கடமைகளை நிறைவேற்றினால் நிர்வாகம் தலையிட வேண்டியதில்லை.

உதாரணமாக இ.போ.ச. பேருந்தில் பயணம் செய்யும் பயணி ஒருவருக்கு பற்றுச்சீட்டு வழங்கிய பின்னரே பணத்தை அறவிட வேண்டும். ஆனால் பெரும்பாலான நடத்துநர்கள் அவ்வாறு செய்வதில்லை.

பணத்தையே முதலில் வாங்குகிறார்கள். அதனால் பிரயாணச் சீட்டை வழங்க சில வேளை தவறும் போது தண்டனைக்குள்ளாக வேண்டி ஏற்படுகிறது.என அவர் மேலும் தெரிவித்தார்.

குறித்த விடயங்கள் தொடர்பாக தொழிற்சங்கப்பிரதிநிதிகளின் கருத்துக்களைக் கேட்டபோது.

எந்தவொரு இ.போ.ச.ஊழியர் தொடர்பிலும் குற்றச்சாட்டு தொடர்பிலும் தாம் எதிரான வாதங்களை முன்வைத்தால் தாம் மேலதிகாரிகளால் பழிவாங்கப்படுவதாகவும் தமக்கான தண்டனைகள் யாவும் இ.போ.ச. யாழ்.தலைமையக அதிகாரிகளின் முடிவின்படியே வழங்கப்படுவதாகவும் தண்டனைக்கான அனுமதியை மட்டுமே கொழும்புத்தலைமை அலுவலகம் வழங்குவதாகவும் சுட்டிக்காட்டினர்.(இ)

# திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணாசியம்மன் ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை காலை 7 மணி முதல் திருவாசக முற்றோதல் இடம்பெறும். (இ-7)

# பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்



(கரணவாய்)

வடமராட்சி மாலை சந்தை மைக்கல் விளையாட்டுக்கழகத்தலைவர் தங்கவடிவேலு வேணுகானன். உலகத்தமிழர் மாணவர் ஒன்றியத்தலைவர் மணிவண்ணன் தனுசன் ஆகியோரின் பிறந்தநாளை முன்னிட்டு கடந்த வியாழக்கிழமை பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (இ-60)




# சாவகச்சேரி நகர உட்கட்டமைப்பிற்கு அதிக நிதி ஒதுக்கீடு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையின் அடுத்த ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தில் நகர உட்கட்டமைப்பு வேலைகளுக்கு அதிகளவான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக நகராட்சி மன்றத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் அறிவித்துள்ளார்.

நகராட்சி மன்றின் வரவு -செலவுத் திட்டம் கடந்த வெள்ளிக்கிழமை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இது தொடர்பாக கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எமது உறுப்பினர்கள் அனைவரும் சபையின் வருமானத்தை அதிகரித்து அபிவிருத்திகள் மேற்கொள்ள வேண்டும் என்ற ஒன்றுபட்ட நோக்கோடு இருந்தார்கள்.

அதனடிப்படையில் வருமானத்தை அதிகரிக்கக் கூடியதாக நகரின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டும் என்பதற்காக வரவு- செல வுத்திட்டத்தில் அதிகளவான நிதியை ஒதுக்கியுள்ளோம்.

மீன்சந்தை புனரமைப்புக்காக 2.5 மில்லியன், நகர மண்டப புனரமைப்பு மற்றும் மலசலகூடம் அமைப்புக்காக 4 மில்லியன், நூலகங்கள் புனரமைப்புக்கு 2.5 மில்லியன் மற்றும் வீதிகள் புனரமைப்புக்கு 4 மில்லியன் ரூபா என ஒதுக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி அடுத்த ஆண்டு மத்திய அரசிடமிருந்து பெருமளவு நிதி பெறப்பட்டு நகர சபைக்குட்பட்ட அனைத்து வீதிகள் மற்றும் பொது மக்களுக்கான அபிவிருத்திகளை முன்னெடுக்க முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றேன் எனவும் நகரசபைத் தவிசாளர் சிவமங்கை தெரிவித்தார். (இ-30)

# கிறிஸ்மஸ் தினம் நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சத்திய சாயி சர்வதேச நிறுவனத்தின் ஏற்பாட்டில் கிறிஸ்மஸ் தினம் நாளை 25 ஆம் திகதி பிற்பகல் 3.30 மணியளவில் யாழ்ப்பாணம் திருநெல்வேலி சேர்.பொன். இராமநாதன் வீதியிலுள்ள சத்தியசாயி நிலையத்தில் இடம்பெறும். (இ)






**Blossoms** முன்பள்ளி ஆண்டு நிறைவுவிழாவும் மாணவர்களின் கலைநிகழ்வுகளும் அண்மையில் கோண்டாவில் இராஜேஸ்வரி மண்டபத்தில் இடம் பெற்றது. இதில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆரம்பப்பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பணிப்பாளர் ஜெயா தம்பையா கலந்து கொண்டார். ஆறுதல் நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் சுந்தரம் டிவகலாலா பெற்றோர்கள்,ஆசிரியர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## ரணிலின் தீவிர விசுவாசி சுமந்திரன்

# சமஷ்டி வழியில் தமிழீழம் மலரும்! தமிழ்க்கூட்டமைப்பு எம்.பிக்கள் கனவு

## தினேஷ் குணவர்த்தன எம்.பி.சுட்டிக்காட்டு




(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனால் ஆயுத வழியில் பெற முடியாமல் போன தமிழீழத்தை இராஜதந்திர வழியில் பெறலாம் என்ற ஆசையுடனேயே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஆதரவு வழங்கியுள்ளதாக மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினரான தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் சிங்கள ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ரணிலின் தீவிர விசுவாசியாக சுமந்திரனும், சுமந்திரனின் தீவிர விசுவாசியாக ரணிலும் உள்ளனர். அதை நாடாளுமன்றத்தில் நாம் நேரில் கண்கூடாகப் பார்த்துள்ளோம்.

ரணில் தலைமையில் புதிய அரசமைப்பு வரும் என்றும், வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மீண்டும் இணையும் என்றும், சமஷ்டி வழியில் தமிழீழம் மலரும் என்றும் சுமந்திரனும்கூட்டமைப்பின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களும் கனவு காண்கின்றனர்.

இந்தக் கனவு ஒருபோதும் நனவாகாது. ரணில் அரசின் அமைச்சரவை நியமனங்கள் சம்பந்தன் - சுமந்திரன் ஆகியோரின் ஆலோசனையின் பிரகாரம் நடைபெற்றது என நாம் அறிந்தோம்.

நாட்டில் கடந்த 50 நாட்களுக்கு மேலாக நீடித்த அரசியல் குழப்பங்களுக்கு ரணில், சம்பந்தன், சுமந்திரன் ஆகியோரே காரணம்.

அரசியல் குழப்பங்களின் போது எதிர்க்கட்சித் தலைவர் பதவியை சம்பந்தன் துஷ்பிரயோகப்படுத்தியுள்ளார். தற்போது அவரின் பதவியும் பறிபோயுள்ளது என தினேஷ் தெரிவித்துள்ளார். (இ-7)

## ஜனாதிபதி மைத்திரியின் அச்சுறுத்தலுக்கு அஞ்சோம்!

### சு.க.உபதலைவர் பியசேன பதிலடி



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரபல 12 எம்.பி.க்கள் அடுத்த இரு வாரங்களில் அரசாங்கத்துக்கு ஆதரவு தெரிவித்து தங்களுடன் இணைந்து கொள்ளவுள்ளதாக அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உபதலைவரும் காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பியசேன கமகே தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குக் கிடைக்க வேண்டிய எதிர்க் கட்சித் தலைமையை பொதுஜன பெரமுனவுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்ததன் மூலம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது கட்சியை மீண்டும் ஒரு முறை அழிவை நோக்கி இட்டுச் சென்றுள்ளார் எனவும் பியசேன கமகே தெரிவித்தார்.

அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளும் ஸ்ரீல.சு.க.யின் எம்.பி.க்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்குவதில்லையெனவும், ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் கூறும் ஜனாதிபதியின் மிரட்டலுக்கு தாம் அஞ்ச மாட்டோம்.

ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதாயின் முதலில் எடுக்கப்பட வேண்டியது மைத்திரிபால சிறிசேனவுக்கும், மகிந்த ராஜபக்ஷவுக்கும் எதிராகவேயாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## சிறைக்கைதி தற்கொலை

(குருவிட்ட)

குருவிட்ட சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் நேற்று அதிகாலை தற்கொலை செய்து கொண்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் கடத்தல் தொடர்பில் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டிருந்த 22 வயது சந்தேக நபரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இந்நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் குருவிட்ட பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


ஒரே மேடையில் தந்தையும் மகளும் மாகாண விருதுகள்
பாராட்டி வாழ்த்துகின்றோம்





எமது நிறுவனங்களின் ஆங்கில ஆசிரியரும் அகில இலங்கைச் சமாதான நீதவானுமான **சி.ஞானாகரன்** இவ்வாண்டு 14.12.2018 அன்று யாழ். இந்து மகளிர் கல்லூரியில் "குரு பிரதீபா பிரபா" நல்லாசிரியர் விருது பெற்றமையையும் அதேமேடையில் அவரது மகள் **செல்வி கிருத்திகா ஞானாகரன்** (A/L) ஆங்கிலப் பேச்சில் வெண்கலப் பதக்கத்தை 17.12.2018 பெற்றமையையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

முகவரிகள்

**733, சிவிக் சென்ரர் வட்டக்கச்சி.**

**60, தபாற்கந்தோர் வீதி, கோப்பாய் தெற்கு.**

வாழ்த்துவோர்:

Science Ocean **கல்வி நிலையம்,. விசுவமடு.**

CBA **கல்வி நிலையம், தர்மபுரம்.**



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 4<br>கி.பா:03 செவ் 7 இல்<br>உயரம்: 186 CM<br>தகைமை/தொழில்:இலத்திரனியல் பொறியியலாளர், விரிவுரையாளர், அரசதொழில்<br>எதிர்பார்ப்பு:பட்டதாரி<br>தொ.இ: B/9048 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>உயரம்: 166 CM<br>தகைமை/தொழில்:Cencerologic 2 anslicence end science,Allie. s.po. ren.socio<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு, பிரான்ஸ், லண்டன்; P.Rஉள்ளவர்<br>தொ.இ: G/9091 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 21 உயரம்: 5' 8"<br>தகைமை/தொழில்: O/L,Civil பொறியியல் படித்தவர், நில அளவையாளர், தனியார்<br>எதிர்பார்ப்பு: படித்தவர், உத்தியோகம் விரும்பத்தக்கது<br>தொ.இ: B/9049 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா:87செவ் 8 இல்<br>உயரம்: 5' 4"<br>தகைமை/தொழில்: பட்டதாரி, B.sc,M.sc, அபிவிருத்தி உத்தியோகத்தர், அரச தொழில்<br>எதிர்பார்ப்பு: அரசதொழில்<br>தொ.இ: G/9092 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>உயரம்: 5' 6"<br>தகைமை/தொழில்:A/L, தபால் கந்தோர், தற்காலிகம்<br>தொ.இ: B/9050 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>உயரம்: 5' 1"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு:, வெளிநாடு<br>தொ.இ: G/9094 |
| பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 2<br>உயரம்: 5' 10"<br>தகைமை தொழில்: B.A பரீட்சை எழுதியவர்,Dip in English, அலுவலக முகாமையாளர், அரச தொழில்<br>எதிர்பார்ப்பு: படித்தவர்<br>தொ.இ: B/9051 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 4<br>கி.பா:42 உயரம்: 162 CM<br>தகைமை/தொழில்:O/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/9097 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# இயல்பு வாழ்க்கையை இடருக்குள் இழுத்துச் சென்ற பெருவெள்ளம்



(படங்கள்: கண்டாவளை, பரந்தன், மன்னார், பனிக்கன்குளம் செய்தியாளர்கள்)

# அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஊடாக தகவல்களைப் பெற்று உதவிகளை பகிருங்கள்

## கிளிநொச்சி மாவட்ட செயலகம் கோரிக்கை

(பரந்தன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து மக்கள் தங்கியுள்ள இடங்களுக்கு போதுமான உதவிகள் கிடைக்கவில்லை. ஆதலால் உதவிகளை வழங்குகின்ற தரப்புக்கள் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஊடாக தொடர்பு கொண்டு தகவல்களைப் பெற்று அதற்கமைவாக உதவிகளை வழங்குமாறு கிளிநொச்சி மாவட்ட செயலகத்தினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து பாதுகாப்பான இடங்களில் தங்கியுள்ள மக்களுக்கு அரசியல் கட்சிகள், தனியார் நிறுவனங்கள் உள்ளிட்ட பல தரப்பினர்களும் பல்வேறு வகையான உதவிகளை வழங்கி வருகின்றார்கள்.

ஆனால் குறித்த உதவிகள் பெருமளவுக்கு நகருக்கு அண்மையாக அமைந்துள்ள நலன்புரி நிலையங்களுக்கே அதிகம் சென்றடைகின்றது. மாவட்டத்தின் கிராமங்களில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து மக்கள் தங்கியுள்ள இடங்களுக்கு போதுமான உதவிகள் கிடைக்கவில்லை என்றும் அதிகாரிகள், தெரிவிக்கின்றனர்.

உதவிகள் மேற்கொள்கின்றவர்கள் அனைவரும் ஒரே வகையான உதவிகள் வழங்குவதனை தவிர்க்கும் வகையிலும் மக்களின் தேவைகளை கருத்தில் எடுத்து எல்லா மக்களுக்கும் உதவிகள் சென்றடைவதனை நோக்காக கொண்டும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையங்கள் ஊடாக தொடர்புகளை கொண்டு உதவுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (2-312)




# 160 மி.மீ. மழைவீழ்ச்சி வவுனியா வடக்கில் பதிவு

(குருமன்காடு)

வவுனியா வடக்கில் 160 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களத்தின் வவுனியா நிலையப் பொறுப்பதிகாரி ரி.சதானந்தன் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்டத்தில் வவுனியா நகரில் 88.6 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும், செட்டிகுளத்தில் 54 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும், உலுக்குளத்தில் 14.3 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும், நெடுங்கேணியில் 160 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி யும் பதிவாகியுள்ளதுடன், அடுத்து இரு தினங்களுக்கு மழை பெய்யும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், அதிக மழை தொடர்பில் மக்களை முன்னெச்சரிக்கையுடன் இருக்குமாறும் அவர் தெரிவித்துள்ளார். (2-250)

# பயன்தரும் வாழைக்குட்டிகள் பெண் விவசாயிகளுக்கு வழங்கல்



(பனிக்கன்குளம்)

புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்குட்பட்ட பெண்கள் தொழில் முயற்சி கூட்டுறவாளர் சங்கத்தில் அங்கம் வகிக்கும் பெண் விவசாயிகள் 92 பேருக்கு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் பயன்தரு வாழை இனங்களை சேர்ந்த வாழைக் குட்டிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

பெண்கள் தொழில் முயற்சி கூட்டுறவாளர் சங்கத்தின் தலைவி சு.கலைச்செல்வி தலைமையில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வில் வாழை வளர்ப்பிற்காக தெரிவு செய்யப்பட்ட பெண் பயனாளிகளுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. வாழை வளர்ப்பு தொடர்பிலான பயிற்சிகளை புதுக்குடியிருப்பு பிரதேச விவசாய போதனாசிரியர் பு.நிறோஜன் வழங்கி வைத்துள்ளார்.

உலக உணவுத் திட்டத்தின் நிறுவனத்தின் நிதியுதவியில் வாழைக் குட்டிகளை முல்லைத்தீவு மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் பு.உகநாதன் பயனாளிகளுக்கு வழங்கி வைத்துள்ளார்.

இதன்போது ஒவ்வொரு பயனாளிக்கும் மொந்தன், கதலி, இளைய வளர்ப்பு (கப்பல்) வாழைக் குட்டிகள் தலா பத்து படி முப்பது வாழைக் குட்டிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (2-281)

# தாழ்நிலப்பகுதிகள் தொடர்ந்தும் வெள்ளத்தில் மூழ்கியதால் போக்குவரத்து துண்டிப்பு

## மக்கள் இடைத்தங்கல் முகாமில் தஞ்சம்; வயல்நிலங்களைமூடி வெள்ளநீர்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் தாழ்நிலப்பகுதிகளில் தொடர்ந்தும் நேற்று வெள்ள நீர் காணப்படுவதனால் பல கிராமங்களுக்கான போக்குவரத்துக்கள் தொடர்ந்தும் துண்டிக்கப்பட்டுள்ளன.



கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த இரண்டு நாட்களாக நிலவிய சீரற்ற காலநிலை மற்றும் மழைவெள்ளம் காரணமாக தாழ்நிலப்பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட புளியம் பொக்கணை, நாகேந்திரபுரம், போன்ற கிராமங்களுக்கான பிரதான வீதி நீரில் மூழ்கி காணப்படுவதனால் போக்குவரத்துககள் துண்டிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், குடியிருப்புக்களுக்கு நான்கு அடிக்கு மேல் வெள்ளநீர் தேங்கியுள்ளதால் அனைத்து வீடுகளுக்கும் வெள்ளநீர் புகுந்துள்ளதுடன், வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட இப்பிரதேசங்க ளைச் சேர்ந்த சுமார் 400 இற்கும் மேற்பட்ட மக்கள் நாகேந்திரபுரம் வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட இடைத்தங்கல் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த பகுதிக்கு படகுகள் மற்றும் உழவு இயந்திரம் மூலமே பெரும் கஷ்டங்களின் மத்தியில் மக்களுக்கான உதவிகளையும் சேவைகளையும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் வழங்கி வருகின்றனர்.

இவ்வாறு தங்க வைக்கப்பட்டவர்களுக்கான சமைத்த உணவுகளை பிரதேச செயலகம் வழங்கி வருகின்றது.

இதேவேளை நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள மக்களுக்கு பல்வேறு தேவைப்பாடுகள் காணப்படுவதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், கண்டாவளைப்பிரதேசத்தில் சுமார் ஏழாயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நெற்பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளன.

தருமபுரம், நெத்தலியாறு போன்ற பகுதிகளில் நேற்று முன்தினம் வெள்ள நீர் தேங்கிக்காணப்பட்ட பகுதிகளில் வெள்ளம் வடிந்துள்ளபோதும், மக்கள் குடியிருக்க முடியாத நிலை காணப்படுகின்றது. (2-315)

# வெள்ளத்தில் சிக்கிய மக்களை மீட்கும் பணியில் படையினர்





(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் தொடர்ந்தும் வெள்ளம் காணப்படுவதால் மீட்புப் பணியில் நேற்றும் படையினர் ஈடுபட்டிருந்தனர்.

இரணைமடு குளத்தின் வான் கதவுகள் தொடர்ந்தும் திறந்துள்ளமையால் கண்டாவளை பிரதேசம் தொடர்ந்தும் நீரில் மூழ்கியுள்ளது.

இதன் காரணமாக வெள்ளத்தில் சிக்குண்டுள்ள மக்களை மீட்கும் பணியில் படையினர் தொடர்ந்தும் ஈடுபட்டனர். (2)

# சீரற்ற காலநிலையால் 36 குடும்பங்கள் தலைமன்னார் பொதுமண்டபத்தில் தஞ்சம்

## வங்காலையில் 12 படகுகள் சேதம்





(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் சீரற்ற காலநிலையினால் 36 குடும்பங்களைச் சேர்ந்த 102 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய அதிகாரி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பெய்த கடும் மழையினால் மன்னார் மாவட்டத்தின் தலைமன்னாரில் உள்ள மீள் குடியேற்ற கிராமமான "பெல்வேறி" கிராமத்தைச் சேர்ந்த 36 குடும்பங்களே பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்கள் தலைமன்னாரில் உள்ள பொது மண்டபம் ஒன்றில் தஞ்சமடைந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

பெல்வேறி கிராமத்தைச் சேர்ந்த 38 குடும்பங்களைச் சேர்ந்த 12 பேர் பாதிப்படைந்துள்ள நிலையில் 27 குடும்பங்களைச் சேர்ந்த 85 நபர்களே இடம் பெயர்ந்து பொது மண்டபத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

குறித்த கிராம மக்களை அக்கிராமத்திற்கு பொறுப்பான கிராம அலுவலகர் உடனடியாக சென்று பார்வையிட்டதோடு, மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினருக்கும் தகவல் வழங்கியுள்ளனர்.

மேலும் கிராம அலுவலகர் ஊடாக அம் மக்களுக்கு உணவு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, இராணுவத்தினரும் உதவிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பாதிக்கப்பட்ட மக்களை நேரடியாக சென்று பார்வையிட்ட மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகள் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் வங்காலை கடற்கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மீனவர்களுடைய 12 படகுகளும் சேதமாகியுள்ளதாக குறித்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (2-285)

# 19 ஆயிரத்து 78 பேர் முல்லை. வெள்ளப்பாதிப்பால் இடம்பெயர்வு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்பட்ட மழைவெள்ளம் காரணமாக 6ஆயிரத்து ஒரு குடும்பங்களை சேர்ந்த 19 ஆயிரத்து 78 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலைய உதவிப்பணிப்பாளர் எஸ். லிங்கேஸ்வரகுமார் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு 28 தற்காலிக இடைத்தங்கல் முகாம்கள் ஏற்படுத்தப்பட்டு தங்கவைக்கப்பட்டுள்ளார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள 136 கிராமங்களில் 58 கிராமங்கள் மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன என மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலைய உதவிப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு சமைத்த உணவு மற்றும் உலர் உணவு வழங்கும் நடவடிக்கையுடன் மருத்துவ நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-281)




# மன்னார் மனித எலும்புக்கூடுகளின் மாதிரிகள் காபன் பரிசோதனைக்கு கொண்டு செல்ல நடவடிக்கை

## சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

(மன்னார்)

மன்னார் மனிதப் புதைகுழியில் இருந்து அகழ்வு செய்யப்பட்ட மனித எலும்புக் கூடுகளில் இருந்து அதன் மாதிரிகள் பரிசோதனைக்கு கொழும்பிற்கு கொண்டு செல்ல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அகழ்வு பணிக்கு பொறுப்பான சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



மன்னார் நீதவான் ரி.சரவணராஜா முன்னிலையில், கடந்த 19 ஆம் திகதி புதன் கிழமை முதல் மனித எலும்புக்கூடுகளின் மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டு வந்துள்ளன.

அந்த வகையில், மனித எலும்புக்கூடுகளின் மாதிரிகள் ஆறு பெற்றுக்கொள்ளப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மன்னார் மனித எலும்புக்கூடு அகழ்வுப் பணிகள் கடந்த 21 ஆம் திகதி வெள்ளிக் கிழமையுடன் 121ஆவது நாளாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தற்போதுவரை 280 மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றில் 274 மனித எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டு மன்னார் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தற்போது மனித எலும்புக்கூடுகளின் மாதிரிகள் "காபன்" பரிசோதனைக்கு அனுப்ப சேகரிக்கப்பட்டுள்ளது. ஜனவரி மாதம் அளவில் காபன் பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்படவுள்ளன.

மீட்கப்பட்ட மனித எலும்புக்கூடுகளில் 20 மனித எலும்புக்கூடுகள் சிறுவர்களுடையது என நம்பப்படுகின்றது.

காபன் பரிசோதனையின் பின்னரே எலும்புக்கூடுகளின் வயது, புதைக்கப்பட்ட காலம், மரணம் நிகழ்ந்த விதம் என்பன அறிந்து கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-285)

# கிளிநொச்சியில் வெள்ள அனர்த்தத்தினால் 31 ஆயிரத்து 234 பேர் பாதிப்பு

## இடர் முகாமைத்துவ நிலையத் தகவல்படி

(பரந்தன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த இரு தினங்களாக கனமழையுடன் கூடிய சீரற்ற வானிலையால் 9 ஆயிரத்து 475 குடும்பங்களைச் சேர்ந்த 31 ஆயிரத்து 234 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவிக்கின்றது.

நேற்றைய கணக்கெடுப்பின் படி கிளிநொச்சி மாவட்டத்தில் காணப்படும் சீரற்ற வானிலையால் 31ஆயிரத்து 234 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவிக்கின்றது. மாவட்டத்தின் மூன்று பிரதேச செயலர் பிரிவுகளிலும் உள்ள மக்கள் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அதில் பல குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் அப் புள்ளி விபரத் தகவலில் தெரிவிக்கப்படுகின்றது. இதற்கமைவாக,

**கரைச்சி பிரதேச செயலர் பிரிவில்**

ஆயிரத்து 021 குடும்பங்களை சேர்ந்த 3 ஆயிரத்து 589 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அவர்கள் 10 பாதுகாப்பான இடங்களில் 419 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 523 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக் கப்படுகின்றது.

**கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில்**

7ஆயிரத்து 386 குடும்பங்களைச் சேர்ந்த 24ஆயிரத்து 32 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அவர்கள் 11 பாதுகாப்பான இடங்களில் 821 குடும்பங்களை சேர்ந்த 2 ஆயிரத்து 556 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

**பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில்**

10ஆயிரத்து 68குடும்பங்களை சேர்ந்த 3ஆயிரத்து 613 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அவர்கள் 5 பாதுகாப்பான இடங்களில் 154 குடும்பங்களை சேர்ந்த 570 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை குறித்த சீரற்ற காலநிலையால் நான்கு வீடுகள் முழுமையாகவும், 148 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளதாக அப் புள்ளிவிபரத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-312-315)

# ஜனாதிபதி-அரசியலமைப்புச் சபை இடையே நீதிபதிகள் நியமனத்தில் தொடர்ந்து இழுபறி

(கொழும்பு)

**உச்சநீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் வெற்றிடங்களுக்கு, அரசியலமைப்புப் சபையால் பரிந்துரைக்கப்பட்ட மூன்று நீதிபதிகளின் பெயர்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிராகரித்துள்ளார்.**

உச்சநீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களாக நியமிப்பதற்கு மூன்று நீதிபதிகளின் பெயர்களை அரசியலமைப்புச் சபையின் அங்கீகாரத்துக்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சமர்ப்பித்திருந்தார்.

எனினும், 10' பேர் கொண்ட அரசியலமைப்பு சபையின் 7 உறுப்பினர்கள், ஜனாதிபதியின் இந்தப் பரிந்துரைகளை நிராகரித்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் நடந்த அரசியலமைப்பு சபையின் இந்தக் கூட்டத்தில், எதிர்க்கட்சித் தலைவர் என்ற வகையில் மகிந்த ராஜபக்ஷவும் கலந்து கொண்டார்.

மகிந்த ராஜபக்ஷவும், அவரது பிரதிநிதியும், ஜனாதிபதியின் பிரதிநிதியான மகிந்த சமரசிங்கவுமே, மைத்திரிபால சிறிசேனவின் பரிந்துரையை ஆதரித்தனர்.

இந்தக் கூட்டத்தில் நீதியரசர்களின் நியமனம் தொடர்பாக நீண்டநேரம் கலந்துரையாடப்பட்டது என்றும், எனினும் இறுதி முடிவு இன்னமும் எடுக்கப்படவில்லை என்று சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்தார்.

உச்சநீதிமன்றத்தில் 11 நீதியரசர்கள் இருக்க வேண்டும். தற்போது 9 நீதியரசர்கள் மாத்திரமே பணியாற்றுகின்றனர்.



இந்தநிலையில், ஒக்டோபர் 26 அரசியல் குழப்பத்துக்கு முன்னதாக, உச்ச நீதிமன்ற நீதியரசர்களாக நியமிப்பதற்கு, காமினி அமரசேகர, எஸ்.துரைராஜா ஆகிய இரண்டு நீதிபதிகளின் பெயர்களை அரசியலமைப்பு சபை ஜனாதிபதிக்கு பரிந்துரைத்திருந்தது.

இந்தப் பரிந்துரைகளை ஜனாதிப்தி நிராகரித்துள்ளார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை ஜனாதிபதி மைத்திரி நீதிபதிகள் தீபாலி விஜேசுந்தர மற்றும் குமுதினி விக்கிரமசிங்க ஆகியோரின் பெயர்களை அரசியலமைப்பு சபைக்கு பரிந்துரைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவராக நீதியரசர் கே.பி.பெர்னாண்டோவை நியமிப்பதற்கு அரசியலமைப்பு சபை செய்த பரிந்துரையையும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிராகரித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதனால் ஜனாதிபதிக்கும் அரசியலமைப்பு சபைக்கும் இடையில் இந்த விவகாரத்தில் இழுபறி நிலை ஏற்பட்டுள்ளது. (இ-4)

## கொழும்பில் 11 சீனப் பிரஜைகள் கைது!

### 28 ஆம் திகதி வரை விளக்கமறியல்

(கொழும்பு)

கொழும்பு செத்தம் வீதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் கட்டட நிர்மாணப்பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதல் சம்பவம் தொடர்பாக 11 சீனப் பிரஜைகளைக் கோட்டை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சீனப் பிரஜைகளுக்கும் இலங்கை ஊழியர்களுக்கும் இடையில் இந்த மோதல் நேற்று முன்தினம் மதியம் ஏற்பட்டுள்ளது. இச் சம்பவத்தில் இரண்டு சீனப் பிரஜைகளும் மூன்று இலங்கையர்களும் காயமடைந்துள்ளனர். கைது செய்யப்பட்ட 11 சீனப் பிரஜைகள் உட்பட 13 பேர் நேற்று முன்தினம் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இச் சம்பவம் குறித்து கோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## வீதி விளக்குகள் பொருத்தல்



(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் கிழக்கில் தெரிவு செய்யப்பட்ட வீதிகளுக்கான மின்விளக்குகள் பொருத்தும் நடவடிக்கை கடந்த வாரம் இடம்பெற்றது.

வலி.கிழக்கு பிரதேச சபையின் நிதி ஒதுக்கீட்டிலும் அப்பகுதி மக்களின் பங்களிப்புடனும் செல்லப்பா சனசமூக நிலைய நிர்வாகத்தால் இவ் வீதிகளுக்கான மின்விளக்குகள் பொருத்தும்பணி இடம்பெற்றது. (இ

## பண்டாரவளையில் வாகன விபத்தில் நால்வர் படுகாயம்



(பண்டாரவளை)

பண்டாரவளை பிரதான வீதியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் நால்வர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் பண்டாரவளை பிரதான வீதியில் தனியார் பேருந்து ஒன்று பயணிகளை இறக்கிவிட்டு முன்நோக்கி சென்று கொண்டிருக்கும் போது சாரதியின் கட்டுப்பாட்டையிழந்து இரண்டு ஆட்டோ, டிப்பர் வாகனத்துடன் மோதியதில் குறித்த விபத்து ஏற்பட்டுள்ளது.

குறித்த விபத்தில் நால்வருக்கு பலத்தகாயம் ஏற்பட்ட நிலையில் இருவர் தியத்தலாவை பிரதான வைத்தியசாலையிலும் மேலும் இருவர் பதுளை வைத்தியசாலையிலும் அனுமதிக்கபட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். குறித்த நபர்களின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தி யசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

குறித்த விபத்து தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும்

### பிரிட்டன் எம்.பியிடம் வலியுறுத்து



(லண்டன்)

இலங்கை அரசவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்துமாறு பிரித்தானியா பாராளுமன்ற உறுப்பினர்களுடன் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் உறுப்பினர்கள் தொடர் சந்திப்புக்களை மேற்கொண்டு வலியுறுத்தி வருகின்றனர்.

இலங்கையில் நடந்த இனப்படுகொலை தொடர்பில் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கு நாடு கடந்த தமிழீழ அரசாங்க பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ச்சியாக பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து அவர்களின் ஆதரவை திரட்டி வருகின்றனர்.

அந்த வகையில் **Luton North** தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் Kelvin Hopkins க்கும் நாடுகடந்த தமிழீழ அரசாங்க உறுப்பினர்களுக்கும் இடையில் சந்திப்பு ஒன்று கடந்த வாரம் நடைபெற்றது. நாடு கடந்த தமிழீழ அரசின் மனித உரிமைகள் அமைச்சர் பத்மநாதன் மணிவண்ணன் மற்றும் விளையாட்டு மற்றும் சமூக நலன் பிரதியமைச்சர் சொ.யோகலிங்கம் ஆகியோரின் நெறிப்படுத்தலில் நாடுகடந்த அரசாங்கத்தின் செயற்பாட்டாளர்களான நுஜிதன் இராசேந்திரம், பொன்ராசா புவலோஜன் ஆகியோர் கலந்து கொண்ட குறித்த சந்திப் பில் இலங்கையில் ஏற்பட் டுள்ள அரசியல் நெருக்கடி நிலை காணாமல் ஆக்கப் பட்டோர் தொடர்பான பிரச்சினைகள், அரசியல் கைதி களின் விடுதலை, நில ஆக்கிரமிப்பு பற்றி எடுத்துரைக்கப்பட்டதுடன் 2019 ஆம் ஆண்டு நடை பற இருகின்ற ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 39ஆவது கூட்டத்தொடரில் பேசப்படும் சாதக பாதக விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-9)


### அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட

## கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு உலர் உணவு வழங்கள் ஏற்பாடு

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு உலர் உணவு வழங்கும் ஏற்பாடுகள் வலி.கிழக்கு பிரதேச சபையால் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தவிசாளர் தி.நிரோஸ் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பெய்த அடை மழை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகளவிலானோர் இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்கள் பாடசாலைகளில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் இம் மக்களின் அவசர தேவையை அறிந்து எமது பிரதேச சபைக் கட்சிப் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் பின் சபை உறுப்பினர்களும், சபை அதிகாரிகளும் பொது மக்களும் இணைந்து இத் திட்டத்தை முன்னெடுத்ததாக அவர் தெரிவித்தார்.

இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கு ஏனைய பிரதேச சபைகளும் பொது மக்களும் முன்வர வேண்டுமெனவும் அவர் கோரிக்கை விடுத்தார். (இ)



கடந்த 2004.12.26 ஆம் திகதி ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்தில் உயிர் நீத்த உறவுகளை நினைவு கூரும் நாள் நாளை மறுதினம் 26 ஆம் திகதியாகும். இந்நிலையில் வடமராட்சிக்கிழக்கில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்களை ஒன்றாக அடக்கம் செய்த உடுத்துறை ஆழிப்பேரலை நினைவுச் சதுக்கத்தில் புதிதாக கல்லறைகள் அமைத்தல் மற்றும் வர்ணம் பூசும் நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றன. (படங்கள்: பொற்பதி செய்தியாளர்)

# மத்திய வங்கி பிணைமுறி மோசடி குறித்து ஒவ்வொரு மாதமும் மீளாய்வுக் கூட்டம்

## ஜனாதிபதி மைத்திரி விடாப்பிடி



(கொழும்பு)

1000 பில்லியன் ரூபாவிற்கும் அதிகம் என தெரிவிக்கப்படும் மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி 2002, 2003ஆம் ஆண்டு முதல் 2016ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியிலேயே இடம்பெற்றுள்ளதாக மத்திய வங்கியின் சிரேஷ்ட அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மத்திய வங்கி பிணைமுறி கொடுக்கல்-வாங்கல் தொடர்பான விசாரணை நடவடிக்கைகளின் தற்போதைய முன்னேற்றம் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து கண்டறிவதற்காக ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின் போதே இந்த விடயங்கள் தெரியவந்தன.

முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரனை கைது செய்வதற்காக பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் நீதிமன்ற உத்தரவின்படி அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தும்படி இலங்கை அரசாங்கம் சிங்கப்பூர் அரசாங்கத்திற்கு அறிவித்துள்ள போதும் சிங்கப்பூர் அரசாங்கம் இதுவரையில் உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்றும் இந்தக் கலந்துரையாடலின்போது தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பிணைமுறிமோசடி தொடர்பாக தற்போது சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களுக்கு எதிராக இதுவரையில் குற்றப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படாதுள்ளமையால் அவர்களுக்கு எதிரான குற்றப்பத்திரங்களை விரைவாக சமர்ப்பிக்க வேண்டியதன் அவசியம் பற்றியும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. மத்திய வங்கி பிணைமுறி தொடர்பான முறைகேடுகள் குறித்து விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு பொய்ச் சாட்சியளித்தமை தொடர்பாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவர்கள் மற்றும் இந்த விசாரணையுடன் தொடர்புடைய சாட்சிகளை அழித்த குற்றவாளிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யும் நடவடிக்கைகள் இதுவரை தாமதமடைந்திருப்பதுடன், அவர்களுக்கெதிராக விரைவாக வழக்குத் தாக்கல் செய்ய வேண்டியதன் அவசியம் பற்றியும் தெரிவிக்கப்பட்டது.

மத்திய வங்கி கொள்ளை தொடர்பில்வகை கூறவேண்டியவர்களுக்குரிய விசாரணைகளை நிறைவு செய்து, குறிப்பிட்ட காலப்பகுதியில் அவர்களுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது. இந்தக் கலந்துரையாடலின்போது தெரியவந்த மற்றுமொரு முக்கியமான விடயம் இந்த வழக்குகள் தொடர்பான சட்ட திருத்தத்தில் பாராளுமன்ற துறைசார் மேற்பார்வை குழுவால் இதற்குத் தடை ஏற்படுத்தப்பட்டுள்ளமை பற்றியும் தெரியவந்துள்ளது.

மேலும் இந்தப் பாரிய நிதி மோசடி பற்றி சரியான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக ஜனாதிபதி ஆணைக்குழுவால் தடயவியல் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டுமென்று 2018.01.18ஆம் திகதி தீர்மானிக்கப்பட்டிருந்த போதும் ஒருவருட காலமாகியும் அந்த கணக்காய்வு இதுவரையில் மேற்கொள்ளப்படாமை பாரிய தவறாகும் என்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அதிகாரிகள் விளக்கினர்.


பிரதிவாதிகள் பயன்படுத்திய தொலைபேசிகளின் குரல் பதிவுகளில் இந்த விசாரணை நடவடிக்கைகளுடன் தொடர்புடைய முக்கிய பகுதிகள் அழிக்கப்பட்டுள்ளன என்றும் அந்தக் குரல் பதிவுகள் நிபுணர்களால் நவீன தொழில் நுட்பத்தை பயன்படுத்தி கண்டறிவதற்காக இதுவரையில் வெளிநாட்டுக்கு அனுப்பப்படவில்லை என்றும் தெரியவந்துள்ளது. மேற்படி விடயங்களின்படி மத்திய வங்கி பிணைமுறி மோசடியுடன் தொடர்புடைய விசாரணைகளை துரிதமாக மேற்கொள்வதற்கு முடியாத வகையில் குறித்த நிறுவனங்கள் மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டுள்ளமை தொடர்பிலும் இதன்போது தெரியவந்துள்ளது.

இந்த அனைத்து விடயங்களையும் கவனத்திற்கொண்டு, இந்த விசாரணைகளை துரிதப்படுத்துவதற்கும் உரிய காலப்பகுதியில் வழக்குத்தாக்கல் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் தாமதமின்றி தடவியல் கணக்காய்வை ஆரம்பிப்பதற்கும் முன்னுரிமையளிக்கப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

மேலும் எதிர்காலத்தில் மாதத்திற்கு ஒரு தடவை இந்த விசாரணைகளின் முன்னேற்றம் மற்றும் அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி தலைமையில் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டமொன்றை நடத்துவதற்கும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது. குறித்த விசாரணை நடவடிக்கைகளில் இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு, சட்டமா அதிபர் திணைக்களம், பொலிஸ் திணைக்களம், மத்தியவங்கி உள்ளிட்ட அனைத்து நிறுவனங்களும் பக்கச்சார்பற்ற முறையிலும் சுயாதீனமாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமென்பது நாட்டு மக்களின் நம்பிக்கையாகும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

சட்டமா அதிபர் ஜயந்த ஜெயசூரிய, இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ஜனாதிபதி சட்டத்தரணி சரத் ஜயமான்ன, குற்றவியல் விசாரணை திணைக்களத்தின் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரத்ன, மத்திய வங்கியின் பதில் கடமை புரியும் ஆளுநர் நந்தலால் வீரசிங்க ஆகியோரும் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு முயற்சி-ரணில்



(கொழும்பு)

அமைச்சரவை அமைச்சர்களின் எண்ணிக்கையை 32 ஆக அதிகரிப்பதற்கான பேச்சுவார்த்தைகள் இடம்பெறுவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பிரதமர் ஜனாதிபதியுடன் சேர்த்து 32 அமைச்சர்கள் காணப்படவேண்டும் என்ற எமது நிலைப்பாட்டின் அடிப்படையில் இது குறித்து பேச்சுவார்த்தைகள் இடம்பெறுகின்றன என அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதியும் இதனை ஏற்றுக்கொண்டுள்ளதால் இது குறித்த பேச்சுவார்த்தைகள் இடம்பெறுகின்றன என அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடனான சந்திப்பொன்றின் போதே ஐக்கிய தேசியக் கட்சி இந்த வேண்டுகோளை முன்வைத்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியின் நால்வர் கொண்டகுழுவினர் சில நாட்களுக்கு முன்னர் ஜனாதிபதியைச் சந்தித்து பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்தச் சந்திப்பின் போது மீண்டும் தேசிய அரசாங்கத்தை அமைப்பதற்கான வேண்டுகோளை ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் முன்வைத்துள்ளனர்.

தேர்தலில் மக்களின் ஆணை தேசிய அரசாங்கத்திற்கே வழங்கப்பட்டது என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும் தேசிய அரசாங்கத்தை அமைக்கும் யோசனையை ஜனாதிபதி உடனடியாக நிராகரித்துள்ளார். (இ-7)

# பட்ஜெட் வாசிப்பில் பிழை விட்ட முதல்வர் ரோசி மீது விமர்சனம்



(கொழும்பு)

கொழும்பு மாநகர சபைக்கான வரவு- செலவுத் திட்டத்தை சமர்ப்பித்து, அதனை பிழையாக வாசித்த முதல்வர் ரோசி சேனநாயக்க தொடர்பில் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

கொழும்பு மாநகர சபையின் வரவு- செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டது. ரோசி சேனநாயக்க அதனை வாசிக்கும் போது வருமானம் மற்றும் செலவுகள் தொடர்பில் பிழையாக வாசித்துள்ளார்.

இதன்போது எடுக்கப்பட்ட காணொலி ஒன்று இணையத்தில் வெளியாகி விமர்சனத்திற்குள்ளாகியுள்ளது.

வரவு- செலவுத்திட்டத்தை வாசிக்கும் போது பிழைகள் ஏற்பட்டதாகவும், அதனை ஏற்றுக்கொள்வதாகவும் ரோசி சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

சிங்கள மொழியில் அறிவிக்கும் போது இந்தச் சிக்கலுக்கு முகம் கொடுக்க நேரிட்டதாக அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் சமூக ஊடகங்களில் தனக்கு எதிராக சேறு பூசும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அவர் தெரிவித்தார்.

இருப்பினும் இது தொடர்பில் மீண்டும் அவதானம் செலுத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# மூன்று தேர்தல்களையும் ஒரேநாளில் வைப்போம்

## அமைச்சர் வஜிர தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டிலுள்ள சகல மாகாண சபைகளின் தேர்தலை ஒரே நாளில் நடத்த எதிர்பார்த்துள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

மாகாண சபைத் தேர்தலை வெவ்வேறு தினங்களில் நடத்தி அரசாங்கத்தின் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்து அதிக செலவை ஏற்படுத்தும் முறைமையை இல்லாதொழிக்க வேண்டும்.

இதற்கு முன்னைய அரசாங்கங்கள் இதனைத் தான் செய்தன.

இந்த அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலை மாத்திரமல்ல, முடியுமானால் ஜனாதிபதித் தேர்தலையும், பொதுத் தேர்தலையும் கூட ஒரே தினத்தில் நடத்த நடவடிக்கை எடுக்கும். இதனால், நாட்டுக்கு ஏற்படும் செலவும் குறைகின்றது. நாம் இந்த இடத்துக்கே வர வேண்டியுள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அமைச்சின் பொறுப்புக்களை கடந்த வெள்ளிக்கிழமை ஏற்றுக் கொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# இடைநிறுத்தப்பட்ட நிதியுதவிகளைப் பெற வெளிநாட்டு நிறுவனங்களுடன் பேச்சு

## அமைச்சர் எரான் தகவல்



(கொழும்பு)

அரசியல் குழப்பங்களையடுத்து இடைநிறுத்தப்பட்ட வெளிநாட்டு நிதி உதவிகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பாக ஜனவரி மாதம் பேச்சுக்கள் நடத்தப்படவுள்ளதாக, நிதி இராஜாங்க அமைச்சர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.

"அனைத்துலக நாணய நிதியம், அமெரிக்காவின் மிலேனியம் சவால் நிறுவனம் மற்றும் ஜப்பானின் அனைத்துலக ஒத்துழைப்பு முகவரகம் ஆகியவற்றுடனேயே பேச்சுக்கள் நடத்தப்படவுள்ளன.

அனைத்துலக நாணய நிதியத்தின் 1.5 பில்லியன் ரூபா கடனின், ஆறாவது தவணைக்கொடுப்பனவான, 250 மில்லியன் டொலரை இடைநிறுத்தி வைத்துள்ளது.

அமெரிக்காவின் மிலேனியம் சவால் நிறுவனம் 480 மில்லியன் டொலர் உதவியை நிறுத்தி வைத்துள்ளது.

ஜப்பானின் அனைத்துலக ஒத்துழைப்பு முகவரகம் 1.7 பில்லியன் டொலர் இலகு தொடருந்து திட்டத்துக்கான உதவியை இடைநிறுத்தியுள்ளது.

இந்த நிதி உதவிகளை விரைவாக மீளப் பெற்றுக் கொள்வது தொடர்பாக சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் ஜனவரி மாதம் பேச்சுக்கள் நடத்தப்படும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-4)

# பாரதம்

## முத்தலாக் சட்டம் குறித்து அரசு உறுதியாகவுள்ளது

### பிரதமர் மோடி தெரிவிப்பு



(சென்னை)

எதிர்க்கட்சிகளின் தடைகளை யும் மீறி முத்தலாக் சட்டம் கொண்டுவருவதில் அரசு உறுதியாக உள்ளதென பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பாரதிய ஜனதா மகளிர் அணியினரின் 5ஆவது தேசிய மாநாடு குஜராத் மாநிலம் காந்திநகரில் நேற்று இடம் பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இதன் போது மேலும் தெரிவித்த அவர், "கடும் எதிர்ப்பாளர்கள் மற்றும் எதிர்க்கட்சிகளின் தடைகள் இருந்த போதிலும், அரசு முத்தலாக் சட்டத்தை கொண்டு வருவதில்உறுதியாகஉள்ளது.

இதன்மூலம் முஸ்லிம் பெண்கள் மிகப்பெரிய வாழ்க்கை அச்சுறுத்தலிலிருந்து விடுபட முடியும். அதுமட்டுமல்ல, முஸ்லிம் பெண்கள் ஹஜ் யாத்திரை செல்வதற்கு அவர்களுடன் ஆண்கள் கண்டிப்பாக செல்ல வேண்டும் என்ற பிரிவை நீக்கியுள்ளோம்.

முன்னாள் மத்திய உள்துறை அமைச்சர் சர்தார் வல்லபாய் பட்டேல் சுதந்திரத்துக்கு முன்பே ஆமதாபாத் நகரசபை தலைவராக பெண்ணொருவரை நியமித்து அதிகாரமளித்தார். அரசின் இதுபோன்ற நடவடிக்கைகளால் பஞ்சாயத்து முதல் நாடாளுமன்றம் வரை நாட்டு மக்கள் பா.ஜ.க. மீது நம்பிக்கை வைத்துள்ளனர்" என மேலும் தெரிவித்தார். (4-7)

## பஸ் கவிழ்ந்து விபத்து! 25 பேர் உயிரிழப்பு

(காத்மண்டு)

நேபாளத்தில் கல்வி சுற்றுலா சென்ற மாணவர்கள் பஸ் கவிழ்ந்த விபத்தில் பலி எண்ணிக்கை 25 ஆக உயர்ந்தது.

நேபாளத்தில் காத்மண்டுவில் உள்ள கிருஷ்ணா சென் இச்குக் பாலிடெக்னிக் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் நேற்று முன்தினம் பஸ்ஸில் கல்விச் சுற்றுலா சென்று இருந்தனர்.

பல இடங்களுக்கு சென்று பார்வையிட்ட அவர்கள் சுற்றுலாவை முடித்துக் கொண்டு திரும்பிக் கொண்டிருந்தனர்.



மலைப் பாதையில் ராம்ரி கிராமம் அருகே வந்தபோது பஸ் கட்டுப்பாட்டை இழந்து தாறுமாறாக ஓடியது. பின்னர் வீதியோரம் இருந்த 1,640 அடி பள்ளத்தாக்கில் தலைகீழாக கவிழ்ந்தது.

இந்த விபத்தில் பஸ்ஸில் பயணம் செய்த 25 பேர் உயிரிழந்தனர். அவர்களில் மாணவர்களும்- கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களும் அடங்குவர்.

இவர்கள் தவிர படுகாயமடைந்த சிலர் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றனர்.

நேபாளத்தில் இத்தகைய விபத்துகள் அடிக்கடி நடைபெறுகிறது. கடந்த வாரம் மலைப் பாதையில் பஸ் உருண்டதில் 16 பேர் பலியாகினர். அங்குள்ள மோசமான வீதிகளால் இதுபோன்ற விபத்துகள் இடம்பெறுகின்றன. (4-7)

## வான்-பஸ் விபத்து 6 பேர் உயிரிழப்பு

### 10 இற்கு மேற்பட்டோர் படுகாயம்

(சென்னை)

நெல்லை கங்கை கொண்டான் 4 வழிச்சாலையில் பயணித்த வானும், அரச பேருந்தும் மோதி விபத்திற்குள்ளானது. விபத்தைத் தொடர்ந்து வாகனங்களில் இருந்த இரு தரப்பினரும் வாக்கு வாதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை விபத்து நடந்த வழியே பயணித்த மற்றொரு வாகனம், விபத்துக்குள்ளான இரு வாகனங்கள் மீதும் திடீரென மோதி விபத்துக்குள்ளனது.

இச்சம்பவத்தில் 6 பேர் உயிரிழந்துள்ளதுடன், 10 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

விபத்தில் சிக்குண்டவர்களை மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

மேலும், விபத்து குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-7)

## சவுதி இளவரசர் தலால் மறைவுக்கு பல நாட்டுத் தலைவர்கள் இரங்கல்

(ரியாத்)

சவுதி அரேபியாவின் இளவரசர் தலால் பின் அப்துல் அஜிஸின் மறைவிற்கு பல்வேறு நாட்டு தலைவர்களும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

சவுதி அரேபியாவின் இளவரசர் தலால் பின் அப்துல் அஜிஸ் தனது 87ஆவது வயதில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை காலமானார்.

கடந்த 1950இல் இருந்து 1960ஆம் ஆண்டு வரை பல்வேறு அரசாங்க பதவிகளில் இருந்த அப்துல் அஜிஸ் அந்த ஆண்டே அரியணைக்கு வந்தார்.

சவுதியில் பெண்களுக்கு வாக்குரிமை, கார் ஓட்டுவதற்கு அனுமதி உள்ளிட்ட பல்வேறு சீர்திருத்தங்களை கொண்டு வந்தவர் அப்துல் அஜிஸ்.

கடந்த சில மாதங்களாக உடல் நலம் பாதிக்கப்பட்டிருந்ததால் பொறுப்புகள் அனைத்தும் பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மானுக்குச் சென்றது.

இந்நிலையில் நேற்று



மாலை அப்துல் அஜிஸ் காலமானதாக உத்தியோகப் பூர்வமாக அறிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அவரது மறைவுக்கு பல்வேறு நாட்டுத் தலைவர்களும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். (4-7)

## இந்தோவில் 170 பேர் உ



(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவில் எரிமலை வெடிப்பைத் தொடர்ந்து ஏற்பட்ட சுனாமியால் 170 பேர் உயிரிழந்துள்ளதுடன், 745 பேர் படுகாயமடைந்துள்ளதாக பேரிடர் முகாமைத்துவ தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் இரவு சனிக்கிழமை 9.30 மணியளவில் தாக்கிய இந்த சுனாமியினால், பெருமளவு மக்கள் காணாமற்போயுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில், உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாமென அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

மேலும், குடியிருப்புகள், கட்டடங்கள் மற்றும் வீதிகள் சேதமடைந்துள்ளதோடு, பெருமளவு சொத்துக்களுக்கும் சேதம்

பாதி
வடிக்கை
கப்படுவ
வைத்தி
செயற்
இடம்பெ
தகவல்

இதே
வின் வ

## ஆப்கானில் ராணுவ 25 பயங்கரவாதிக

(காபூல்)

ஆப்கானிஸ்தான் நாட்டின் மூன்று மாகாணங்களில் இராணுவம் நடத்திய தேடுதல் வேட்டையில் தலிபான் இயக்கத்தை சேர்ந்த 25 பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ஆப்கானிஸ்தான் நாட்டில் சுமார் 45 சதவீதம் பகுதிகளில் ஆதிக்கம் செலுத்தி வரும் தலிபான் பயங்கரவாதிகள் ஏராளமான பொதுமக்களை கொன்று குவித்து வருகின்றனர்.



அவர்களை வேட்டையாடும் நோக்கத்தில் இராணுவமும், விமானப் படையும் தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்
நன்கர்

## இரட்டைக்கு 8 பேர் உட

(மொஸ்கோ)

சோமாலியாவில் ஜனாதிபதி மாளிகை அருகே அடுத்தடுத்து குண்டுகள் வெடித்ததில் 8 பேர் உயிரிழந்ததாக தகவல் வெளியாகி உள்ளது.

சோமாலியாவில் உள்நாட்டுப்போர் நடந்து வருகிறது. அல்கொய்தா ஆதரவு பெற்ற அல்ஷபாப் பயங்கரவாதிகள் ஆயுத தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். அவர்கள் மத அடிப்படையிலான அரசை நிறுவ போராடி வருகின்றனர்.

இந்த நிலையில், அங்கு தலை நகர் மொகாடிசுவில் ஜனாதிபதி மாளிகை அருகே நேற்று வெடிகுண்டுகள் நிரப்பிய 2 கார்கள் அடுத்தடுத்து வெடித்து சிதறின. இதில் அந்தப்பகுதியே குலுங்கியது.



இந்த குண்டுவெடிப்புகளில் சிக்கி 8 பேர் உடல் சிதறி உயிரிழந்தனர். பலர் படு

இது
மீட்பு பல

# ...ில் சுனாமி உயிரிழப்பு!

## ...பேர் படுகாயம்



சேதம் ஏற்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டவர்களை மீட்கும் நடவடிக்கைகள் தீவிரமாக முன்னெடுக்கப்படுவதோடு, காயமடைந்தவர் களை வைத்தியசாலையில் அனுமதிக்கும் செயற்பாடுகளும் தொடர்ச்சியாக இடம்பெற்றுவருவதாக அந்த நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, இந்தோனேஷியாவின் வளிமண்டலவியல் மற்றும் காலநிலை ஆய்வு மையத்தின் தகவலுக்கு அமைய, சுனாமி பேரலைகள் ஏற்படுவதற்கு நில அதிர்வு காரணமல்ல என்றும், அனக் கர்க்காட்டோ எனும் எரிமலை வெடிப்பின் விளைவாக இருக்கலாம் என்றும் தற்போது சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. (4-7)

# ...ணுவம் தாக்குதல் ...திகள் உயிரிழப்பு



றது.

இந்நிலையில், நேற்று முன்தினம் நன்கர்ஹர், ஃபர்யாப், மேற்கு ஃபரா ஆகிய மூன்று மாகாணங்களில் இராணுவ வீரர்கள் நடத்திய தேடுதல் வேட்டையில் 25 பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

மேற்கண்ட பகுதிகளில் இருந்து தலிபான்கள் வைத்திருந்த ரொக்கெட் ஏவுகணைகள், இயந்திர துப்பாக்கிகள் மற்றும் ஏராளமான வெடிகுண்டுகள் கைப்பற்றப்பட்டதாக ஆப்கானிஸ்தான் ஊடகங்கள் நேற்று செய்தி வெளியிட்டுள்ளன. (4-7)

# ...க்குண்டு வெடிப்பு ...உடல் சிதறிப்பலி



பலர் படுகாயம் அடைந்தனர்.


இது குறித்து தகவல் அறிந்ததும் மீட்பு படையினர் விரைந்து சென்று மீட்பு பணிகளில் ஈடுபட்டனர்.

படுகாயம் அடைந்தவர்கள் மீட்கப் பட்டு அம்புலன்ஸ்களில் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப் பட்டனர்.

அவர்களில் சிலரது நிலை, கவலைக்கிடமாக உள்ளதால் பலி எண்ணிக்கை உயரும் என அஞ்சப் படுகிறது.

இந்த கார்க்குண்டு வெடிப்புகள், உள்ளூர் மக்களிடையே பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. (4-7)

# அமெரிக்காவின் மிரட்டலுக்கு அஞ்சாமல் போர் ஒத்திகையை ஆரம்பித்த ஈரான்



(டெஹ்ரான்)

அமெரிக்கா விதித்துள்ள பொருளாதார தடைகளை கண்டு மனம் தளராத ஈரான் அரசு 'பயகம்பர்-இ-ஆசம் என்ற பெயரில் முப்படைகளின் போர் ஒத்திகையை தொடங்கியுள்ளது.

அமெரிக்கா, இங்கிலாந்து, ஜேர்மனி, பிரான்ஸ், ரஷ்யா உள்ளிட்ட நாடுகள் கடந்த 2015ஆம் ஆண்டில் ஈரானுடன் அணு ஆயுத தடை ஒப்பந்தம் செய்து இருந்தன. அதில் இருந்து மீறிவிட்டதாக புகார் கூறிய அமெரிக்கா கடந்த மே மாதம் இந்த ஒப்பந்தத்தில் இருந்து விலகியது.

மேலும், ஈரான் மீது விலக்கி இருந்த பொருளாதார தடையை மீண்டும் விதிப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அண்மையில் அறிவித்தார். அமெரிக்காவின் பொருளாதார தடை கடந்த மே மாதத்தில் இருந்து அமுலுக்கு வந்தது.

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமாவின் ஆட்சிக் காலத்தில் படிப்படியாக விலக்கப்பட்ட அனைத்து தடைகளையும் ஈரான் மீது தற்போது ட்ரம்ப் ஒருசேர திணித்துள்ளார். இதனால் அந்நாட்டின் பொருளாதாரம் மிகப்பெரிய பின்னடைவை சந்திக்க நேரிடும் என சர்வதேச அரசியல் விமர்சர்கள் கருதுகின்றனர்.

ஈரான் மீது அமெரிக்கா விதித்துள்ள அத்தனை பொருளாதார தடைகளையும் தகர்த்து பெருமையுடன் முன்னேறி வருவோம் என ஈரான் ஜனாதிபதி ஹசன் ரவுகானி நேற்றைய தினம் சூளுரை த்துள்ளார்.



இந்நிலையில், நாட்டின் தெற்கு பகுதியில் உள்ள குவெஷேம் தீவில் 'பயகம்பர்-இ-ஆசம் 12' என்ற பெயரில் முப்படைகளின் மாபெரும் போர் ஒத்திகையை தொடங்கியுள்ளது.

'முஹம்மது நபி உயர் வானவர்' என்னும் பொருள் படும் இப்பெயரால் நடைபெற்று வரும் போர் ஒத்திகையில் ஈரான் நாட்டின் தரைப்படை, விமானப்படை மற்றும் கப்பல் படையை சேர்ந்த வீரர்கள் போர் பயிற்சிகளையும், சாகச ஒத்திகைகளையும் நடத்தி வருகின்றனர். (4-7)

# அமெரிக்கத் தேர்தலில் வெளிநாடுகள் தலையிட்டமைக்கு எந்த ஆதாரமும் இல்லை

## உளவு அமைப்புகள் திட்டவட்டமாக அறிவிப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் கடந்த நவம்பர் மாதம் நடந்த தேர்தலில் வெளிநாடுகள் தலையிட்டதற்கு எந்த ஆதாரமும் இல்லை என்று அந்த நாட்டின் உளவு அமைப்புகள் திட்டவட்டமாக அறிவித்து உள்ளன.

அமெரிக்காவில் 2016 ஆம் ஆண்டு நவம்பர் 8ஆம் திகதி நடந்த ஜனாதிபதி தேர்தலில் ரஷ்யா நேரடியாக தலையிட்டது என்ற குற்றச் சாட்டு உள்ளது. குறிப்பாக, குடியரசு கட்சி வேட்பாளராக போட்டியிட்ட ட்ரம்ப் வெற்றி பெறவும், ஜனநாயகக் கட்சி வேட்பாளராக களம் இறங்கிய ஹிலாரி கிளிண்டன் தோல்வி அடையவும் ரஷ்யா நேரடியாக தலையிட்டது என எழுந்துள்ள புகார் பற்றி ராபர்ட் முல்லர் தலைமையிலான சிறப்பு குழு விசாரணை நடத்தி வருகிறது. இந்த குற்றச்சாட்டை ரஷ்யா மறுத்து வருகிறது.

இந்த நிலையில் அமெரிக்காவில் கடந்த நவம்பர் 6ஆம் திகதி, ஒட்டுமொத்த பிரதிநிதிகள் சபைக்கும், செனட் சபையின் 33 இடங்களுக்கும் தேர்தல் நடந்தது.

இந்த தேர்தல், ட்ரம்பின் 2 ஆண்டு கால ஆட்சிக்கான பொது வாக்கெடுப்பாக கருதப் பட்டதால் உலகமெங்கும் பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டது.

ஆனால் இந்த தேர்தலிலும் ரஷ்யா தலையிட முயற்சிப்பதாக புகார் எழுந்தது. அத்துடன் சீனாவும் இந்த தேர்தலில் தலையிட முயற்சிக்கிறது என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், ஐ.நா. பாதுகாப்பு சபையில் புகார் தெரிவித்தார். இதை சீனா திட்டவட்டமாக மறுத்தது. பிற எந்தவொரு நாட்டின் உள்நாட்டு விவகாரங்களிலும் சீனா தலையிட்டதே இல்லை என அந்த நாட்டு அரசு கூறியது. ஈரான் மீதும் புகார் கூறப்பட்டது.

தேர்தலும் நடந்து முடிந்து விட்டது. பிரதிநிதிகள் சபைக்கான தேர்தலில் எதிர்க் கட்சியான ஜனநாயக கட்சி கூடுதலான இடங்களை கைப்பற்றி வெற்றி பெற்றது. இதே போன்று செனட் சபை தேர்தலில் குடியரசு கட்சி அதிக இடங்களை பிடித்தது.

இந்த நிலையில், கடந்த நவம்பர் மாதம் 8ஆம் திகதி நடந்த நாடாளுமன்ற பிரதிநிதிகள் சபை, செனட் சபை தேர்தலில் எந்தவொரு வெளிநாடும் தலையிடவில்லை என அமெரிக்காவின் 17 முன்னணி உளவு அமைப்புகள் உறுதிபடத் தெரிவித்துள்ளன.

இதுபற்றி தேசிய புலனாய்வு அமைப்பின் இயக்குனர் டான் கோட்ஸ் ஒரு அறிக்கை விடுத்துள்ளார். அந்த அறிக்கையில் அவர் கூறி இருப்பதாவது,

நமது நாட்டின் தேர்தல் உட்கட்டமைப்பில் எந்த சமரசமும் நடைபெறவில்லை. வாக்காளர்கள் வாக்களிப்பதை தடுக்கும் வகையிலோ, வாக்கு எண்ணிக்கையை தடுக்கவோ, வாக்கு எண்ணிக்கையை சரிபார்க்கவோ தடைகள் செய்யப்பட்டன என்பதற்கு ஆதாரம் எதுவும் இல்லை.

2018ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்ற தேர்தலில் ரஷ்யா , சீனா, ஈரான் உள்ளிட்ட பிற நாடுகள் தங்கள் நலன்களை மேம்படுத்திக் கொள்வதற்காக, அமெரிக்காவை இலக்கு வைத்து நடவடிக்கைகள் எடுத்ததற்கோ, பிரசாரங்களில் தாக்கங்களை ஏற்படுத்தியதற்கோ ஆதாரம் இல்லை. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. (4-7)

# அமெ. அரசு நிர்வாகம் மீண்டும் முடக்கம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் அரசின் செலவீன மசோதாவுக்கு பாராளுமன்றத்தில் ஒப்புதல் கிடைக்காததால், அரசு நிர்வாகப் பணிகளில் முடக்கம் ஏற்பட்டுள்ளது.

அமெரிக்க அரசின் செலவின மசோதாவுக்கும், ஜனாதிபதி ட்ரம்பின் கோரிக்கைக்கும் எதிர்ப்புத் தெரிவித்து எந்த விதமான நிதி மசோதாவையும் நிறைவேற்றாமல் செனட் சபை ஒத்திவைக்கப்பட்டது.



இதனால் அமெரிக்காவில் அரசு நிர்வாகம் முடங்கி உள்ளது.

நிர்வாக முடக்கம் காரணமாக 8 இலட்சம் அரசு ஊழியர்கள் பணிக்கு செல்ல முடியாத நிலை ஏற்படும். அல்லது அவர்கள் ஊதியம் இல்லாமல் பணியாற்ற வேண்டிய சூழல் ஏற்படும். கிறிஸ்மஸ் பண்டிகை நெருங்கி வரும் நிலையில், நிர்வாக முடக்கம் ஏற்பட்டுள்ளதால் ஊழியர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

மெக்சிக்கோ எல்லைப் பகுதியில் சுவர் எழுப்பும் தனது திட்டத்துக்காக ட்ரம்ப், 5 பில்லியன் தொகையை கோரியிருந்தார்.

ஆனால், ட்ரம்ப் கோரிக்கைக்கு செனட் சபையில் எதிர்ப்பு எழுந்தது. இதன் தொடர்ச்சியாக நிர்வாக முடக்கம் (ஷட்டவுன்) நிகழ்ந்துள்ளது. நிர்வாக முடக்கம் எவ்வளவு நேரம் நீடிக்கும் என்பது தெரியவில்லை. அமெரிக்க அரசின் நிர்வாக முடக்கம் நீண்ட காலம் நீடிக்காது என நம்பிக்கை இருப்பதாக ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். (4-7)

# உணவு தவிர்ப்பு இடைநிறுத்தம்

## மூவர் வைத்தியசாலையில் அனுமதி சம்பளப் பிரச்சினைக்கு காலக்கெடு





(கொழும்பு)

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளம் ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக நான்கு இளைஞர்களால் முன்னெடுக்கப்பட்டதன்னெழுச்சியான உணவு தவிர்ப்புப் போராட்டமானது எதிர்வரும் தைப்பொங்கல் வரையான 15 நாட்கள் அரசாங்கத்திற்குக் காலக்கெடு வழங்கப்பட்டு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

15 நாட்களுக்குள் இப்பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுக் கொடுக்கப்படாவிட்டால் மீளவும் போராட்டம் உக்கிரமடையும் எனவும் போராட்டக்காரர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். போராட்டம் இடைநிறுத்தப்பட்டமையைத் தொடர்ந்து நான்கு இளைஞர்களும் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டதுடன், அவர்களில் மூவரின் உடல்நிலை மோசமடைந்துள்ளமையின் காரணமாக மேலதிக சிகிச்சைகளுக்காக அவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான ஆயிரம் ரூபா வேதன அதிகரிப்பை வழங்க வேண்டும் என வலியுறுத்தி கடந்த 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கணேசன் உதயகுமார், கந்தையா அசோக் என்ற இரு இளைஞர்கள் ஆரம்பித்த தன்னெழுச்சி உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் பின்னர் கனகரத்தினம் ராஜா, வீரக்குமார் மனோஜ் ஆகிய இரு இளைஞர்களும் இணைந்து கொண்டனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை தொடர்ந்து ஐந்தாவது நாளாகவும் தொடர்ந்த உணவுத் தவிர்ப்புப் போராட்டத்திற்குப் பல சிவில் சமூக அமைப்புக்கள் நேரில் சென்று ஆதரவு வழங்கியதுடன், ஏராளமான மலையக இளைஞர்களும் கலந்து கொண்டு தன்னெழுச்சி கவனயீர்ப்புப் போராட்டமாக மாறியிருந்தது.

இந்நிலையில் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை போராட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளது. (இ-7)

# அப்புத்தளையில் தோட்ட மக்கள் ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

அப்புத்தளை பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா அடிப்படை தினச் சம்பளத்தை உயர்த்தக் கோரியும் இதே கோரிக்கையை முன்னிலைப்படுத்தி கொழும்பு-கோட்டை புகையிரத நிலையம் முன்பாகத் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் மலையக இளைஞர்களுக்கு ஆதரவு தெரிவித்து அப்புத்தளைப் பகுதி தோட்டத் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை அப்புத்தளைப் பகுதியின் தங்கமலை, இதல்கஸ்ஹின்ன போவை ஆகிய தோட்டங்களின் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம் மற்றும் கவனயீர்ப்புப் போராட்டத்தில ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மங்களவை வணங்கும் உதவியாளர்





(கொழும்பு)

அமைச்சர் மங்கள சமரவீரவின் பிரத்தியேக உதவியாளரான சமீர மக்ஹார. மங்கள சமரவீரவின் புகைப்படத்தை வணங்கும் காட்சி சமூக வலைத்தளங்களில் பரவியுள்ளது.

நிதியமைச்சில் வைத்து இந்தப் புகைப்படம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சமீர, முன்னர் மங்கள சமரவீரவின் உதவியாளராக இருந்த காலத்தில் போதைவஸ்துக் குற்றச்சாட்டுத் தொடர்பில் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

இந்தநிலையில் மீண்டும் மங்கள சமரவீர நிதியமைச்சரானதும் அவருடன் இணைந்துள்ள சமீர, அமைச்சரின் புகைப்படத்தை சுவரில் .பொருத்தி வணங்கும் காட்சி வெளியாகியுள்ளது.

சமீர, அமைச்சர் மங்கள சமரவீரவுடன் உத்தியோகபூர்வ விஜயங்களில் பங்கேற்றமை தொடர்பில் முன்னதாக குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## உயிர் வாழ்க்கை

ஒரு சமயம் வயதான ஒருத்தர் புத்தரிடம் வந்து சேர்ந்தாராம். கொஞ்சக் காலம் அங்கேயே இருந்தார். உண்மையான துறவியாகவே மாறி விட்டார் அந்தச் சீடரும்!. ஒரு நாள் புத்தர் அவரைக் கூப்பிட்டிருக்கிறார்.

''துறவியாரே! உங்களுக்கு இப்போது வயது என்ன ஆகுகிறது?'' என்று கேட்டு இருக்கிறார். அதற்கு அந்தச் சீடர் "ஐந்து வயது ஆகுகிறது!'' என்று பதில் சொன்னார். இதைக்கேட்டதும் புத்தருக்கு ஆச்சரியம்!

"உங்களுக்கு எழுபது வயதுக்கு மேலே இருக்கும் போல இருக்கிறது! ஆனால் ஐந்து வயது தான் ஆகுகிறது என்று சொல்லுகின்றீர்களே! என்ன காரணம்'' என்று கேட்டு இருக்கிறார். அதற்கு அந்தச் சீடர்,

''ஏன் அப்படி சொல்கிறேன் என்றால்... உண்மையான ஞானம் எனக்குக் கிடைத்து ஐந்து வருடம் தான் ஆகுகிறது! அன்பு என் உள்ளத்தில் தோன்றி இருப்பதும் இந்த ஐந்து வருடத்தில் தான். இதற்கு முன்னால் நான் வாழ்ந்திருக்கும் வாழ்க்கை ஒரு கனவு மாதிரி எனக்குத் தெரிகின்றது! அந்த வாழ்க்கையினால் எந்தப் பிரயோசனமும் இல்லை என்று தான் தோன்றுகிறது. அதனால் தான் எனக்கு வயது ஐந்து என்று சொன்னேன்'' என்றார்.

அவர் ஐந்து வருடம் தான் இந்த உலகத்தில் வாழ்ந்ததாகவே நினைக்கிறார். அது உண்மை தான். இந்த உலகத்தில் உயிரோடு வாழ்பவர்களை எல்லாம் உயிர் வாழ்பவர்கள் என்று ஒத்துக்கொள்ள முடியாது. வள்ளுவரே இதை ஒத்துக்கொள்வதில்லை.

"வசைஒழிய வாழ்வாரே வாழ்வார்; இசை ஒழிய
வாழ்வாரே வாழா தவர்'' என்கிறார் அவர்.

பழி உண்டாகாமல் வாழ வேண்டும். அது தான் வாழ்க்கை. அடுத்தவர்களுக்கு உதவி செய்து அதனால் வரும் புகழ் இருக்கிறதே அந்தப் ப்கழுடன் வாழ வேண்டும். அடுத்தவர்க்ளுக்குக் கெடுதல் செய்தால் பழிவரும். அந்தப் பழியோடு வாழ்பவர்களை வாழ்பவர்களாகவே சேர்த்துக் கொள்ள முடியாது. கெட்ட எண்ணங்கள் எல்லாம் அறவே இல்லாமல் போக வேண்டும்... அப்புறம் தான் ஒரு தெளிவு வரும்... ஞானம் வரும்...

ஒரு குரு இருந்தார். அவரைப் பார்த்து ஆசீர்வாதம் வாங்கிக் கொண்டு வரலாம் என்று நினைத்துச் சீடன் ஒருத்தன் போனான். போய்க்கொண்டிருக்கும் போது... வழியில் யோகி ஒருத்தர் வந்தார். "எங்கே போகிறாய்?'' என்று கேட்டார். இது மாதிரி.. "குருவைப் பார்க்கப் போகிறேன்''என்று சொன்னான் சீடன்.

அந்தக் குரு மீது இந்த யோகிக்கு ஏற்கனவே பொறாமை! அதனால் அந்தச் சீடனைப் பார்த்து! "உன்னுடைய குருவுக்கு எதுவுமே தெரியாது! அவர் ஒரு முட்டாள்... நீ அவரைவிடப் பெரிய முட்டாள்... அதனால் தான் அவருக்குப் போய் சீடனாக இருக்கிறாய்! உன்னுடைய குருவால் ஏதாவது அற்புதம் செய்து காட்ட முடியுமா? என்னை மாதிரி அவரால் தண்ணி மேல் நடக்க முடியுமா?, ஆகாயத்தில் பறக்க முடியுமா?, இல்லை பூமியில் தான் புதைந்து கிடக்க முடியுமா? அவரால் எதுவுமே முடியாது... அப்படி இருக்கும் போது அப்பேற்பட்ட குருவிடம் போய் ஏன் நேரத்தை வீணாக்குகிறாய்?'' என்று தற்பெருமையுடன் கேட்டார். அதற்கு அந்தச் சீடன்,

''நான் ஏன் அவரைக் குருவாக ஏற்றிக்கொண்டு வணங்குகிறேன் என்றால் அவர் எப்பவும் கோபப்படமாட்டார். பிறத்தியாரைக் குறை சொல்லமாட்டார்... இதைத்தான் அற்புதத்திலே எல்லாம் பெரிய அற்புதம் என்று நான் நினைக்கிறேன்'' என்று சொன்னானாம்.

இதைக் கேட்டதும் அந்த யோகி தலையைத் தொங்கப்போட்டுக் கொண்டு போய் விட்டார். குளத்துக்கு மேல் நடக்கும் அதிசயத்தை விட கோபப்படாமல் நடக்கும் அதிசயம் தான் பெரிது! அப்படி நடக்கப் பழக்கப்படுத்திக் கொள்வது தான் மனிதனுக்கு நல்லது. கவலை எப்படி வருகிறது என்பதற்கு ஒருத்தர் காரணம் சொன்னார்.

முதலில் கோபம் வருமாம்... அதைக் காட்டுவதற்கு எதிரில் யாரும் இல்லை என்றால் அந்தக் கோபம் தன் மேலேயே திரும்புமாம். அந்தச் சூழலில் தான் அதைக் "கவலை''என்கின்றோம். கவலை வருவதற்கு இப்படியும் ஒரு வழி!

மனத்தில் சாந்தி இல்லாமல் வாழ்ந்தால் அது என்ன வாழ்க்கை! சில பேருக்குக் கடைசிக்காலம் வரைக்கும் கூட அது வருவது இல்லை! சர்வாதிகாரி ஒருத்தன்... மரணப்படுக்கையில் கிடந்தான். வைத்தியர்கள் எல்லாம் கைவிட்டு விட்டார்கள்... அவருக்கு வைத்தியம் பார்த்த பெரியவர் ஒருத்தர் வந்தார்.

''செத்துக்கொண்டிருப்பவன் மனச்சாந்தியுடனாவது மறுலோகம் போய் சேரட்டும்'' என்று நினைத்தார். ''மேன்மை தங்கிய அதிபரே! தங்கள் எதிரிகளை எல்லாம் மன்னித்து விடுகிறீர்களா?'' என்று கேட்டார். சர்வாதிகாரி சாவகாசமாகப் பதில் சொன்னானாம். "ஐயா! நான் மன்னித்து விடுவதற்குத் தயாராக இருக்கிறேன். ஆனால் இப்போது எனக்கு விரோதிகள் யாருமே இல்லை! ஏன் என்றால்... அவர்களை எல்லாம் ஏற்கனவே நான் சுட்டுத்தள்ளி விட்டேன்!''



# பாலிதீவு- பயணத்தின் அனுபவம்

05

சோ.நிக்கஞ்
அரியாலை.



காலையிலிருந்து மாலை வரையிலான செயற்பாடுகளுகளுக்கு மதிய உணவு உள்ளடங்கலாக நாங்கள் செலுத்திய பணம் தலா 360,000 IDR. சாதாரணமாக பார்க்கும் போது இந்த விலை ஏற்றுக்கொள்ளக்கூடியது போல இருந்தாலும் இதை விட மிக மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம் என்பதே உண்மை ஆகும்.



தென்னை ஓலையால் செய்யப்பட்ட அர்ச்சனைப் பெட்டி

படகு சவாரியினை வழங்குவதற்கு ஏகப்பட்ட நிறுவனங்கள் கடைவிரித்து இருக்கின்றன. செய்ய வேண்டியதெல்லாம் ஒரு வாடகை காரினை பேரம் பேசி பிடித்து அந்த இடத்திற்கு செல்ல வேண்டியது தான். அங்கிருப்பவர்கள் அசாதாரண விலை சொன்னாலும் எங்கள் அடிமட்ட விலைக்கு பேரம் பேச வேண்டும். மசியாவிட்டால் அடுத்த இடத்திற்கு நடையை கட்ட வேண்டியது தான். ஆனால் அதற்கு அவசியமிருக்காது நீங்கள் நடையை கட்ட விடவேமாட்டார்கள்.

Bagi Vikal அழைத்துச்செல்வதாக கூறிய இடத்தில் அடிக்கடி இடம்பெற்றது Nusa Dua இல் இருக்கும் நீர் விளையாட்டுக்கள் (water sport).

மூன்றாம் நாள் நாங்கள் புதிய தொரு விடுதிக்கு செல்ல வேண்டும். தற்பொழுது இருக்கும் விடுதியை மூன்று நாட்களுக்கு மட்டுமே பதிவு செய்திருந்தோம். எனவே காலையில் மூட்டை முடிச்சுகளுடன் கிளம்பி அடுத்த விடுதியில் பதிவு செய்து Nusa Dua செல்வதற்கு திட்டமிட் டோம். செல்லவிருந்த விடுதியில் மதியம் ஒரு மணி அளவிலேயே அறை ஒதுக்கித் தர முடியும் என கூறியதனால் திட்டத்தினை மதியத் திலிருந்து மாலை வரை செயற்படுத்த முடிவெடுத்தோம்.

திட்டம் எல்லாம் சரி யாரை ஓட்நனராக தெரிவு செய்வதென தெரியவில்லை. முதல் அனுபவமே மோசம். சரி நடப்பது நடக்கட்டும் என எங்களை முதலில் விமான நிலையத்தில் இருந்து விடுதிக்கு அழைத்து வந்த வயன் (Wayan) ற்கு அழைப்பெடுத்து விபரத்தை கறாராக சொல்லி பேரம் பேசுவோம் என கூறினோம்.

Wayan ற்கு அழைப்பெடுத்து எங்கள் திட்டம் இதுதான் எங்களை புதிய விடுதிக்கு இட்டுச்செல்ல வேண்டும். இன்னும் நான்கு இடங்களுக்கு அழைத்து செல்ல வேண்டும் அரை நேரம் தான் என திரும்ப திரும்ப சொல்லி 400,000 IDRற்கு பேரத்தினை முடித்தோம்.

ஆக, இது தான் ஒப்பந்தம். மதியம் 12 மணிக்கு விடுதியிலிருந்து கிளம்பி புதிய விடுதிக்கு போய்(அது நாங்கள் தற்போது தங்கியிருக்கும் விடுதியிலிருந்து 2-3 கிலோ மீற்றர் தூரம் தான்) அங்கிருந்து கிளம்பி Nusa Dua, GWK park, Uluwatu Temple, Jimbaran அழைத்துச்செல்ல வேண்டும்.

சரி இந்த சுவாரஸ்யத்தை கேளுங்கள். விமான நிலையத்திலிருந்து வரும் போது Wayan தனது முழுப் பெயரை சொல்லி (பிற்பாதி பெயர் மறந்து விட்டது) wayan என்றால் தங்கள் மொழியில் இலக்கம் ஒன்று என்றார். பாலியில் இருக்கும் வழக்கமா இல்லை ஒட்டு மொத்த இந்தோனேசியாவிலும் இருக்கின்றதா என தெரியவில்லை. ஒருவரின் முதல் பெயரைக் கொண்டு அவர் வீட்டின் எத்தனையாவது பிள்ளை என்று சொல்லி விடமுடியும்.

முதல் பிள்ளைகள் வாயான் என்றும், இரண்டாவது பிள்ளைகள் மாதே என்றும், மூன்றாவது பிள்ளைகள் நியோமன் என்றும் நீள்கிறது பட்டியல். அதாவது ஒன்று பிள்ளையார், இரண்டு முருகன் என்று நினைத்துப் பாருங்கள்.

ஆக அங்கு ஏகப்பட்ட வாயன்கள் சுற்றித் திரிகிறார்கள். அவர்களில் ஒரு ஒருவரைத்தான் நாங்கள் பிடித்திருக்கிறோம்.

சொன்னது போல நேரத்திற்கு வந்தார் Wayan. நாங்கள் மூட்டைமுடிச்சுகளோடு புதிய விடுதியில் இறங்கி அங்கிருந்து கிளம்ப மதியம் 1.30 மணிக்கு மேலாகிவிட்டது. Wayan இடம் கேட்டதில் Babi Gulling என்னும் பன்றி இறைச்சி உணவுகளில் பாலியில் பிரபல்யமானது என்றார். சரி அதை ஒரு கை பார்த்து விடுவோம் என போகும் வழியில் பாஃபி குல்லிங் கிடைக்கும் ஏதாவது ஒரு கடையில் நிறுத்துமாறு கூறினோம்.

தெருவெல்லாம் மூங்கில்குழாய்மற்றும்தென்னை ஓலை கொண்டு அலங்கரித்திருந்தார்கள். என்ன ஏது என wayan இடம் கேட்டதில் இன்றைக்கு முழுநிலவு (நம்மூர்போயா) நாள்ஆகவே கோவில்களில் விசேட பூஜைகள் காலையில் இடம்பெற்றது என கூறினார்.

அடடே நம் நாட்டிலும் பௌத்தர்கள் முழு நிலவில் விசேட பூஜை வழிபாடுகள் செய்வார்கள் என்றோம். அவர்களின் வழிபாட்டு முறையில் பௌத்தம் மற்றும் இந்து கலவையாக இருக்கிறது. முழுநிலவில் விசேட வழிபாடு என்பதில் ஆச்சரியமேதும் இல்லை.

முழுநிலவில் உங்களுக்கு விடுமுறை ஏதும் இல்லையா என கேட்டதற்கு அப்படி ஏதும் இல்லை எனவும் பாடசாலை மாணவர்கள் அன்றைய தினம் கலாசார உடையில் பாடசாலை செல்வார்கள் எனவும் கூறினார் wayan. வீதியெங்கும் கலாசார உடையுடன் மக்களைகாணக்கூடியதாக இருந்தது.

இதுபோகஇன்னொன்றை சொல்லி ஆக வேண்டும். பாலி மக்கள் எல்லோரது வீடுகளிலும் கட்டாயமாக ஒரு கோவில் இருக்கும். வீடு மட்டுமல்ல கடைகள், விடுதிகள், களியாட்ட விடுதிகளிலும் கூட பெரிதாக இடம் கிடைக்காவிடில் கடைசி ஒரு குட்டியாக வேலைப்பாடுடன் கூடிய ஒரு தூணாவது வைத்து வழிபடுகிறார்கள்.

வழிபடுகிறார்கள் என்றால் சும்மா இல்லை தினமும் மூன்று வேளை உள்ளங்கையளவு தென்னை ஓலையால் வேய்ந்த சிறு அர்ச்சனைப்பெட்டிகள் போல வைத்து வழிபாடு செய்கிறார்கள்.

நாங்கள் கூட அவர்களின் கலாசாரத்தை பாதுகாக்கும் நோக்குடன் கடையில் விற்பனைக்கிருந்த தலைப்பாகையை அணிந்து படம் பிடித்துக்கொண்டோம். விதம் விதமாக நாங்கள் பன்றி இறைச்சியை தின்று தள்ளிக்கொண்டிருந்த போது எங்கள் ஆத்மாவில் ஒன்று அதை வேடிக்கை பார்த்துக்கொ ண்டிருந்தான். அவனுக்கு அது ஒவ்வாமையை உண்டு பண்ணி விட்டாலும் என்ற பயம்.



கலாசார உடையில் மக்கள்

(பயணம் தொடரும்)

# 'இறை சுமக்கும் பணியே பணியாக தொண்டாற்றிய ஸ்ரீ'

## மறைந்தார் மாண்பு

இறைவனால் எமக்கு அளிக்கப்பட்ட இப்பூதவுடல் நாம் நல்லவனாக நன்னெறிக்கமைய சமூகத்தால் ஏற்கும் நற்பண்பு மிக்க மனிதனாக மிளிரும் பொழுது எம் உடல் புனிதம் பெற்று புகழுடல் ஆக பல வருடங்கள் சமுதாயத்தினால் போற்றப்படுகின்றது.

நல்லைக்கந்தனின் பாதங்களை தோளிலேயே ஐம்பத்து மூன்று வருட காலமாக சுமந்து அண்மையில் அவன் கழல்பெற்றவரே அமரர் கோவிந்தராஜா ஐயர் ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள்.

நல்லைப் பெருமானின் திருவீதியில் உலாவி வந்து அணைவராலும் ஸ்ரீயண்ணவும்ஸ்ரீ அண்ணை எனவும் ஸ்ரீ ஐயர் எனவும் பாசத்துடன் பழகிவந்தவர். சமூகத்தில் இடம்பெறும் பிணக்குகள், சிறு சிறு மனஸ்தாபங்கள், ஆலயம் சம்பந்தப்பட்ட கருத்து முரண்பாடுகளை முன்னின்று சீர்செய்து பல தரப்பாருடனும் அன்பொழுக கலந்துரையாடி அவர் உள்ளங்களிலெல்லாம் அன்பு மீதூரப் பெற்று சமுதாய சமாதான மனிதனாக வாழ்ந்தார். அரசியல் தலைவர்களிடமும் அன்பாகவும் நகைச்சுவை ததும்பவும் பேசி பிரச்சினைகளை எளிதாகவும் அவர்கள் ஏற்று சமூகத்தில் நல்ல மனிதர்களாக வாழ்வதற்கு அவர்களின் ஆலோசகர்களாகவும் விளங்கினார்.

நல்லைப்பெருமானின்திருவிழா விசேட நாட்களில் அறு சுவை கலந்தஅன்னதானபணியை இளைஞர்களுடன் இளைஞ ராக கண்விழித்து நல்லைக் கந்தப் பெருமானின் அடியார்களுக்கு வழங்கிய புண்ணிய சீலராக விளங்கினார். இத்தகைய பெருமைகளையும் சமூக மதிப்பையும் பெற்ற அமரர் ஸ்ரீஸ்கந்தராஜா நோய்வாய்ப்பட்ட நிலையிலும் நல்லைக்கந்தனை சத்திர சிகிச்சையின் பின்னரும் உடல் தளராமல் தேர் உற்சவ வசந்த மண்டப காட்சியையும் திருக்கல்யாண திருவிழா காட்சியையும் கண்டின்புற்று தன் கரங்களாலே பன்னூறு அடியார்களுக்கும் கந்தன் பிரசாதத்தை வழங்கி இன்புற்றார்.


இவ்வகை பேறுபெற்ற அமரர் ஸ்ரீஸ்கந்தராசா நல்லூர்பதியில் இசை பேரறிஞர் குடும்ப வாரிசாக சங்கீத இசையாசிரியர் சோமசுந்தர குருக்கள் கோவிந்தராஜா ஐயர் பர்வதாம்பாள் தம்பதிகளுக்கு மூன்றாவது அருமை ந்தனாக சுமார் அறுபத்து ஒரு வருடங்களுக்கு முன்னர் பிறந்தார்.

இவரின் தகப்பனாரின் சகோதரி, இவரின் மூத்த சகோதரி என்போர் இசை வல்லாளராக சங்கீத ஆசிரியராக பணியாற்றி ஓய்வு பெற்று சிறப்பாக வாழ்ந்து வருகின்றார்கள்.

இவை மட்டுமல்லாமல் அமரர் அவர்க்ள் துணைவியாராக வேலணை ஆதி சைவபரம் பரையில் உதித்த அறிவழகி எனும் பட்டதாரி உப அதிபர், ஆசிரியை நல்மணம் புரிந்து இசைக் குடும்பமென சந்ததி வாழ தன் பெறுமவற்றுள் சிறந்த செல்வங்களான பிள்ளைகளுக்கு ஸ்ரீசங்கமீரா, ஸ்ரீசங்கீதன், ஸ்ரீ சங்கநேசன் எனப் பெயர் சூட்டியும் கல்வி செல்வத்தையும் கூடவே ஊட்டி வளர்த்தார்.

வாழ்வின் மனித வாழ்வு நீர்க்குமிழி .எமது மனித சந்தைக் கூட்டத்தில் நாம் எல்லோரும் பாவ புண்ணியங்களை கொள்வனவு செய்ய வந்த நுகர்வோர். கண்டோம், பேசினோம் சென்றோம் என வாழ்வு அமைந்து விட்டது. நல்ல மனிதர்கள் நானிலத்தில் வாழ்வதால் இன்றும் இவ்வுலகு வாழ்ந்து கொண்டிருக்கின்றது என கூறினான் ஓர் வாழ்வியல் தத்துவஞானி.

எனவே ஆலமரம் போல் வாழ்ந்து அனைத்திடத்திலும் தனது நற்சேவையான விழுதுகளை விட்டுச் சென்ற நல் மனிதன் என் அன்புள்ளத்தில் அணையாது நினைவுகளை ஏற்றிச் சென்ற அருமை மைத்துனராம் ஸ்ரீஸ்கந்தராஜா புகழுடல் நல்லைக் கந்தன் உற்சவத்தில் எழுந்தருளும் அலங்காரக் கந்தனின் திவ்விய பாதாரவிந்தங்களுக்கு கீழே வரும் வாகன பின்புற இளைஞர் தோள்களில் மீட்டும் என கந்தன் கருணை வேண்டி எல்லோரும் எல்லாம்பெற்று இன்புற்றுவாழ வேண்டி அமைகின்றேன் என்றும் இன்பம் பெருகுக.



ப.பாலசுப்பிரமணியம்
ஜே.பி.
(வேலணைபாலா)

மகேந்திரனுக்கு எதிராக சர்வதேச பிடியாணை

# மத்திய வங்கி ஊழலால் அரசிற்கு நட்டம் ஏற்படவில்லை-ராஜித

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியில் இடம்பெற்ற ஊழலால் அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்படவில்லை என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

பேர்பெச்சுவல் நிறுவனத்தின் 12 பில்லியன் ரூபாய் பணம் இலங்கை மத்திய வங்கியில் இருக்கின்றது. அந்த பணம் அரசாங்கத்திற்கு கிடைத்தால், அரசாங்கத்திற்கு ஒரு பில்லியன் மேலதிகமாக கிடைக்கும்.


இந்த ஊழல் சம்பந்தமாக இரண்டு பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எதிராக வழக்கும் நடைபெற்று வருகிறது.



இதனைத் தவிர இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனைக் கைது செய்ய சர்வதேச பிடியாணையும் பிறப்பிக்கப்பட்டுள்ளது எனவும் ராஜித சேனாரட்ன தெரிவித்தார். (இ-7)

# புஸ்ஸல்லாவ ஊற்று மாரியம்மன் கோவிலில் விசித்திர ஊற்று நீர்

## அதிசயத்தில் மக்கள்



(புஸ்ஸல்லாவ)

புஸ்ஸல்லாவ பிரதேசத்திற்குட்பட்ட வகுகப்பிட்டிய பிரதேசத்தில் ஊற்று மாரியம்மன் என்ற சிறிய கோவிலில் விசித்திரமான ஊற்று நீர் காணப்படுவதாக மக்கள் அதிசயித்துள்ளனர்.

குறித்த ஊற்று நீர் குளிர்மையாக, செறிவு கூடியதாக, விரும்பி பருகுவதற்கு சுவையானதாகவும், மருத்துவ குணமிக்கதாகவும் காணப்படுவதாக மக்கள் தெரிவித்தனர்.

மேலும் வெயில் காலங்களிலும் இந்த நீர் ஊற்று வற்றுவதில்லை என்றும் சிறிய ஊற்றாக வெளிவந்து ஆறாக ஓடும், இந்த நீரை மக்கள் குடிப்பதற்கும், விவசாயம் செய்வதற்கும் பயன்படுத்தி வருகின்றனர்.

அத்துடன் இந்த இடத்தில் "காக்கா பொன்னு" என்று சொல்லக் கூடிய கனிய வளமும் காணப்படுவதால் நீருடன் தங்கத் துகள்கள் போன்று காக்கா பொன்னும் நீர் பொங்கி எழுகின்றது. (இ-7)

# விற்பனை மண்டபத்தை புனரமைக்க கோரிக்கை



(வரணி)

தென்மராட்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாகத்தின் கீழ் உள்ள வட வரணி சங்கக் கிளையின் விற்பனை மண்டபமானது 40 வருடங்களுக்கு மேலாக எவ்வித புனரமைப்பும் இன்றி விழும் நிலையில் காணப்படுகின்றது.

ஓடுகள் உடைந்து விழுந்து காணப்படுவதுடன் இல்லாமலும் உள்ளன. இதனால் மழையில் நனைந்து மரங்கள் உக்கி விழும் நிலையில் மண்டபம் காணப்படுகின்றது.

அத்துடன் மண்டபத்தின் கட்டடமும் வெடிப்புக்குள்ளாகி காணப்படுகின்றது.

இம்மண்டபமானது முன்னர் வெங்காயம் கொள்வனவு செய்து சங்கத்தால் வியாபாரிகளுக்கு விற்பனை செய்வதற்காகப் பயன்படுத்தப்பட்டதாக மக்கள் தெரிவித்தனர்.

பின்னர் நாட்டில் இடம்பெற்ற யுத்த சூழ்நிலை காரணமாக வரணி கிராம மக்கள் வடமராட்சி பிரதேசத்திற்கு இடம்பெயர்ந்து சென்றமையால் வியாபார நடவடிக்கைகள் கைவிடப்பட்டு சங்கமும் இயங்காமல் மூடப்பட்டிருந்தது. பின்பு மக்கள் மீளக்குடியேறி தமது இயல்பு வாழ்க்கையை மேற்கொண்ட போது சங்கமும் மீளத் திறக்கப்பட்டது.

எனினும் விற்பனை மண்டபமானது சேதமடைந்து ஓடுகள் கழற்றப்பட்டும் இருந்தன. இதனை அப்போது புனரமைக்காமையால் இப்போது முழுமையாக சேதமடைந்துள்ளது. மண்டபத்தின் புனரமைப்புத் தொடர்பாக கிளையின் நிர்வாகத்தினரால் தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் பொது முகாமையாளருக்கு அறிக்கை மூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. அவர்கள் ஆணையாளரின் அனுமதி பெற்றால் தான் மண்டபத்தை புனரமைக்க முடியும்.

எனவே தற்போது மரக்கறி, மீன் போன்றவற்றை விற்பனை செய்வதற்கு இம் மண்டபத்தை பயன்படுத்துவதற்கு நிர்வாகத்தினர் அனுமதி கேட்டுள்ளனர்.

ஆகவே யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் இவ் விற்பனை மண்டபத்தைப் புனரமைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள், நிர்வாகத்தினர் வேண்டுகோள் விடுப்பதுடன் வியாபாரிகளின் பயன்பாட்டிற்கு வழங்குவதற்கு அனுமதிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளனர். (இ-103)

# அரச ஊடகங்கள் சிலவற்றை ஜனாதிபதி வைத்திருக்க முஸ்தீபு

(கொழும்பு)

அரச ஊடகங்களில் ஒன்றையோ அல்லது இரண்டையோ ஜனாதிபதியின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.



ஏற்கனவே ஜனாதிபதியின் கீழ் இதுவரை இயங்கிய நிறுவனங்கள் அவ்வாறே செயற்படும் எனவும் அவற்றுக்கு மேலதிகமாக பொலிஸ் திணைக்களமும் அரச ஊடக நிறுவனம் ஒன்றோ அல்லது இரண்டோ சேர்க்கப்படவுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

ஜனாதிபதியின் கீழுள்ள சட்டம் ஒழுங்கு அமைச்சை ஜனாதிபதி கொலைச் சதி முயற்சி குறித்த விசாரணைகள் நிறைவடைந்த பின்னர் பிரதமர் ரணிலிடம் ஒப்படைக்கவுள்ளதாக ஐ.தே.கவின் அமைச்சர் நவீன் திஸாநாயக்க் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தார்.

அரசாங்கத்துடன் ஜனாதிபதி முறுகல் நிலையில் காணப்படுவதனால் ஊடகங்கள் ஜனாதிபதிக்கு எதிராகப் பயன்படுத்தப்பட வாய்ப்பு இருக்கின்றது.

இதனால் ஜனாதிபதி சில அரச ஊடகங்களை வைத்திருக்க நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிய வருகின்றது.

எதிர்வரும் தேர்தல்களின் போதும் அரசாங்கத்திலுள்ள ஐ.தே.கட்சியானது தனது பிரசாரத்துக்கு அரச ஊடகங்களைப் பயன்படுத்தும் என்ற அச்சம் பொதுவாகவே எதிர்க்கட்சியிடம் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பாதசாரிகள் கடவையில் பாரிய பள்ளம்; மக்கள் அவதி



(யாழ்ப்பாணம்)

யாழ். நவாலி சென். பீற்றர்ஸ் றோ.க.த.க.பாடசாலையின் முன்பாகவுள்ள பாதசாரிகள் கடவையில் பாரிய பள்ளம் ஏற்பட்டுள்ளதால் வீதியால் செல்வோரும், வீதியைக் கடக்கும் பாதசாரிகளும் மழை காலத்தில் பல அசௌகரியங்களை எதிர் கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வீதியைத் தினமும் பலர் தமது அன்றாடத் தேவைகளுக்காகப் பயன்படுத்தி வரும் நிலையில் மஞ்சள் கோட்டுப் பகுதியில் காணப்படும் குழியில் மழை காலங்களில் நீர்தேங்கி நிற்பதால் குழி சரியாகத் தெரியாமல் விபத்துக்கள் ஏற்படுகின்றன.

எனவே குறித்த விடயம் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டுமென பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ)

# பாடப்புத்தகம் தவிர வேறு பயிற்சி நூல்களை மாணவர்களுக்குப் பெற்றுக்கொடுக்கத் தடை

## வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளில் மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் மேலதிக கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்துவதற்கென வலயக் கல்விப் பணிப்பாளரின் எழுத்து மூலமான அனுமதி வழங்கப்பட்ட நூல்கள், கையேடுகள் மட்டுமே பாடசாலைகள் கொள்வனவுசெய்தோ அல்லதுஇலவசமாகப்பெற்றோ பயன்படுத்த முடியும்.

பாடசாலைகளில் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் பாடப்புத்தகங்கள் தவிரவேறு நூல்களையோ பயிற்சி நூல்களையோ கையேடுகளையோ எனது எழுத்து மூல அனுமதியின்றி மாணவர்களுக்குப் பெற்றுக் கொடுத்தல் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திராசா அறிவித்துள்ளார்.

பல்வேறு மட்டங்களிலும் வியாபார நோக்கத்துடன் தரமற்றதும் பொருத்தமற்றதும் தேவையற்றதுமான பல பயிற்சி நூல்கள், கையேடுகள் மாணவர்கள் மத்தியில் விற்பனை செய்யப்படுவதாகத் தகவல்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் பாடசாலை மட்டத்தில் மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல்கள் பாரிய பிரச்சினைகளுக்கு உள்ளாகியிருப்பதோடு இச் செயற்பாடுகள் பரீட்சை அடைவு மட்டங்களிலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளமை இனங்காணப்பட்டுள்ளது.

எனவே வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் மாணவர்களின் மேலதிகச் செயற்பாடுகளுக்காகப் பயிற்சிப் புத்தகங்கள் தேவைப்படும் சந்தர்ப்பத்தில் அது தொடர்பில் வலயத்தின் உரிய பாடத்துக்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர் குழுவினதும் கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளரின் சிபார்சுடனும் முன்வைக்கப்பட்டு என்னால் அனுமதிவழங்கப்பட்டிருக்க வேண்டும் என்பதைச் சகல அதிபர்களுக்கும் அறியத்தருகின்றேன். எனது அனுமதிக்கடிதம் வழங்கப்பட்ட பயிற்சி நூல்களை மட்டுமே கொள்வனவு செய்து மாணவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இவ்வாறு கொள்வனவு செய்து மாணவர்களுக்கு வழங்கப்பட்ட நூல்களின்கையாளுகை தொடர்பில் உரிய பாட உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் வழிகாட்டுதல்களை வழங்குவர்.

மேலும் நூலகத் தேவை கருதியோ அல்லது ஆசிரியர்களின் கற்பித்தல் தேவை கருதியோ எந்தவொரு துறை சார் நூல்களையும் பாடசாலையின் தேவை கருதி வாங்கும் போதும் அதன் பயன்படு தன்மை தொடர்பில் எனது அங்கீகாரம் பெறப்பட்டிருக்க வேண்டும் என்பதைச் சகல அதிபர்களும் கவனத்துக்கெடுத்துச் செயற்படுமாறு அறியத்தருகின்றேன் என அவர் மேலும் அறிவித்துள்ளார். (இ)

# கிராமத்திற்குள் புகுந்து மூன்று வீடுகளை சேதப்படுத்திய யானை; அச்சத்தில் மக்கள்





(போரதீவு)

போரதீவுப்பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட திக்கோடைக் கிராமத்திற்குள் புகுந்த யானை மூன்று வீடுகளை உடைத்து பலத்த சேதத்தை ஏற்படுத்தியுள்ளதாக மக்கள் தெரிவித்தனர்.

திக்கோடை கிராமத்தில் தேசிய வீடமைப்பு அதிகார சபையால் அமைத்துக் கொடுக்கப்பட்ட வீட்டுத்தில் அமைந்துள்ள மூன்று வீடுகளே குறித்த யானைத் தாக்குதலுக்குள்ளாகி சேதப்படுத்தப்பட்டுள்ளன.

நேற்று அதிகாலை 2 மணியளவில் புகுந்த யானை கூட்டம் வளவில் இருந்த மரங்களையும் மேற்படி வீடுகளையும் சேதப்படுத்தி சென்றுள்ளதாகவும் தங்களுக்கு யானைகளின் தொல்லையிலிருந்து பாதுகாப்பைப் பெற்றுத்தரவேண்டியது அதிகாரிகளின் கடமையென வும் மக்கள் தெரிவித்தனர். (இ-7)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

127

உள்ளூரில் நுகரப்பட்ட அரிசியில் 75 சதவீதம் இறக்குமதி செய்யப்பட வேண்டியேற்பட்டதுடன் மக்கள் அதைப் பணம் கொடுத்து வாங்கவேண்டிய நிலையும் ஏற்பட்டது.

அரிசியை இறக்குமதி செய்வது மலிவாக இருந்ததனால் அரசாங்கம் நெற்செய்கையில் ஊக்கமிழக்கச் செய்ததுடன் உள்ளூர் அரிசி உற்பத்தியை இலாபமற்றதாக்கியது.

நெற்செய்கையை விட பணப்பயிர் உற்பத்தி அதிகரித்தது. ஏற்றுமதிச் சந்தைகள் முக்கியத்துவம் பெற்றன. ஏற்கனவே இடம்பிடித்துக் கொண்டிருந்த புகையிலைச் செய்கை விரிவாக்கமடைந்தது. 1851 இல் யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் 10 ஆயிரம் ஏக்கர் நிலம் புகையிலைச் செய்கைக்குப் பயன்படுத்தப்பட்டு கிடைத்த விளைச்சல் இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.

வெங்காயம், மிளகாய், மரக்கறி வகை, தேங்காய், நிலக்கடலை, ஆமணக்கு விதை போன்றவற்றின் செய்கை விரிவடைந்தது. விவசாயிகள் இதனால் வாழ முடிந்தது மட்டுமன்றி தமது வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்தக்கூடியதாகவிருந்தது.

இத்துடன் பாரம்பரிய பொருளாதார வளங்களும் முக்கியமானவையாகி ஆரம்ப பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் உள்ளூர் மக்களிடையே பணப்புழக்கம் அதிகரித்தது. மர வியாபாரம் மிகவும் பிரபலமாகி விரிவான முறையில் நடைபெற்றதுடன் நாட்டுக்கும் மக்களுக்கும் பண வருவாயைத் தந்தது.

வன உற்பத்திப் பொருட்களின் உற்பத்தியைப் பொறுத்தவரை இலங்கை ஒரு விசேட நிலையில் இருந்தது. இங்கு காடும் வனநிலங்களும் பரந்து விரிந்திருக்க மக்கள் தொகை அயல்நாடாகிய இந்தியாவுடன் ஒப்பிடும்போது மிகக் குறைவாக இருந்தது.

இக்குடியேற்ற நாட்டின் தரமான மரங்களின் உள்ளூர்ப் பாவனை மிக மிகச் சிறியளவிலேயே இருந்தது. மக்கள் தொகையில் பெரும்பகுதியினர் கிராமங்களில் வாழ்ந்து தரங்குறைந்த மரங்களைப் பயன்படுத்தித் திருப்தியடைந்தனர்.

கொழும்பு, காலி, கண்டி போன்ற இடங்களிலேயே



"கோப்பிப் பயிர்ச்செய்கை 1830-1849களில் ஆரம்பிக்கப்பட்ட சில தசாப்தங்களின் பின்னர் தேயிலை பயிரிடப்பட்டது. மரம் வெட்டுதல் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆரம்பித்தது. 1840 இன் பின்னர் மர விற்பனை வழமையான வியாபாரமாகி பல்வகை மரங்களும் உள்ளூர் பாவனைக்கும் ஏற்றுமதிக்காகவும் ஏராளமாகத் தொடர்ச்சியாக வெட்டப்பட்டன. மரந்தறிப்பதற்கு அனுமதிப்பத்திரம் பெறும் நடைமுறை வழக்கில் இருந்தது"

## பிரித்தானியரின் ஆரம்ப ஆட்சிக்காலமும் தமிழரும் (கி.பி. 1796-கி.பி. 1850)

தரமான மரங்கள் பொதுமக்களால் சிறிதளவு உபயோகப்படுத்தப்பட்டன. எனவே தரமான மரங்களில் பெரும் பகுதி வெட்டி வீழ்த்தப்பட்டு பிரதானமாக அதிகளவு தேவையைக் கொண்டிருந்த இந்தியாவுக்கும் மொரீஷியசுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டது. அன்றியும் சீனா, ஐரோப்பா, ஐக்கிய அமெரிக்க நாடுகளுக்கும் அனுப்பப்பட்டன.

பனை வருடம் முழுவதும் பல்வேறு வழிகளில் பயனளித்ததால் வடபால் மக்களுக்கு அது பெரும் வரப்பிரசாதமாக இருந்ததுடன் பனை இந்தியாவுக்கும் பெருமளவில் ஏற்றுமதியாயிற்று.

1850களில் 35 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் பனைகள் யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் மட்டும் காணப்பட்டதுடன் 6 இலட்சம் பனை மரத்துண்டுகள் வருடாந்தம் ஏற்றுமதியாயின. இவற்றில் சராசரியாக 297973 துண்டுகள் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டன.

வனப்பொருள் உற்பத்திகளான சாயப்பட்டை, பாலைப் பழவற்றல், வேலம்பட்டை என்பனவும் பிரதானமாக இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

ஏனைய வகை மரங்களான சப்பன் மரம், கருங்காலி, முதிரை, பாலை என்பவை இந்தியா, சீனா, ஐரோப்பா, அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. ஐரோப்பிய ஐக்கிய அமெரிக்க நாடுகளின் சந்தைகள் சீனாவினது போன்று நிலையானதாக இல்லாதபோதும் பெருமளவு இலங்கை மரங்களை வாங்கியதுடன் உயர்ந்த விலையையும் தொடர்ந்து கொடுத்துக் கொண்டிருந்தன.

கோப்பிப் பயிர்ச்செய்கை 1830-1849களில் ஆரம்பிக்கப்பட்ட சில தசாப்தங்களின் பின்னர் தேயிலை பயிரிடப்பட்டது. மரம் வெட்டுதல் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆரம்பித்தது.

1840 இன் பின்னர் மர விற்பனை வழமையான வியாபாரமாகி பல்வகை மரங்களும் உள்ளூர் பாவனைக்கும் ஏற்றுமதிக்காகவும் ஏராளமாகத் தொடர்ச்சியாக வெட்டப்பட்டன. மரந்தறிப்பதற்கு அனுமதிப் பத்திரம் பெறும் நடைமுறை வழக்கில் இருந்தது.

இதன்கீழ் உள்ளூர் விலையின் அடிப்படையிலும் ஏற்றுமதி செய்வதானால் எந்தத் துறை முகத்திற்கு அனுப்பப்படுகின்றதோ அங்கே உள்ள விலையின் அடிப்படையிலும் அனுப்பும் செலவு நீங்கலாக ஓர் உரிமைப்பங்கு கணிக்கப்பட்டு அறவிடப்பட்டது.

மரந்தறிப்பதற்கு முன்னர் மாவட்ட வருமான அதிகாரியிடம் வைப்புப் பணம் செலுத்தி அனுமதிப்பத்திரம் பெற வேண்டியிருந்தது. எஞ்சிய பணம் மரம் தறிக்கப்பட்டதன் பின்னர் அதை இன்னொரு இடத்திற்குக் கொண்டு செல் வதற்கான அனுமதிப்பத்திரம் பெறுகையில் செலுத்தப்பட்டது. இருந்தபோதிலும் எல்லா இடங்களிலும் மரங்கள் களவாகத் தறிக்கப்பட்டன.

வடக்கு- கிழக்கின் சகல மாவட்டங்களிலும் பழைய அனுமதிப்பத்திரப் பதிவேடுகள் முழுமையாக இல்லாதபோதும் முல்லைத்தீவுப் பதிவேடுகளில் 1844 இல் இருந்து 1873 வரை முழுமையான பதிவுகள் காணப்படுகின்றன.

இக்காலத்தில் விற்கப்பட்ட மொத்த மரங்களின் மதிப்பு 1959537.00 ரூபாய்களாகும். ஒரு சிறிய இடத்தின் வருமானமே இவ்வளவு என்றால் மர வியாபாரத்தினால் மட்டும் இந்த இடங்களுக்கு வந்து குவிந்த பணம் கணிசமாக இருந்திருக்கும் என அனுமானிக்க முடிகின்றது.

(தொடரும்)

# இந்த அரசியல் முஸ்லிம் சமூகத்தினருக்கு 4 கபினட், 4 இராஜாங்க அமைச்சுக்கள்



(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தில் முஸ்லிம் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் நான்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களும் நான்கு இராஜாங்க அமைச்சர்களும் இதுவரையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளனர்.

இதன்படி, பாராளுமன்ற உறுப்பினர்களான ரவூப் ஹக்கீம், றிசாத் பதியூதீன், கபீர் ஹாஷிம் மற்றும் அப்துல் ஹலீம் ஆகியோர் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாக சத்தியப்பிரமாணம் செய்துள்ளனர்.

இராஜாங்க அமைச்சர்களில் நான்கு பேர் முஸ்லிம் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டனர்.

இந்த வகையில், பைசல் காசிம் சுகாதார போசணை மற்றும் சுதேச மருத்துவத் துறை இராஜாங்க அமைச்சராகவும், எச்.எம்.எம். ஹரீஸ் மாகாண சபைகள், உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சராகவும், அமீர் அலி விவசாய, நீர்ப்பாசன, கிராமிய பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சராகவும், அலி சாஹிர் மௌலானா சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சராகவும் நியமனம் பெற்றுள்ளனர். (இ-7)

# அப்பாக்களுக்குத் தான் தெரியும் மக்களின் பிரச்சினைகள்-மகிந்த



(மித்தெனிய)

பிள்ளைகள் உள்ள அப்பாக்களுக்குத்தான் தெரியும் மக்களின் பிரச்சினைகள் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மித்தெனிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மத நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாம் சிறிய பௌத்த பிக்குகளுக்கு பல்வேறு மொழிகளைக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

அது தமிழாக இருக்கலாம், ஆங்கிலமாக இருக்கலாம் அல்லது பிரெஞ்சு மொழியாகக்கூட இருக்கலாம்.

மொழிக் கல்வியைக் கட்டாய பாடமாக அறிவித்து சிறிய பௌத்த பிக்குகளுக்கு அவற்றைக் கற்றுக்கொடுக்க வேண்டும்.

மொழிகளைக் கற்றுக் கொடுப்பதன் மூலம் பௌத்த மதத்தை விஸ்தரிக்க முடியும் என்பதுடன், மரித்துப் போகும் மொழிகளில் ஒன்றாகவே சிங்கள மொழி காணப்படுகின்றது.

பௌத்த மதத்தின் ஊடாகவே சமாதானத்தையும், நல்லிணக்கத்தையும் ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

பிள்ளைகள் உள்ள தந்தையரால் தான் நாட்டு மக்களின் பிரச்சினைகளைப் புரிந்து கொள்ள முடியும், அதனையும் நான் நினைவுபடுத்துகின்றேன்.

கடந்த காலங்களில் மிகவும் மோசமான முறையில் எவ்வித கேள்வியும் இன்றி வரி அறவீடு செய்யப்பட்டது.

இதனால் மக்களால் வாழ்க்கையை கொண்டு நடத்திச் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டது. மிளகு இறக்குமதி செய்யப்பட்டு இலங்கை மிளகுடன் கலந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

இதனால் மிளகின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. எமது ஆட்சிக் காலத்தில் மிளகு விற்பனை தொடர்பில் அரசாங்கம் தலையீடு செய்திருந்தது.

எனினும் இந்த அரசாங்கத்திடம் அவ்வாறான திட்டங்கள் எதுவும் கிடையாது. இந்த அரசாங்கம் விவசாயம் பற்றி எவ்வித முன்னுரிமையையும் வழங்குவதில்லை.

வெளிநாடுகளிலிருந்து குறைந்த விலைக்குப் பொருட்களை இறக்குமதி செய்ய முடியும் என்ற நிலைப்பாட்டை அரசாங்கம் கொண்டுள்ளது. எனினும் நாம் அதற்கு நேர் எதிரான கொள்கைகளை பின்பற்றுகின்றோம் என மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (இ-4)

# சு.க. உறுப்பினர்களுக்கு அமைச்சு சட்டமா அதிபரிடம் ஆலோசனை

## அஜித் பி.பெரேரா தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கு, அமைச்சு பதவி வழங்குவது தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனை பெற்ற பின்னர் தீர்மானங்களை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள், தகவல் தொழில்நுட்ப அமைச்சரான (அமைச்சரவை அந்தஸ்து அற்ற) அஜித் பீ பெரேரா இதனைத் தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் மாலை அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (இ-7)




# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1596

Search for people, places and things

## சரத்

**பசி மறந்த பின் பந்திக்கு அழைப்பதும் மனசு வெறுத்தபின் மன்னிப்புக் கேட்பதும் ஒன்றுதான்**




## தர்சன்

**மற்றவர்களைக் காயப்படுத்தும் புன்னகையைவிட யாரையும் காயப்படுத்தாத மௌனமே சிறந்தது**



## கவிப்பிரியா

**கோபமும் புயலும் ஒரே மாதிரிதான் அடங்கிய பிறகுதான் தெரியும் அடைந்த நஷ்டம் எவ்வளவு என்று**




## தீபன்

**பெண்ணின் அன்பு என்பது சிப்பிக்குள் இருக்கும் முத்து போன்றது... அதைத் திறக்கத் தெரியாமலே உடைத்தவர்கள் அதிகம்**



## முத்து

**டச் இல்லாத நண்பர்களை டச்சில் கொண்டு வந்ததே டச் போன் செய்த சாதனை**



## ரகு

**நமக்கு துரோகம் செய்தவர்களை மட்டும் ஒருபோதும் மன்னிக்கவும் கூடாது, மதிக்கவும் கூடாது**



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# மக்கள் பணியைத் தாமதமாகச் செய்யும் அரச அதிகாரிகளுக்குத் தண்டனை

## அமைச்சர் மத்தும பண்டார எச்சரிக்கை



(கொழும்பு)

மக்களுக்காக பணி செய்யும் போது அரச ஊழியர்களால் பாரிய தாமதம் ஏற்படுத்தப்படுவதாக, பொது நிர்வாகம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.அவ்வாறு பணியைத் தாமதமாக செய்பவர்களுக்குத் தண்டனை வழங்கப்படும் என அமைச்சர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அதற்கான சட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது. தொழிற்சங்கங்கள் பொது மக்களுக்கு சேவை செய்வதற்காக உள்ளதே தவிர பணியை நிறுத்துவதற்கு அல்ல என அமைச்சர் தெரிவித்தார்.

இவை அனைத்து மக்களுக்காகச் செய்யப்படும் பணி.அதனை உரிய முறையில் நிறைவேற்ற வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்விற்குப் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# இலங்கையில் அரசியல் நெருக்கடி இந்தியாவும் அமெரிக்காவும் ஒன்றிணைந்து மிகவும் நெருக்கமாக செயற்பட்டன



(கொழும்பு)

இலங்கை, மாலைதீவு நாடுகளில் அண்மையில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகளின் போது, அமெரிக்காவும் இந்தியாவும் மிக நெருக்கமாக ஒருங்கிணைந்து செயற்பட்டதாக, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான, பதில் பிரதி உதவிச் செயலர் டேவிட் ரான்ஸ் தெரிவித்துள்ளார்.

தெற்காசிய நாடுகளான இலங்கை மற்றும் மாலைதீவு ஆகியவற்றின் நெருக்கடிகள் தொடர்பாக, ஏஎன்ஐ செய்திச் சேவையால் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"இந்தோ- பசுபிக் பிராந்தியத்தின் நிகர பாதுகாப்பு வழங்குநராக இந்தியாவின் தோற்றத்தை ஆதரித்து வருகிறது.

அமெரிக்கா, இந்தியாவுடனான ஒருங்கிணைப்பு விரிவானது. அது வளர்ந்து வருகிறது.

சிறப்பாக, இலங்கை மற்றும் மாலைதீவு விவகாரங்களில், நாங்கள் இந்திய அரசாங்கத்துடன் மிக நெருக்கமாக ஒருங்கிணைந்திருக்கிறோம்.

வோஷிங்டனிலும், டில்லியிலும் உள்ள இந்திய அதிகாரிகளுடன் நான் தனிப்பட்ட முறையில் நெருக்கமான தொடர்புகளை வைத்திருக்கிறேன்.

எனவே நாங்கள், இந்த விவகாரங்களை எப்படி கூட்டாக அணுகுவது என்பதை உறுதி செய்வதில் மிகவும் கவனமாக, இருந்தோம்." என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# பாதுகாப்பு அமைச்சுக்கு 1124 கோடி ரூபா!

(கொழும்பு)

2019 ஆம் ஆண்டின் ஏப்ரல் 30 ஆம் திகதி வரையிலான முதல் காலாண்டுக்கான இடைக்கால கணக்கறிக்கையை நிதியமைச்சர் மங்கள சமரவீர நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார். இதுகுறித்து விவாதம் இடம்பெற்று வாக்கெடுப்புக்கு விடப்பட்டதுடன் 102 வாக்குகளை பெற்று 96 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

இந்த இடைக்கால கணக்கறிக்கையில், அடுத்த ஆண்டின் முதல் நான்கு மாதங்களுக்காக 1765 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இதில் சேவைகளுக்காக 790 பில்லியன் ரூபாவும், திரட்டு நிதியத்துக்காக 970 பில்லியன் ரூபாவும், முற்பணங்களுக்காக 5 பில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன. அத்துடன் மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் 990 பில்லியன் கடன் பெறவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

முதல் காலாண்டுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா நிதியில், பாதுகாப்பு அமைச்சுக்காக 1124 கோடி 63 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், ஜனாதிபதி செயலகத்துக்கு 439 கோடியே 62 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாவும், பிரதமர் அலுவலகத்துக்கு 50 கோடியே 39 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

### திடீர் அரசியல் நெருக்கடியால்

# தேசிய புற்று நோய் வைத்தியசாலைக்கான விநியோகங்களில் பாதிப்பு

(கொழும்பு)

இலங்கையில் அண்மையில் ஏற்பட்ட அரசியல் பிரச்சினை காரணமாக மஹரகம தேசிய புற்று நோய் வைத்தியசாலைக்கான விநியோகங்களில் பாதிப்புக்கள் ஏற்பட்டிருந்தன.

எனினும் தனியாரிடமிருந்து தேசிய புற்று நோய் வைத்தியசாலை அதிகாரிகள் தேவையானவற்றை பெற்றுக் கொண்டதன் அடிப்படையில் நோயாளிகளின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டன.

புதிய நோயாளிகளுக்கான சிகிச்சைகளை மேற்கொள்வதில் ஏற்பட்ட தாமதங்களை தவிர்க்கவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நேரத்தில் சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இல்லையேல் அவர்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புக்களைத் தடுக்க முடியாது.

எனவேதான் தனியார் துறையின் உதவியைப் பெறும் தீர்மானம் எடுக்கப்பட்டதாக வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

எனினும் அரசியல் பிரச்சினை தீர்ந்தவுடன் வைத்தியசாலைக்கான விநியோகங்களில் ஏற்பட்டிருந்த பாதிப்புக்கள் நிவர்த்திக்கப்பட்டதாக நிர்வாகம் தெரிவித்துள்ளது. (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 80 | 100 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 120 | 110 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 600 | 600 | 450 | 500 |
| தக்காளி | 250 | 300 | 280 | 280 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 60 | 50 |
| கோவா | 100 | 80 | 100 | 120 |
| கரட் | 150 | 200 | 250 | 200 |
| பூசணி | 60 | 40 | 40 | 60 |
| புடோல் | 100 | 120 | 80 | 120 |
| வாழைக்காய் | 80 | 80 | 60 | 120 |
| சின்ன வெங்காயம் | 140 | 100 | 140 | 160 |
| பெரிய வெங்காயம் | 100 | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 350 | 300 | 250 | 320 |
| வெண்டிக்காய் | 140 | 120 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 50 | 50 | 50 | 80 |
| பயற்றங்காய் | 150 | 140 | 120 | 120 |
| லீக்ஸ் | 200 | 180 | 180 | 200 |
| பீற்றூட் | 250 | 160 | – | 200 |
| கறிமிளகாய் | 300 | 300 | 240 | 280 |
| முருங்கைக்காய் | – | – | – | – |
| போஞ்சி | 100 | 140 | 200 | 120 |
| கத்தரித்தம்புள்ள | 80 | 80 | – | 100 |
| கீரை - 1 பிடி | 50 | 30 | 60 | 50 |
| தேசிக்காய் | 300 | 300 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 45 | 30 | 30-50 |
| இராசவள்ளி | 200 | 250 | 150 | 200 |
| வெங்காயப்பூ | 400 | 400 | – | – |
| முள்ளங்கி | 80 | 120 | 100 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 60 | 50 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 30 |
| ஈரப்பலா | 60 | 80 | 40 | 80 |

# செய்தித்துளிகள்

## ஆற்றில் நீராடச் சென்ற இருவர் பரிதாபமாகப் பலி

(நாவலப்பிட்டி)

நாவலப்பிட்டி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இங்குருஓயா மாப்பாகந்த பகுதியிலுள்ள ஆற்றில் நீராடச் சென்ற இருவர் நீரில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்துள்ளதாக நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

ஹற்றன் விதிராபுர பகுதியைச் சேர்ந்த இருவரும் உறவினர்களின் வீட்டுக்குச் சென்றிருந்த வேளை ஆற்றில் நீராடச் சென்று இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்தவர்கள் 13 வயதுடைய அப்துல் ரஹ்மான் மற்றும் 42 வயதுடைய மொகமட் முஸ்தாக் என அடையாளம் காணப்பட்டுள்ளது. (இ-7)

## றிசாத், ஹரிசன் ஆகியோருக்கு ஜனாதிபதிக்கு அடுத்தபடியாக அதிக பொறுப்பு அமைச்சுக்கள்



(கொழும்பு)

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரிடம் காணப்படும் அமைச்சுக்களுக்கு அடுத்தபடியாக பொறுப்புக்கள் அதிகம் உள்ள இரு அமைச்சுக்கள் பி.ஹரிஸன் மற்றும் றிசாத் பதியுதீன் ஆகியோருடையது என தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களுடைய அமைச்சுக்களிடம் அதிகமான அரச நிறுவனங்களும், விடயப் பரப்புக்களும் காணப்படுகின்றன. (இ-7)

## வயலில் மோட்டார் குண்டு மீட்பு



(வெல்லாவெளி)

மட்டக்களப்பு வெல்லாவெளி பொலிஸ் பிரிவிலுள்ள திக்கோடை வயல் பிரதேசத்தில் மோட்டார் குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

குறித்த குண்டு நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை மீட்கப்பட்டுள்ளதாக வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்துள்ளனர்

களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலில், குறித்த வயல் பிரதேசத்தின் நிலத்திலிருந்து இந்த மோட்டார் குண்டு மீட்கப்பட்டுள்ளது. (இ-7)

## மரத்தளபாடக் கடையில் தீ




(கொழும்பு)


கொழும்பு 2 வொக்ஷல் வீதியிலுள்ள கடையொன்றில் நேற்று அதிகாலை தீ பரவியுள்ளதாக தீயணைப்பு படையினர் தெரிவித்தனர்.

மரத்தளபாடக் கடையொன்றிலேயே குறித்த தீ அனர்த்தம் இடம்பெற்றுள்ளதாக தீயணைப்பு படையினர் தெரிவித்தனர்.

இதேவேளை, தீ அனர்த்தம் இடம்பெற்றுள்ள பகுதிக்கு 10 தீயணைப்பு வாகனங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சிறுவர் அரங்கம்

## கிணற்றில் நீர் இறைத்த திருடர்கள்



ஒரு சமயம் விஜயநகர ராஜ்யத்தில் கடும் வறட்சி ஏற்பட்டது. பருவ மழை தவறி விட்டதால் குளம், குட்டை, ஏரி எல்லாம் வற்றிவிட்டது. தெனாலிராமன் வீட்டுக் கிணற்றிலும் நீர் குறைந்து அதிக ஆழத்திற்குப் போய்விட்டது. இதனால் தினமும் தோட்டத்திற்கு தண்ணீர் பாய்ச்ச மிகவும் சிரமப்பட்டான் தெனாலிராமன்.

இந்தச் சமயத்தில் ஒரு நாள் இரவு நான்கு திருடர்கள் தன் தோட்டத்தில் பதுங்கி இருப்பதைக் கண்டான். உடனே வீட்டிற்கு வந்து தன் மனைவியிடம், "அடியே, நம் நாட்டில் பருவ மழை தவறி விட்டதால், பஞ்சம் ஏற்பட்டு விட்டது. எனவே நிறைய திருட்டு நடக்க ஆரம்பித்து விட்டது. பஞ்ச காலம் முடியும் வரை நாம் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். எனவே நாம் ஒரு காரியம் செய்வோம்" என்று வெளியே பதுங்கியிருந்த திருடர்களுக்குக் கேட்கும் வண்ணம் உரத்த குரலில் பேசினான்.

"அதற்கு என்ன செய்யலாம்?" என்று தெனாலிராமனின் மனைவி கேட்டாள்.

"வீட்டிலுள்ள நகை மற்றும் விலையுயர்ந்த பொருட்களை எல்லாம் இந்தப் பெட்டியில் போட்டு பூட்டு. நாம் இந்தப் பெட்டியை யாருக்கும் தெரியாமல் கிணற்றில் போட்டு விடலாம். பஞ்சம் தீர்ந்து திருட்டுப் பயம் ஒழிந்ததும் மீண்டும் கிணற்றிலிருந்து எடுத்துக் கொள்ளலாம்" என்று முன்போலவே உரக்கக் கூறினான் தெனாலிராமன். திருடர்களும் இதைக் கேட்டனர்.

அதே சமயம் ரகசியமாகத் தெனாலிராமன் தன் மனைவியிடம் திருடர்கள் ஒளிந்திருப்பதைக் கூறி ஒரு பழைய பெட்டியில் கல், மண், பழைய பொருட்களை எல்லாம் போட்டு மூடினான். அந்தப் பெட்டியைத் தூக்க முடியாமல் தூக்கி வந்து கிணற்றுக்குள் 'தொப்'பென்று போட்டு விட்டு வீட்டுக்கு திரும்பிவிட்டான் தெனாலிராமன்.

திருடர்களும் "தெனாலிராமன், வீட்டிற்குள் புகுந்து திருடும் நம் வேலையை சுலபமாக்கிவிட்டான். நாம் எளிதாக கிணற்றிலிருந்து பெட்டியை எடுத்துக் கொள்ளலாம்" என்று தங்களுக்குள் பேசிக் கொண்டனர்.

பெட்டியை எடுக்க கிணற்றுக்கு அருகே வந்தனர் திருடர்கள். கிணறு ஆழமாக இருந்ததால் உள்ளே இறங்கப் பயந்த திருடன் ஒருவன், "அண்ணே! தண்ணீர் குறைவாகத்தான் உள்ளது. நாம் நால்வரும் ஏற்றம் மூலம் மாற்றி மாற்றி நீரை இறைத்து விட்டால் சுலபமாகப் பெட்டியை எடுத்துக் கொண்டு போகலாம்" என்று கூறினான். அதைக்கேட்ட மற்றவர்களும் அவன் திட்டத்துக்கு ஒப்புக் கொண்டனர். அதன்படி ஒருவர் மாற்றி ஒருவர் ஏற்றம் மூலம் நீர் இறைக்கத் தொடங்கினர்.

சற்று நேரம் கழித்து வேறு வழியாக தோட்டத்திற்குச் சென்ற தெனாலிராமன், திருடர்கள் இறைத்து ஊற்றிய நீரை தன் தோட்டத்தில் உள்ள செடிகளுக்கும், கொடிகளுக்கும், பயிர்களுக்கும் பாயுமாறு கால்வாயைத் திருப்பி விட்டான்.

இப்படியே பொழுது விடிந்தது விட்டது. ஆனால் கிணற்றில் தண்ணீர் குறையவில்லை. இதனால் திருடர்களும் "நாளை இரவு மீண்டும் வந்து நீரை இறைத்து விட்டு பெட்டியை எடுத்துக் கொள்ளலாம்" என்று பேசிக் கொண்டு சென்றனர்.

அப்போது தோட்டத்திலிருந்து வந்த தெனாலிராமன் அவர்களைப் பார்த்து. "நாளைக்கு வரவேண்டாம். நீங்கள் இறைத்த தண்ணீர் இன்னும் மூன்று தினங்களுக்குப் போதும்.

எனவே மூன்று தினங்கள் கழித்து வந்தால் போதும். உங்கள் உதவிக்கு நன்றி நண்பர்களே!" என்று கூறினான்.

திருடர்களுக்கு இதைக் கேட்டதும் மிகவும் அவமானமாய் போய்விட்டது. தங்களை ஏமாற்றி நீர் இறைக்கச் செய்த தெனாலிராமனின் அறிவை மனத்திற்குள் எண்ணி வியந்தனர்.

மேலும் அங்கே இருந்தால் எங்கே மாட்டிக் கொள்வோமோ என்ற அச்சத்தில் திரும்பிப் பார்க்காமல் ஓட்டம் பிடித்தனர் திருடர்கள்.

# சிந்திக்க சில...

- காரணமே இல்லாமல் கோபம் தோன்றுவதில்லை ஆனால் கோபத்தின் காரணம் பெரும்பாலும் நல்லதாய் இருப்பதில்லை.
- விந்தையான சிலரைப் பார்க்கும்போது இவர்கள் ஏன் இப்படி? என்பதைவிட, இவர்கள் இப்படித்தான் என எண்ணிக்கொள்ளுங்கள்.
- யார் சொல்வது சரி என்பதல்ல, எது சரி என்பதே முக்கியம்.
- ஆயிரம் முறை சிந்தியுங்கள் ஒருமுறை முடிவெடுங்கள்.
- அச்சம்தான் நம்மை அச்சுறுத்துகிறது. அச்சத்தை அப்புறப்படுத்துவோம்.
- நியாயத்தின் பொருட்டு வெளிப்படையாக எவருடனும் விவாதிப்பது சிறப்பாகும்.
- உண்மை புறப்பட ஆரம்பிக்கும்முன் பொய் பாதி உலகத்தை வலம் வந்துவிடும்.
- உண்மை தனியாகச் செல்லும் பொய்க்குத்தான் துணை வேண்டும்.
- வாழ்வதும் வாழவிடுவதும் நமது வாழ்க்கைத் தத்துவங்களாக இருக்கட்டும்.
- பிறர் நம்மைச் சமாதானப்படுத்த வேண்டும் என்று எதிர்பார்க்காமல், நாம் பிறரைச் சமாதானப்படுத்த முயல வேண்டும்.

# ஆயர்பாடி மாளிகையில்!



ஆயர்பாடி மாளிகையில்
தாய்மடியில் கன்றினைப் போல்
மாயக்கண்ணன் தூங்குகின்றான்
தாலேலோ

அவன் வாய்நிறைய மண்ணை உண்டு
மண்டலத்தைக் காட்டியபின்
ஓய்வெடுத்து தூங்குகின்றான்
ஆராரோ
ஓய்வெடுத்து தூங்குகின்றான்
ஆராரோ
(ஆயர்பாடி)

பின்னலிட்ட கோபியரின்
கன்னத்திலே கன்னமிட்டு
மன்னவன் போல்
லீலை செய்தான் தாலேலோ
அந்த மந்திரத்தில் அவர் உறங்க
மயக்கத்திலே இவனுறங்க
மண்டலமே உறங்குதம்மா
ஆராரோ
மண்டலமே உறங்குதம்மா
ஆராரோ
(ஆயர்பாடி)

நாகபடம் மீதில் அவன்
நர்த்தனங்கள் ஆடியதில்
தாகமெல்லாம் தீர்த்துக்கொண்டான்
தாலேலோ
அவன் மோக நிலை கூட
ஒரு யோக நிலை போலிருக்கும்
யாரவனைத் தூங்கவிட்டார் ஆராரோ
யாரவனைத் தூங்கவிட்டார் ஆராரோ
(ஆயர்பாடி)

கண்ணனவன் தூங்கிவிட்டால்
காசினியே தூங்கிவிடும்
அன்னையரே துயிலெழுப்ப வாரீரோ
அவன் பொன்னழகைப் பார்ப்பதற்கும்
போதை முத்தம் பெறுவதற்கும்
கன்னியரே கோபியரே வாரீரோ
கன்னியரே கோபியரே வாரீரோ
(ஆயர்பாடி)

இறைவனை நேசிப்பவருக்கு எல்லாக் காரியங்களும் சாதகமாகி நலமே அதிகரிக்கும்.

~ புனிதர் பவுல்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வீஷ்மருக்கும் விதுரனுக்கும் உள்ள வித்தியாசம்

மகாபாரதப் போரில் வீஷ்மர், துரோணர், விதுரன் என்ற பாத்திரங்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை.

பிதாமகர் எனப் போற்றப்படுபவர் வீஷ்மர். வில்லுக்கு விதுரன் என்பது விதுரன் சார்ந்த புகழ் மொழி.

வீஷ்மர், விதுரன் ஆகிய இருவரும் கௌரவர் சபையில் இருந்தனராயினும் வீஷ்மருக்கும் விதுரனுக்கும் மிகப்பெரிய வித்தியாசம் உண்டு.

இதை நாம் கூறும்போது ஒன்றோடு இன்னொன்றை ஒப்பிடுதல் முறையா என்று நீங்கள் யாரேனும் கேட்கலாம்.

ஒன்றை இன்னொன்றுடன் ஒப்பிடுதல் முறையல்லவாயினும் ஒரே செயல் தொடர்பில் இரு நபர்களை ஒப்பிடுதல் வழுவன்று.

அந்த வகையில்தான் வீஷ்மரையும் விதுரனையும் ஒப்பிட்டு இருவருக்குமிடையிலான வித்தியாசத்தை வெளிப்படுத்தத் துணிந்தோம்.

வீஷ்மர் மிகச்சிறந்த அறிவு ஞானியாயினும் கௌரவர் சேனையில் இருந்து தன்னை வெளியேற்ற ஒருபோதும் நினைக்கவில்லை.

இதனால் குருசேத்திரப் போரில் கௌரவர் சேனையின் படைத்தளபதியாக வீஷ்மர் போரிட வேண்டியதாயிற்று.

பாண்டவர்களைத் தர்மத்தின் அடையாளமாகச் சித்திரித்தால் கௌரவர் சேனை அதர்மமாக அடையாளப்படும்.

ஆக, மகாபாரதப் போர் பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்குமிடையிலான யுத்தம் என்பதைவிட, தர்மத்துக்கும் அதர்மத்துக்குமான போர் என்று கூறுவதுதான் பொருத்தமானது.

இங்ஙனம் தர்மத்துக்கும் அதர்மத்துக்கும் இடையில் போர் மூண்டபோது வீஷ்மர் அதர்மத்தின் வெற்றிக்காகப் போரிட்டு மாண்டு போனார்.

ஆனால் விதுரன் அவ்வாறு செய்யவில்லை. கௌரவர் சேனைக்கும் பாண்டவர் தரப்புக்கும் யுத்தம் நடைபெறப் போவதை விதுரன் உணர்ந்து கொண்டான்.

இந்தப் போரில் தான் பங்கேற்பதாக இருந்தால் கௌரவர் பக்கமாக நிற்பதுதான் செஞ்சோற்று நீதி,

இஃதென்ன செஞ்சோற்று நீதி என்று யாரும் கேட்டுவிடாதீர்கள். புதிய சொல்லுருவாக்கத்தில் நாமும் சிறுபங்கு வகிக்கலாம் என்ற அடிப்படையில் கூறப்பட்டதே செஞ்சோற்று நீதி. இந்த விளக்கம் இப்போதைக்குப் போதுமானது.

இவை ஒருபுறமிருக்க, பாரதப் போரில் நடுநிலை வகிக்கவும் தர்மத்துக்குச் சார்பாகச் செயற்படவும் தீர்மானித்த விதுரன்; சந்தர்ப்பத்தைப் பார்த்திருந்தவராகத் தன்னிடம் இருந்தவில்லை கௌரவர் சபையில் முறித்து போரிடேன்; வில்லெடேன் என்ற சத்தியமும் சபதமும் செய்தார். இதுதான் வீஷ்மருக்கும் விதுரனுக்கும் உள்ள வித்தியாசம்.

அது சரி,எதற்காக இந்த வித்தியாச உவமை என்று நீங்கள் நிச்சயம் கேட்பீர்கள்.

ஐயா! தமிழ் அரசியல்கைதிகளை விடுதலை செய்யாவிட்டால், என் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை இராஜினாமாச் செய்வேன் என்று பாராளுமன்றத்தில் கூளுரைத்து அந்தப் பதவியை இராஜினமாச் செய்திருந்தால் இன்று சம்பந்தர் தமிழ் மக்களின் இதயங்களில் இருந்திருப்பார்.

இப்போது போகின்ற எதிர்க்கட்சித் தலைமையை அப்போது தூக்கி எறிந்திருந்தால்...

பெருமைக்குரியவர் சம்பந்தர் என்பதாக இருந்திருக்கும். பாழாய்ப்போன அவர் விதி விட்ட பாடில்லை என்ன செய்வது.

# மகிழங்கேணி மக்களை விடாது துரத்தும் மழை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி- கோவிற்குடியிருப்பு கிராம உத்தியோகத்தர் பிரிவில் மகிழங்கேணிப் பகுதி மக்கள் ஒவ்வொரு மாரி காலத்திலும் பல்வேறுபட்ட இன்னல்களைச் சந்தித்து வருகின்றனர்.

கடந்த இரண்டு மாதங்களாக நிலவியமழைப்பொழிவு காரணமாக மகிழங்கேணிப் பகுதியில் உள்ள இருபதுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் தமது குடிசைகளிலிருந்து வெளியேறி உறவினர்கள் வீடுகளிலும், சனசமூக நிலையங்களிலும் தங்கியிருந்தனர்.

இந்நிலையில் மழை ஓய்ந்து தமது இருப்பிடங்களுக்குச் சென்று இயல்பு வாழ்வற்கு திரும்பும் வேளையில் மீண்டும் கடந்த இரு தினங்களாக பெய்த கடும் மழை காரணமாக மீண்டும் மகிழங்கேணியில் சில குடும்பங்கள் இடம்பெயர்ந்து அங்குள்ள சனசமூக நிலையத்தில் தங்கியுள்ளனர்.

ஒவ்வொரு மாரி காலத்திலும் குறித்த பகுதி மக்கள் வெகுவாக பாதிக்கப்படுகின்ற போதிலும் உரிய அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகள அடுத்த மாரிக்கு இடையில் மக்களின் பிரச்சினை சீர் செய்யப்படும் என ஆறுதல் வார்த்தைகளை மாத்திரமே கூறி வருகின்றனர். ஆனால இன்றுவரை அப்பகுதி மக்களின் இன்னல்கள் தீர்ந்ததாகத் தெரியவில்லை.

கடந்த 2016ம் ஆண்டு 60குடும்பங்களுக்கு தென்மராட்சி பிரதேச செயலகத்தினர் குறித்த பகுதியில் காணி பகிர்ந்தளித்த நிலையில் சுமார் 20 குடும்பங்கள் தற்காலிக குடிசைகள் அமைத்து அப் பகுதியில் வசித்து வருகின்றனர். அவர்களுக்கான போக்குவரத்து வீதிகள் தற்போது கிரவல் வீதியாக மாற்றப்படுகின்ற போதிலும், அவர்களுக்கு வீட்டுத்திட்டம் வழங்கல் மற்றும் அவர்களுடைய நிலப்பகுதியை கடல் மட்டத்தில் இருந்து உயர்த்தல் ஆகிய வேலைத் திட்டங்கள் தொடர்ந்தும் இழுபறி நிலையிலே காணப்படுகின்றன.

2019ஆம் ஆண்டு குறித்த பகுதி மக்களின் குறைபாடுகளை பிரதேச செயலகத்தினர் தீர்த்து வைப்பர் என நம்பப்படுகிறது. மகிழுங்கேணிப் பகுதி சாவகச்சேரி - கச்சாய் கடற்பரப்பை அண்டிய தரவைப் பகுதியில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-30)

# சாவகச்சேரி நகரசபையால் அபிவிருத்திகளுக்காக 19 கோடியே 73 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர சபையின் 2019ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத்திட்டம் 19 கோடி 73 இலட்சத்து ஏழாயிரம் ரூபாய் நிதியில் பல்வேறுபட்ட வேலைத்திட்டங்களை உள்ளடக்கி தயாரிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் சாவகச்சேரி மீன் சந்தை புனரமைப்பிற்கு 25 இலட்சம் ரூபாயும், வீதிகள் புனரமைப்பிற்கு 40இலட்சத்து அறுபதாயிரம் ரூபாயும் மீசாலை பொது நூலக மதில் அமைப்பிற்கு 7 இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாயும், நகர மண்டப மேல்மாடி புனரமைப்பிற்கு 20 இலட்சம் ரூபாயும், நுணாவில் பொது நூலகப் புனரமைப்பிற்கு 7 இலட்சத்து ஐம்பதாயிர மும், சாவகச்சேரி பொது நூலக நூலகரின் அறை அமைப்பிற்கு இரண்டு இலட்சமும், புத்தகக் கொள்வனவிற்கு மூன்று இலட்சம் ரூபாயும், அடையல் தாங்கிக்கு 10 இலட்சம் ரூபாயும், மடத்தடிப் பகுதியில் மதகு அமைக்க 5 இலட்சம் ரூபாயும் சனசமூக நிலையங்களுக்கு 2 இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாயும் ஒதுக்கி வரவு - செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தவிர முப்பது மில்லியன் சபை நிதியில் 15.55 மில்லியன் செலவில் தாழையம்மன் வீதி, சேகண்டி - தண்ணீர் சால் மூட்டு இணைப்பு வீதி, வீரசிங்கம் வீதி, மூங்கில் வீதி, வைரவர் கோவில் பின் வீதி, நாவலர்வீதி, கிராண் வீதி மற்றும் பொன்னம்பலம் வீதி ஆகிய நகரசபை எல்லைக்குட்பட்ட வீதிகள் அமைக்கப்படவுள்ளன.

அதனைத் தவிர 18.5 மில்லியன் சபை ஒதுக்கீட்டு நிதியில் 1.5 மில்லியனில் சுகாதாரத் தொழிலாளர் விடுதி, 8.5 மில்லியனில் நவீன சந்தை கட்டடத் தொகுதியும் 0.3 மில்லியனில் சுகாதார தொழிலாளர் விடுதிக்கான மலசலகூடமும் 0.15 மில்லியன் நிதியில் மடத்தடிப் பகுதியில் மடமும் அமையப் பெறவுள்ளன.

சாவகச்சேரி நகர சபையின் 2019ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத்திட்ட நிதி.மற்றும் சபை ஒதுக்கீட்டு நிதி ஆகியவற்றில் 14 வீதிகள் அமையப் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-30)

## செலவுகளைக் கட்டுப்படுத்த...

- தண்ணீரைச் சிக்கனமாக பயன்படுத்துங்கள.
- தேவையில்லாத போது மின்சாரத்தை அவ்வப்போது நிறுத்தி வைக்க மறக்கக் கூடாது.
- எரிவாயுவைப் பயன்படுத்தும்போது உணவு பொருட்களை தயார்நிலையில் வைத்துக் கொண்டு பயன்படுத்தினால் செலவுகளை கட்டுப்படுத்தலாம்.
- வாகனங்களை தேவையில்லாமல் ஓட்டக்கூடாது.
- அருகில் உள்ள இடங்களுக்கு முடிந்தவரை நடந்துசெல்லுங்கள்.அப்படி செய்தால் செலவுகளைக் குறைக்கலாம்.
- அவசியம் இல்லாமல் மற்றும் ஆடம்பரப் பொருட்களை வாங்குவதைத் தவிர்த்தால் செலவுகளைக் கட்டுப்படுத்தலாம்.
- செலவுகளை குறைக்கும் பட்சத்தில் சேமிப்பை கடைப்பிடித்தால் வாழ்வில் மகிழ்ச்சியாக வாழலாம்.
- வரவை அறிந்து செலவு செய்தால் நலமாய் வாழ நல்வழிகள் தோன்றும்.

## மதுபோதையில் வாகனம் செலுத்திய 90 ஆயிரம் சாரதிகள் கைது

(கொழும்பு)

வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் மதுபோதையுடன் வாகனத்தை செலுத்திய சுமார் 90,000 சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், இதன் எண்ணிக்கை 15,000 ஆக அதிகரித்துள்ளதாக பொலிஸ் அத்தியட்சகர் இந்திக ஹபுகொட தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் நாளாந்தம், மதுபோதையுடன் வாகனம் செலுத்தும் சுமார் 450 சாரதிகள் கைது செய்யப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு, கொழும்பு நகரில் மாத்திரம் மதுபோதையுடன் 50 சாரதிகள் கைது செய்யப்படுகின்றனர்.

இதேவேளை, பண்டிகைக் காலத்தில் மதுபோதையுடன் வாகனத்தை செலுத்தும் சாரதிகளை கைது செய்வதற்கான விசேட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும்5ஆம்திகதிவரை இந்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (ம-3)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## இறைத்தன்மை அடைய



இயற்கைத் தத்துவத்தையும், அதன் விளைவுகளையும் அன்றாடம் வாழ்வில் நாம் சந்தித்துக் கொண்டிருக்கிறோம். இயற்கையின் விளைவுகளுக்குத் தொடர்ந்து ஆளாகிக் கொண்டும், சில நேரங்களில் பயன்படுத்திக் கொண்டும் வருகின்றோம். இதனைச் செயல் விளைவுத் தத்துவம் என்று சொல்லலாம். விதி என்றும் சொல்லலாம். தெய்வச் செயல் என்றும் சொல்லலாம். வினை அல்லது வினைப் பயன் என்றும் இதை மதிக்கலாம்.

இயற்கையை எவ்வளவுக்கெவ்வளவு நாம் அறிந்து கொள்கிறோமோ, அவ்வளவுக்குத் தான் நம் மனம் விரிவும், திண்மையும் பெறும். மனதின் திண்மைக்கு ஏற்பவே செயல் திறம் அமையும். செயல் திறமைக்கு ஏற்ப வாழ்க்கையானது வெற்றியும், மகிழ்ச்சியும் நிரம்பியதாக விளங்கும்.

மனிதனின் துன்பமெல்லாம், அவனுடைய குறையெல்லாம் இயற்கையை அறியாமலும் அல்லது அறிந்தும் அதனை மதியாமலும் அவன் நடந்து கொள்வதாலேயே தோன்றுகின்றன. இந்நிலையைத்தான். ஆணவம் என்பார்கள். நாம் இதனைத் "தன்முனைப்பு" **(Ego)** என்கிறோம்.

உலக உயிர்கள் அனைத்திலும் மனிதன் மிகவும் உயர்ந்தவன் இயற்கையின் பரிணாமச் சிறப்புகள் அனைத்தும் அவனிடம் ஒருங்கிணைந்துள்ளன. மனிதனிடம் இவ்வளவு பேராற்றல் இருந்தும் அவன் தன் ஆற்றலின் பெருமையை, தன் ஆற்றலின் முழுமையை மறந்திருக்கிறான். அதனால் அப்பேராற்றல் அவனிடம் இயக்கம் பெறாமல் பலங்குன்றியிருக்கின்றது. இதைமூடநிலை எனலாம். மூடம் என்றால் மறைவு என்று பொருள். மூடன் என்றால் அறிவு இருந்தும் அது அவனிடம் இயக்கம் பெறாமல் இருப்பவன். அறிவு இருப்பது வெளிப்படாமல் அதாவது மறைவாக இருக்கும் நிலையில் உள்ளது. இயக்கம் பெறாமல் தடைபட்டிருக்கும் நிலையாகும்.

தன்முனைப்பின் காரணமாக மனிதனானவன் தன் பேரறிவைதத் தன் உடல் அளவில் குறுக்கிக் கொண்டு, பொருள் அனுபோகத்திலும் புலன் அனுபோகத்திலும் மட்டுமே கவனம் கொள்ளச் செய்கிறது. அப்போது அவனது பேரறிவானது வெறும் பொருள் வழி மற்றும் புலன்வழி குறுகித் தன் உயர்வையும், சிறப்பையும் இழந்துவிடுகிறது.

# கொக்குவில் இந்துக் கல்லூரியை இனிங்ஸினால் வென்றது யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

கொக்குவில் இந்துவை அதன் சொந்த மைதானத்தில் வைத்து, இனிங்ஸ் மற்றும் 179 ஓட்டங்களால் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி வெற்றிகொண்டது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில், பாடசாலைகளின் 19 வயதுப்பிரிவு துடுப்பாட்ட அணிகளுக்கிடையிலான மட்டுப்படுத்தப்படாத ஓவர்கள் கொண்ட இரண்டு நாட்கள் துடுப்பாட்டப் போட்டி தற்போது நடைபெற்று வருகின்றது.

மேற்படி சுற்றுப்போட்டியின் போட்டியொன்று கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போது, கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி, 24 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 50 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் ஏ.சாருஜன் 12 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

பந்துவீச்சில் யாழ்ப்பாணம் மத்தி சார்பாக, ரி.விதுசன் 4, பி.குகதீஸ், பி.நிதுசன் தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் தமது முதலாவது இனிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி, 88 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 269 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் ஆர்.ராஜ்கிளின்டன் 73, ஏ.ஜெயதர்சன் 63, ஏ.இயலரசன் 36, ஏ.நிதுசன் 24 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் கொக்குவில் இந்து சார்பாக, ஐ.தினேஸ்குமார் 6 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

219 ஓட்டங்கள் பின்னிலையில் தமது இரண்டாவது இனிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மீண்டும் துடுப்பாட்டத்தில் தடுமாறி, 40 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்களையும் இழந்தது. சுபாஜன் 13 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

பந்துவீச்சில் ரி.விதுசன் 3, கே.இயலரசன், குகசிந்தூஸ், ஏ.நிதுசன் தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர். இதன்மூலம் இனிங்ஸ் மற்றும் 179 ஓட்டங்களால் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி வெற்றி பெற்றது. (க-26)

# தேசியமட்ட பளுதூக்கல் போட்டி; மீண்டும் தங்கம் வென்றார் ஆசிகா



இலங்கை பளுதூக்கல் சம்மேளனத்தின் ஏற்பாட்டில், தேசிய மட்ட பளுதூக்கல் போட்டிகள் கொழும்பு டொறிங்டன் மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் யாழ் மாவட்ட பளுதூக்கல் சம்மேளனத்தின் சார்பாகக் கலந்து கொண்ட, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி, வி.ஆசிகா 64 கிலோ எடைப்பிரிவில் கலந்துகொண்டு, 178 கிலோ எடையைத் தூக்கி தங்கப் பதக்கம் வென்றார்.

இவர்கள், கடந்த ஜூன் மாதம் திருகோணமலை அக்ரபோதி தேசியக் கல்லூரியில் நடைபெற்ற, தேசிய மட்டப் பாடசாலைகளுக்கிடையிலான பளுதூக்கல் போட்டியில் 20 வயதுப்பெண்கள் 63 கிலோ எடைப்பிரிவில் கலந்துகொண்டு, 178 கிலோ எடையைத் தூக்கி சாதனை படைத்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

யாழ்.மாவட்ட பளுதூக்கல் சம்மேளனம் சார்பாக, 59 கிலோ எடைப்பிரிவில் கலந்துகொண்ட பஜீனா 100 கிலோ எடையைத் தூக்கி வெள்ளிப்பதக்கம் வென்றார்.


இளவாலை கன்னியர் மடம் மாணவி, ம.மகிழினி 40 கிலோ எடைப்பிரிவில் 58 கிலோகிராம் எடையைத் தூக்கி வெண்கலப் பதக்கம் பெற்றார். அதே பாடசாலையைச் சேர்ந்த வி.றெகோன்சியா, 64 கிலோ எடைப் பிரிவில் கலந்துகொண்டு, 60 கிலோ எடையைத் தூக்கி வெண்கலம் வென்றார்.

பாண்டியன் குளம் மகா வித்தியாலய மாணவி, தே.தர்சிகா, 45 கிலோ எடைப்பிரிவில் கலந்துகொண்டு 80 கிலோ எடையைத் தூக்கி வெண்கலம் வென்றார்.

யாழ்மாவட்ட பளுதூக்கல் சம்மேளனத்தின் சார்பில்கலந்துகொண்ட எஸ்தீவானுஜன் 102 கிலோ எடைப் பிரிவில் கலந்துகொண்டு, 120 கிலோ எடையைத் தூக்கி வெண்கலம் வென்றார். (க-26)

# அவுஸ்திரேலியாவில் தோற்றால் இந்திய அணியையே மாற்றுங்கள்

## கவாஸ்கர் ஆவேசம்



அவுஸ்திரேலிய அணிக்கெதிரான டெஸ்ட் தொடரை இந்திய அணி இழந்தால், தலைவர் விராட்ஹோலி முதற்கொண்டு அனைவரையும் நீக்குங்கள் எனச் சுனில் கவாஸ்கர் ஆவேசமாகப் பேசியுள்ளார்.

சர்வதேச டெஸ்ட் தரவரிசையில் முதலிடம் பிடித்தாலும் வெளியூர்களில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடும் டெஸ்ட் தொடர்களில் மட்டும் இந்திய அணி பரிதாபமாகத் தோல்வியைத் தழுவுகிறது.

தென்னாபிரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் தொடரை இழந்த இந்திய அணி, தற்போது அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது.

இதில் நடந்து முடிந்த முதல் போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்றது. அதனைத் தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியில் 146 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலிய அணி வெற்றி பெற்றது.

இதற்குக் காரணம் களத்தில் விளையாடுவதற்கான 11 வீரர்களைச் சரியாகத் தேர்வு செய்யவில்லை என்ற கருத்தே எழுந்தது. அவுஸ்திரேலிய அணியின் சுழற்பந்து வீச்சாளர் நாதன் லயன் பந்து வீச்சில் தான் இந்திய வீரர்கள் திணறினார்கள்.

ஆனால் இந்திய அணி வேகப்பந்து வீச்சாளர்களை மட்டும் நம்பிக்கொண்டு சுழற்பந்து வீச்சாளர் இல்லாமல் களம் கண்டது.

இந்த நிலையில் இது குறித்துப் பேசியுள்ள இந்திய முன்னணி வீரர் சுனில் கவாஸ்கர், தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரிலிருந்தே இந்திய அணியின் மோசமான அணி தேர்வை நம்மால் பார்க்க முடிகிறது.


அணி தேர்வு என்பது சாதாரண விடயமல்ல, அது போட்டியின் முடிவை தீர்மானிப்பதில் முக்கியமான காரணி. மோசமான அணி தேர்வாலேயே நாம் பல போட்டிகளில் தோற்றிருக்கிறோம்.

ஒருவேளை அவுஸ்திரேலிய தொடரை இந்திய அணி வெல்லவில்லை என்றால், மேலிருந்து கீழ் வரை இந்திய அணியில் மாற்றம் செய்யப்பட வேண்டும்.

இந்திய அணியின் தலைவர், பயிற்சியாளர் என அனைவரையும் மாற்ற வேண்டும் என ஆவேசமாகப் பேசியுள்ளார். (க)

# அவளின் நடிப்பு அற்புதம்

## விராட் பெருமிதம்



இந்தியக் கிரிக்கெட் அணித்தலைவர் விராட் ஹோலி, தனது மனைவி அனுஷ்கா ஷர்மாவின் நடிப்பைப் பெரிதும் பாராட்டி டுவிட் செய்துள்ளார்.

ஷாருக்கான், அனுஷ்கா ஷர்மா நடிப்பில் சீரோ எனும் திரைப்படம் வெளியாகி ஓடிக் கொண்டிருக்கிறது.

இந்தத் திரைப்படத்தை அனுஷ்காவின் கணவரும் இந்தியக் கிரிக்கெட் அணித் தலைவருமான விராட் ஹோலி பார்த்துள்ளார்.

மனைவி அனுஷ்காவின் நடிப்பு அவரை வெகுவாகக் கவர்ந்ததைத் தொடர்ந்து, தனது டுவிட்டர் பக்கத்தில் அவரைப் பாராட்டியுள்ளார்.

அதில் அவர் கூறுகையில், 'சீரோ திரைப்படம் பார்த்தேன். அதில் பொழுதுபோக்கு என்னைக்கவர்ந்தது.

அனைவரும் தங்களது கதாபாத்திரத்தைச் சிறப்பாகச் செய்திருந்தனர். அனுஷ்கா ஷர்மாவின் நடிப்பை மிகவும் நேசித்தேன்.

ஏனெனில், மிகவும் சவாலான பாத்திரத்தை அவர் செய்திருப்பதாக உணர்ந்தேன். அவர் மிகச் சிறப்பானவர்' எனத் தெரிவித்துள்ளார். (க)

# அடுத்த போட்டி அஸ்வின் சந்தேகம்

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 3 ஆவது டெஸ்ட் போட்டியில், அஸ்வின் களமிறங்குவது குறித்து அடுத்த 2 நாட்களில் முடிவு செய்யப்படும்என்று பயிற்சியாளர் ரவி சாஸ்திரி தெரிவித்துள்ளார்.

மெல்போர்னில் எதிர்வரும் 26 ஆம் திகதி இந்தியா-அவுஸ்திரேலியா அணிகள் 3 ஆவது டெஸ்ட் போட்டி தொடங்க உள்ளது.

தொடக்க வீரர்கள் சொதப்புவது இந்திய அணிக்குத் தலைவலியை ஏற்படுத்தியுள்ளது.

அதேபோல், சுழற்பந்து வீச்சாளரின் தேவையும் உள்ளது. இதனால் மெல்பேர்ன் போட்டிக்கான இந்திய அணியில் சுழற்பந்து வீச்சாளர் அஸ்வின் சேர்க்கப்படுவாரா என்ற சந்தேகம் நிலவி வருகிறது.

இந்நிலையில் இதுகுறித்து இந்திய அணியின் பயிற்சியாளர் ரவி சாஸ்திரி கருத்து தெரிவித்துள்ளார்.

'அஸ்வினை பொறுத்த வரை, இன்னும் 2 நாட்களுக்கு அவரை நன்கு கவனித்துவிட்டுசெய்ய உள்ளோம். ரோஹித் ஷர்மா நலமாக உள்ளார். அவர் நல்ல முன்னேற்றத்தை கண்டுள்ளார்.

ஆனால், நாளை அவர் எப்படி இருப்பார் என்பதை பார்க்க வேண்டும். இன்றைய நிலையில் அவர் நன்றாக உள்ளார். பாண்டியா முழு உடற்தகுதியுடன் உள்ளார். அது கூடுதல் ஒரு வாய்ப்பை தரும். காயத்துக்குப் பிறகு அவர் நிறைய முதல் தர போட்டிகளில் விளையாடவில்லை.

ஒரே ஒரு போட்டியில் தான் விளையாடியுள்ளார். அதனால், அவர் விளையாடுகிறாரா இல்லையா என்பதை முடிவு செய்யும்போது நாங்கள் கவனமாக இருக்க வேண்டும்' எனத் தெரிவித்துள்ளார். (க)

# நியூசிலாந்துடனான போட்டியில் சிறப்பாட்டம்; மத்தியூசிற்கு உதவிய குமார் சங்கக்கார



நியூசிலாந்து அணிக்கெதிரான டெஸ்ட் போட்டியில் தன்னுடைய சிறப்பான ஆட்டத்திற்கு முக்கிய காரணம் சங்கக்கார தான் என்று இலங்கை அணி வீரர் மத்தியூஸ் கூறியுள்ளார்.

இலங்கை அணி நியூசிலாந்திற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு அங்கு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது.

இதில் முதல் டெஸ்ட் போட்டியில் தோல்வியிலிருந்த இலங்கை அணியை மத்தியூஸ் மற்றும் குசல் மெண்டிஸ் தங்களுடைய சிறப்பான ஆட்டத்தின் மூலம் சமநிலை செய்தனர்.

மத்தியூஸ் மற்றும் குசல் மெண்டிசின் ஆட்டத்தை இலங்கை அணியின் முன்னணி வீரர்கள் பாராட்டி வருகின்றனர்.

இந்நிலையில் இது குறித்து மத்தியூஸ் கூறுகையில், கடந்த 2015 ஆம் ஆண்டு, இலங்கை அணி கடைசியாகப் பங்கேற்ற டெஸ்ட் போட்டியில் இதே மைதானத்தில் தான் இலங்கை அணியின் முன்னாள் நட்சத்திர வீரரான குமார் சங்கக்கார இரட்டைச் சதமடித்திருந்தார்.

எனவே, இந்த மைதானத்தில் சங்கக்கார எவ்வாறு இரட்டைச் சதமடித்தார் என்பதைத் தெரிந்து கொள்வதற்காகப் போட்டிக்கு முன்னர் அவரை தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினேன்.

ஒவ்வொரு பந்துவீச்சாளருக்கும் ஒவ்வொரு முறையிலான துடுப்பாட்டப் பிரயோகங்களைப் பயன்படுத்துமாறு அவர் என்னிடம் தெரிவித்தார். எனவே அவருடைய ஆலோசனையையும் எனது அனுபவத்தையும் ஒன்று சேர்த்து விளையாடிய காரணத்தால் தான் இந்தப் போட்டியில் பிரகாசிக்க முடிந்ததாகக் கூறினார். (க)


## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உசுப்பியச் செய்ய நாம் தயார்

## வடமராட்சி வதிரி...

போது அப்பகுதியில் முச்சக்கரவண்டி ஒன்றுடன் சந்தேகத்திற்கிடமான முறையில் நின்றிருந்த ஒருவரை சோதனையிட்ட போது அவரின் இடுப்புப் பகுதியில் கத்தி ஒன்று காணப்பட்டது.

மேலும் முச்சக்கரவண்டியில் இரண்டு கத்திகளும் காணப்பட்டன இதனையடுத்து கத்தியை இடுப்பில் வைத்திருந்தவரும் முச்சக்கர வண்டியில் இருந்த இருவருமாக மூவர் கைது செய்யப்பட்டதாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர். (ம-60)

## அனர்த்த முகா...

மாவட்ட செயலகங்களில், நிவாரணப் பணிகள் குறித்து ஆராயும் கூட்டமும் இடம்பெறவுள்ளது.

கடந்த சில தினங்களாக பெய்து வரும் அடைமழையையடுத்து வடக்கின் ஐந்து மாவட்டங்களும் வெள்ளப்பாதிப்பிற்கு உள்ளாகின.

குளங்கள் நிரம்பி வான்பாய தொடங்கியதையடுத்து, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்கள் பேரனர்த்தத்தை சந்தித்தன. இரண்டு மாவட்டங்களையும் சேர்ந்த சுமார் 50 ஆயிரம் பேர் இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களிற்கு மாவட்ட செயலகமும், இராணுவமும் சமைத்த உணவுகளை வழங்கி வருகிறது.

இந்நிலையில் நேற்று காலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த விவகாரம் தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்திற்கு கொண்டு சென்றது. இந்த விடயத்தில் விசேட கவனமெடுக்க வேண்டுமென்றும், நிவாரணம் மற்றும் நட்டஈடு வழங்கப்பட வேண்டுமென்றும் வலியுறுத்தியது. இதையடுத்து, இன்றைய தினம் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிற்கு நேரில் விஜயம் செய்து, நிவாரண நடவடிக்கைகளை ஒழுங்கமைப்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## வடக்கில் வெள்ள...

3 ஆயிரத்து 602 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 229 பேர் இடம்பெயர்ந்து 38 இடைத்தங்கல் முகாங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். கிளிநொச்சி மாவட்டத்திலேயே அதிகளவாக 33 ஆயிரத்து 8 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிவரையான நிலவரப்படி இடர் முகாமைத்துவ நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

முல்லைத்தீவு

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 466 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 724 பேர் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 163 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 548 பேர் இடம்பெயர்ந்து 3 இடைத்தங்கல் முகாங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் 3 ஆயிரத்து 688 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 468 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஆயிரத்து 37 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 817 பேர் இடம்பெயர்ந்து 10 தற்காலிக முகாங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 331 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 4 பேர் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 3 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 460 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அப்பிரதேசத்தில் 3 வீடுகள் முழுமையாகவும் 3 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் 32 குடும்பங்களைச் சேர்ந்த 81 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 177 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 124 பேர் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 416 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 509 பேர் 7 இடைத்தங்கல் முகாங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அப்பிரதேசத்தில் வெள்ளத்தால் 4 வீடுகள் முழுமையாகவும் 4 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் 7 ஆயிரத்து 386 குடும்பங்களைச் சேர்ந்த 24 ஆயிரத்து 32 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஆயிரத்து 797 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 744 பேர் இடம்பெயர்ந்துள்ளனர். அவர்கள் 12 தற்காலிக முகாங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அப்பிரதேசத்தில் வெள்ளத்தால் 3 வீடுகள் முழுமையாகவும் 103 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

பச்சிளைப்பளை பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 412 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 852 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 162 குடும்பங்களைச் சேர்ந்த 596 பேர் 5 தற்காலிக முகாங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அப்பிரதேசத்தில் வெள்ளத்தால் 108 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

மன்னார்

மன்னார் நகர் பிரதேச செயலர் பிரிவில் 27 குடும்பங்களைச் சேர்ந்த 85 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரும் ஒரு இடைத்தங்கல் முகாமில் தங்கியுள்ளனர்.

நானாட்டன் பிரதேச செயலர் பிரிவில் காற்றின் தாக்கத்தால் 12 குடும்பங்களைச் சேர்ந்த 56 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம்

மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் 273 குடும்பங்களைச் சேர்ந்த 708 பேர் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா

வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவில் 77 குடும்பங்களைச் சேர்ந்த 281 பேர் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டுள்ளனர்.(ம-3)

## மின்னல் தாக்கத்...

யம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

வவுனியா, மன்னார் உட்பட வடக்கு மாகாணத்தில் மழையுடன் கூடிய காலநிலை நீடிக்கும் என மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது. அத்துடன், சில பகுதிகளில் காற்றின் வேகமும் அதிகரிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வங்கக் கடலில் நிலை கொண்டுள்ள காற்றமுத்த தாழ்வுநிலை நீடிப்பதால் இலங்கை மற்றும் தென்னிந்திய கடற்பரப்பில் மழையுடனான காலநிலை நாளை மறுதினம் புதன்கிழமை வரை நீடிக்கும் என்று சர்வதேச வானிலை ஆய்வாளர்கள் எதிர்வு கூறியுள்ளனர். (ம-3)

## சர்வதேச பொலி...

அமைச்சராகக் கடமையாற்றிய ரஞ்சித் மத்தும பண்டாரவின் மீது நம்பிக்கையில்லை. தேவையேற்பட்டால் சட்டம் ஒழுங்கு அமைச்சராக தகுதியான ஒருவரை நியமிப்பேன் என்று ஐக்கிய தேசிய முன்னிணியின் குழுவினரிடம் முகத்தில் அடித்தால்போல் கூறினார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கியதேசிய முன்னணியின் குழுவொன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கடந்த வாரம் சந்தித்தது. இந்தச் சந்திப்பில் ரஞ்சித் மத்துமபண்டாரவும் பங்கேற்றார்.

பொலிஸ் அதிகாரத்தை நான் பொறுப்பேற்ற பின்னர் என்னை கொல்வதற்கான சதி முயற்சிகள் தொடர்பான விசாரணைகள் சிறப்பாக இடம்பெறுகின்றன என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதன்போது சுட்டிக்காட்டினார்.

இவ்வாறான விசாரணைகள் உரிய விதத்தில் இடம்பெறவேண்டும் என நான் தெரிவித்து வந்துள்ளேன் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

அப்போது குறுக்கிட்ட அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார, நான் விசாரணைகளை உரிய முறையில் முன்னெடுப்பேன் என தெரிவித்துள்ளார்

அவரது கருத்தால் சீற்றமடைந்த மைத்திரிபால சிறிசேன, முன்னைய அரசின் போது விசாரணைகள் உரிய முறையில் இடம்பெறவில்லை. சட்டம் ஒழுங்கு அமைச்சிற்கு பதில் பிரதமர் அலுவலகமே விசாரணைகளை கையாண்டது.

முன்னரும் நீங்கள் இந்த சட்டம் ஒழுங்கு அமைச்சராக பதவி வகித்தீர்கள். அப்போது உங்கள் வேலையை நீங்கள் செய்தீர்களா இல்லையே? பிரதமர் அலுவலகமே அதனை செய்தது என்று மத்தும பண்டாரவுக்குக் பதிலளித்தார்.

தேவைப்பட்டால் நான் தகுதிவாய்ந்த ஒருவரை அந்த பதவிக்கு நியமிப்பேன் என சிறிசேன தெரிவித்துள்ளார்.

பொலிஸ் தகவல் வழங்குனரான நாமல் குமார வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையிலேயே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் ராஜபக்சாக்கள் மீதான கொலைச் சதி வழக்கு விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## ஐக்கியத்துக்கு...

ஐக்கியத்துக்கு வழிவகுத்துள்ளதாக அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

கண்டியில் வைத்து நேற்று ஞாயிற்றுக்கிழமை ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், ஸ்ரீலங்கா மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்து அரசாங்கத்தில் இணைய இன்னுமொரு தரப்பினர் வருகை தரவுள்ளனர். தற்போது எமது அரசாங்கத்துடன் இணைந்து கொண்டவர்களும் அமைச்சுப் பதவிகளை எதிர்பார்த்து இணைந்து கொள்ளவில்லை.

எம்முடன் இணைந்து அரசியல் பயணத்தை தொடர்வதற்காகவே அவர்கள் வந்தார்கள். இவர்களுக்கு அமைச்சுப் பதவி வழங்குவது குறித்து இதுவரை தீர்மானிக்கவில்லை.

எவ்வாறாயினும், தற்போது நாட்டு மக்களுக்கு அரசியலமைப்பு தொடர்பில் சிறந்த ஒரு விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. கடந்த காலங்களில் இடம்பெற்ற சம்பவங்களினால், ஒருமுறையேனும் அரசியலமைப்பை மக்கள் வாசித்திருப்பார்கள்.

இவ்வாறான நிலையில், அமைச்சுக்களுக்கான பெயர் பட்டியலைத் தயாரிப்பது பிரதமருக்கு உரிய கடப்பாடு என்றும் அதனை இறுதி செய்யும் கடமை ஜனாதிபதிக்கு உரியது என்றும் மக்கள் அறிந்திருப்பார்கள்.

இவர்கள், இருவரும் ஒன்றிணைந்து தான் சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கு அமைச்சுப்பதவிகளை வழங்குவது தொடர்பில் இறுதித் தீர்மானத்தை மேற்கொள்வார்கள்.

வரவு - செலவுத்திட்டத்தைப் பொறுத்தவரை, மக்கள் எதிர்பாராத சலுகைகளை வழங்க நாம் தீர்மானித்துள்ளோம். மேலும், இன்றும் நாட்டில் ஒரு எதிர்க்கட்சித் தலைவர் தான் இருக்கிறார். மகிந்த தரப்பினர் வேறு கட்சிக்கு சென்றுள்ளமையால், அவர்களுக்கான சுதந்திரக் கட்சியின் உறுப்புரிமை தானாகவே இரத்து செய்யப்படும்.

அத்தோடு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்ற எம்மைப் போன்ற ஒரு கட்சி தெற்கு கட்சியொன்றுடன் இணைந்து செயற்படுவதை முக்கியமான ஒன்றாகக் கருத வேண்டும்.

அவர்கள், கடந்த காலங்களில் இவ்வாறான ஒரு கொள்கையில் இருக்கவில்லை. தற்போது, அவ்வாறு இல்லை. பாராளுமன்றில் அவர்கள் முழுமையாக நாட்டின் அரசமைப்பை பாதுகாத்தார்கள்.

நாட்டின் ஐக்கியத்துக்கும் இது முக்கியமான ஒன்றாகவே கருதப்படுகிறது. இவ்வாறான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாட்டை நாம் முழுமையாக வரவேற்கிறோம் என தெரிவித்துள்ளார். (ம-3)


பாராட்டி
வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையின்
ஆசிரியை
திருமதி
சி. புஸ்பராசா (BED)
அவர்கள் 2018ஆம் ஆண்டுக்கான மாகாண நிலை நல்லாசிரியர் விருதான "குரு பிரதீபா பிரபா" விருதினைப் பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேலும் பல உயர்வுகளைப் பெற இறைவனை வேண்டுகின்றோம்.
ஆசிரியர் சகோதரத்துவம்
யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை
(C-4810)

நீரோகா
திகதி 2018/12/23
சீட்டிழுப்பு இலக்கம் 489
துலாம் 06 17 36 56 29

கொவிசெத
திகதி 2018.12.23
சீட்டிழுப்பு இலக்கம் 1982
T 17 18 22 36

மஹஜன சம்பத
திகதி 2018/12/23
சீட்டிழுப்பு இலக்கம் 3817
C 1 5 8 7 5 4

தன நிதானய
திகதி 2018-12-23
சீட்டிழுப்பு இலக்கம் 92
K 08 14 65 67

## மீட்பு பணிக்காக...

மீட்கும் பணிகளில், இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான ஹெலி கொப்டர்கள் மற்றும் வை 12 ரக வானுர்தி கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என விமானப்படை அறிவித்துள்ளது. வடக்கு மாகாணத்தில் கடந்த சில நாட்களாகப் பெய்த அடை மழையால் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் வெள்ளத்தால் கடுமையாகப பாதிப்படைந்துள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் 400 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. மாவட்டத்தின் அனைத்துக் குளங்களும் நீரால் நிரம்பியுள்ளன. இதையடுத்து குளங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்கும் நடவடிக்கையில இராணுவத்தினரும் இளைஞர்களும் ஈடுபடுத்தப்பட்டனர்.

இந்நிலையில், வெள்ளத்தில் சிக்குண்டவர்களை மீட்கும் பணிகளில், இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டர்கள் மற்றும் வை 12 ரக வானுர்திகள் ஈடுபடுத்தப்பட்டுளளன என விமானப்படை அறிவித்துள்ளது. (ம-3)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## நிவாரணப் பொருட்களை...

பணியை மேற்கொள்வதற்கு வசதியாக யாழ் மாவட்டத்திலுள்ள முன்பள்ளி ஆசிரியர்களும் பெற்றோர்களும் நிவாரணப் பொருட்களைச் சேகரித்து ஆறுதல் நிறுவனத்தில் ஒப்படைக்க முடியும் என்றும்,

இவ் நிவாரணப் பணியில் ஈடு பட விரும்புகின்ற அன்பர்களும் இலக்கம் 51, வைமன் வீதி, நல்லூர் எனும் முகவரி யிலுள்ள ஆறுதல் நிறுவனப் பணிமனையில் நிவாரணப் பொருட்களை ஒப்படைக்கலாம் என்றும் முன்பள்ளி ஆசிரியர் தொழிற் சங்கத்தின் போசகர் சுந்தரம் டிவகலாலா தெரிவித்துள்ளார். (ம)

CNR உள்நாடு, வெளிநாடுகளுக்கான தபால், பொதிகள் விநியோக சேவை
- அதிவேக மற்றும் சிக்கன பொதிகள் சேவை
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- வீடு, அலுவலகங்களில் இருந்தவாறு அனுப்பும் வசதி
- அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தரவாதம்
- கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்குப் பரிமாற்ற சேவை



CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145 077 2931062 077 6655413
(C-4799)

ICT
A/L 2021
CLASSES START
On
28.12.2018
Friday 1.30 - 2.30 pm
Evershine Education Centre
No 123, Brown Road, Jaffna
S.Gowsigan (B.Tech - ICT)
077 378 4053
web : www.ictever.com
fb : facebook.com/everict

விசேட விலைக்கழிவு

நத்தார் தினத்தை முன்னிட்டு இன்றும் நாளையும் சீனி, மா, அங்கர் தவிர்ந்த ஏனைய பொருட்களை 3000/- ரூபாவிற்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு 10% விலைக்கழிவும் 5000/- ரூபாவிற்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு 10% விலைக்கழிவும் எமது நிறுவனத்தில் இருந்து 6km தூரத்திற்குள் வசிப்போருக்கு பொருட்கள் இலவசமாக விநியோகிக்கப்படும்.

விசேடமாக பாடசாலை



மாணவர்களுக்கான தரமான கொப்பிகள், புத்தகப்பை மற்றும் பாடசாலை உபகரணங்களுக்கும் 10% விசேட விலைக்கழிவு உண்டு.

தொலைபேசியிலும் பொருட்களை ஓடர் செய்யலாம்
(24 மணித்தியால சேவை வழங்கப்படுகிறது)
தொடர்புகளுக்கு :
SUNJEYS A to Z SUPER MART
100, ARASADY ROAD, JAFFNA.
(யாழ்.இந்து மகளிர் கல்லூரிக்கு அருகில்)
021 205 3077
(C-4811)

## கடல் அலை...

அருள்தாஸ் (வயது-46) என்ற இளம்குடும்பஸ்தரே மரணமடைந்தவராவார்.

மேற்படி குடும்பஸதர் கடற்கரைக்கு சென்று கடலில் இறங்கியபோது கடும் கொந்தளிப்பாக காணப்பட்ட கடல் அலை அவரை இழுத்துச் சென்றதாக கூறப்படுகிறது.

இதனை கண்ட அப்பகுதியில் நின்றோர் அவரை காப்பாற்றி மருதங்கேணி வைத்தியசாலையல் அனுமதிததனர். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்தார்.

இச் சம்பவம் தொடர்பாக பளை பொலிஸார் மேலதிக விசாரணையினை மேற்கொண்டுள்ளனர். (ம-60,64)

## ஜனாதிபதி...

26 முகாம்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அத்துடன், முல்லைத்தீவு பிரதேசத்தில் சுமார் 1,619 குடும்பங்களை சேர்ந்த 4,917 பேர் அளவில் 28 இடம்பெயர் முகாமகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான சுகாதார வசதிகள், உணவுமற்றும்உலர் உணவுப் பொருட்கள ஆகியவை மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர் மற்றும் தன்னார்வ அமைப்புகளினால் வழங்கப்பட்டு வ்ருகின்றன.

இலங்கை இராணுவம், கப்பற்படை மற்றும் பொலிஸார் இதன்போது விசேட ஒத்துழைப்பை வழங்கி வருவதுடன், விமானப்படையினரும் தொடர்ச்சியாக கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

வட.மாகாண ஆளுநர் அலுவலகத்தின் பணிக்குழுவினர் வெள்ளப் பெருக்கு நிலைமை நீங்கும் வரை தொடர்ச்சியாக கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதுடன், பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான சகல வசதிகளையும் வழங்குவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ம-3)

போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
அதிபர் சேவை தரம் - 3
கிரகித்தல்
பௌநந்தி
செவ்வாய், வியாழன்
பி.ப. 5.00 – 7.30
ஏனைய விடயங்கள்
வெள்ளி – சனி
9.00 – 3.00
மணி வரை
அலுவலக பணியாளர்
வெள்ளி, சனி
9.30 – 2.30
● ஏனைய பரீட்சைகளுக்கான வகுப்புக்களும் நடைபெறுகின்றன
076 688 3394
யாழ்ப்பாணக்கல்லூரி, பட்டப்படிப்புகள் பிரிவு
(C-4816)

Techno World
(வெலிங்டன் சந்தி, பெருமாள் கோவில் வீதி,யாழ்ப்பாணம்)
A/L தொழில்நுட்ப பிரிவு
2021
ஆரம்ப விழாவிற்கு வருகைதந்த அனைத்து மாணவர்களுக்கும் நன்றி
வகுப்புக்கள் ஆரம்பம்
24.12.2018 – திங்கட்கிழமை
காலை – 8.00 am
53 அனுமதிகள் மாத்திரம் உள்ளன
077 017 5346
(C-4813)

வேலை ஆட்கள் தேவை
- யாழ்ப்பாணம் அரசடி வீதியில் அமைந்துள்ள சுப்பர் மாக்கற் இல் வேலை செய்வதற்கு ஆண், பெண் இருபாலாரும் உடன் தேவை. உங்கள் சுயவிபரக்கோவையுடன் பிற்பகல் 3 மணிக்கும் 6 மணிக்கும் இடையில் கீழ் உள்ள முகவரிக்கு நேரில் வரவும்.அனுபவம் உள்ளவர்களுக்கும் மும்மொழி தெரிந்தவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்
**முக்கிய குறிப்பு:- அண்மையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.**
- AD தர வாகன அனுமதிப்பத்திரம் உடைய சாரதி தேவை. (கிராம அலுவலரின் உறுதிப்படுத்தல் கடிதத்துடன் நேரில் வரவும்.)
- வீட்டுத்தோட்ட வேலைகள் செய்வதற்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை. (தனியாகவோ அல்லது குடும்பமாகவோ தங்கியிருந்து வேலை செய்பவர்கள் விரும்பத்தக்கது.) கிராம அலுவலரின் உறுதிப்படுத்தல் கடிதத்துடன் நேரில் வரவும்.

SUNJEYS A to Z SUPER MART
No-100, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ்.இந்து மகளிர் கல்லூரிக்கு அருகில்)
(C-4811)

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK – 550 /=Kg
கனடா – 900 /=Kg
ஜேர்மனி – 700 /=Kg
நெதர்லாந்து – 700 /=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)
DELIVERY IN 3-5 DAYS
0768226240
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
V2 TRAVELS
(C-4853)

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை.
- கடலுணவு, இறைச்சி, எண்ணை வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள்,
- பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3536
நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576
சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576
(C-4800)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.12.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.